வெளியீடு 12-9-2001

Issued 12-9-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜூன் 1, 2001 - தொகுதி 3 – எண் 2

**Friday the 1st June, 2001 – Volume 3 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

[Price Rs. 3.00

D
V2K,31'Pol
Pol.3.2
222390

1–6–2001

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி 121-210

திரு. ஆற்காடு நா. வீராசாமி 121-158

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா 128, 129, 131-132, 134, 150, 155, 158-207

2. அறிவிப்பு—

குழுக்களுக்குத் தேர்வு

(அ) மதிப்பீட்டுக் குழு 210-211

(ஆ) பொதுக் கணக்குக் குழு 211-212

(இ) பொது நிறுவனங்கள் குழு 212-213

(ஈ) உரிமைக் குழு 214-215

3. அரசினர் தீர்மானம்—

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் 215

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 216

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 18, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032**

**2001 ஜூன் 1, வெள்ளிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது

சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

சொல்ல வேண்டிய செய்திகளைத் தொகுத்து வரிசைப்படுத்தி இனிதாகச் சொல்ல வல்லவரின் ஏவல் கேட்டு உலகம் நடக்கும்

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் 7 ஆம் பக்கத்தில், நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டிற்குச் சேர வேண்டிய நியாயமான பங்கினை மத்திய அரசு அளிக்கத் தவறியுள்ளதைச் சுட்டிக்காட்டி, இதுகுறித்து மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்துவோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திராவிட முன்னேற்றக்

கழகம் ஆட்சியில் இருந்தபோது அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள், இதே குரலை மத்திய அரசுக்கு எழுப்பியதோடு மட்டுமல்ல, பிரதமரை இரண்டு முறை சந்தித்து, வலியுறுத்தி, நீங்கள் அந்தப் பங்கினை மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கிறீர்களோ இல்லையோ, தமிழ்நாட்டிற்கு ஏதாவது ஒரு வகையிலே கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பிரதமரும் பரிசீலிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆறுகளை தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிற கருத்து, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உடன்பாடான கருத்தாகும்.

உள்ளாட்சி நிர்வாகத்திலே இரண்டு அடுக்கு முறைக்கு வழி செய்வதற்கும், ஊராட்சி மன்றத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கும் மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று சொல்லப்பட்டிருக்கிற கருத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்புடைய கருத்தாகும். அதுபோல ஆக்கபூர்வமான கருத்துக்கள் எவையெவை சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவற்றையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர், கிராமப்புற மாணவர்களுக்கு தொழில் கல்வியிலே இடஒதுக்கீடு 15 சதவிகிதமாக இருந்ததை 25 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருப்பதை வரவேற்றதைப்போல நானும் வரவேற்று ஒன்றை மட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையிலே ஆளுநர் உரையிலே இருக்கக்கூடிய அத்தனை செய்திகளையும், ஆளும் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையிலே 96 ஆம் பக்கத்திலே குறிப்பிடப்பட்டுள்ள அத்தனையையும் நீங்கள் இப்போதே செய்து முடிக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. யாராக இருந்தாலும் அதைச் செய்ய முடியாது என்பதை நான் நன்றாக அறிந்தவன். ஆனால் 5 ஆண்டு காலத்திற்குள்ளே அதைச் செய்து முடிப்பீர்களேயானால் நிச்சயமாக இந்த அரசாங்கத்தைப் பாராட்ட நான் தயாராக இருக்கிறேன் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அறிக்கையிலே குறிப்பாக, மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில் கடந்த 5 ஆண்டு காலத்திலே 458 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகாரிகள் செய்த தவறோ என்னவோ எனக்குத் தெரியாது. பிள்ளைபெருமாள் நல்லூரிலே மார்ச் மாத இறுதியிலேயே 330 மெகா

222390



வாட் மின்சாரம் உற்பத்தி தொடங்கி, இன்று அந்த மின் நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று நான் கேள்விப்பட்டேன். அதோடு சேர்த்துப் பார்த்தால், 788 மெகா வாட் மின்சாரம் கடந்த கால ஆட்சியிலே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதோடு, சமயநல்லூரிலே 106 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு ஆகஸ்டு மாதத்திலே அந்த மின் நிலையம் இயங்கவிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல 1993 ஆம் ஆண்டு அன்றைய அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது சில அனல் மின் நிலையங்களுக்கு M.o.U. - Memorandum of Understanding- ஒப்பந்தம் செய்தது. இந்த அறிக்கையில் மீண்டும் அவை பரிசீலிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் உறுதியாகச் சொல்கிறேன், 1993 ஆம் ஆண்டு எந்தெந்த அனல் மின் நிலையங்... இயங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டனவோ, அவற்றில் ஒன்... நாங்கள் கடந்த தி.மு.க. ஆட்சியில் ரத்து செய்யவில்லை. Srim... Lignite Corporation — Power Plant — அந்த project -ஐப் பொறுத்தவரை. 5 ஆண்டு காலத்திற்குள்ளே அவர்கள் அரசாங்கத்திடம் அணுகி அனுமதி பெறத் தவறிவிட்ட காரணத்தினால் ரத்து செய்யப்பட்டது.

முற்பகல் 10—05

அதைத் தவிர, வேம்பார் மின் திட்டம் 1873 மெகா வாட், கடலூர் மின் திட்டம் 1320 மெகா வாட், Chennai Power Corporation மின் திட்டம் 1000 மெகா வாட், Tri Shakthi மின் திட்டம் 525 மெகா வாட், அதைப்போல, தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்தினுடைய மின் திட்டம் 525 மெகா வாட் ஆகிய இந்த மின் திட்டங்களுக்கு எல்லாம் Power Purchase Agreement செய்யப்பட்டு, அதை உற்பத்தி செய்தால் அந்த மின்சாரத்தை வாங்கக்கூடிய சக்தி தமிழக அரசிற்கோ அல்லது மின்சார வாரியத்திற்கோ இல்லை. கடந்த கால ஆட்சியிலே ஒப்பந்தம் செய்து, ஏறக்குறைய 7500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று திட்டமிட்டார்கள். அதிலே ஏறக்குறைய 2000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான அனுமதியை வழங்கி அதிலே Videocon Power Project மட்டும், குறிப்பிட்ட காலத்திலே அந்தப் பணியை மேற்கொள்ளாத காரணத்தினாலே ரத்து செய்ய மின் வாரியம் முன்வந்தபோது, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.

அதைத் தவிர, அந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே கடந்த காலத்திலே கொண்டுவரப்பட்ட திட்டங்கள்தானே, அதனை நாம் ஏன் நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணாமல், அவற்றிற்கெல்லாம் ஒப்புதல் அளித்திருந்தாலும், 5000 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்தால், அதை வாங்கக்கூடிய சக்தி நமக்கில்லை; ஏனென்றால், அதை வாங்க வேண்டுமென்றால், ஆண்டு ஒன்றுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் நமக்குத் தேவை. அது ஒன்று. இரண்டாவது, அந்த 5000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்கிற நேரத்திலே அது தமிழ்நாட்டிற்குத் தேவையா என்றால், அதுவும் இல்லை. ஆண்டு ஒன்றுக்கு நம்முடைய தேவை 500 மெகா வாட் தான் அதிகமாகிக் கொண்டு போகிறதே தவிர, அதற்கு மேலே நமக்குத் தேவையும் இல்லை. எனவே, அப்படி உற்பத்தி செய்கிற மின்சாரத்தை நம்மால் வாங்க முடியாது என்ற காரணத்தால் அவர்களை எல்லாம் மின் வாரியம் அழைத்து, இப்போது மத்திய அரசாங்கத்திலே Power Trading Corporation என்று ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது, அவர்களைப் போய் நீங்கள் அணுகுங்கள், அவர்கள் வாங்கிக் கொண்டால் நாங்கள் அனுமதி வழங்குகிறோம் என்று சொல்லி, அதற்கான கடிதங்களும் தந்திருக்கிறோம். அப்படிச் சொல்கின்ற நேரத்திலேயே, நீங்கள் Power Trading Corporation—க்கு மின்சாரத்தை விற்பதாக இருந்தாலும்கூட, ஏதாவது ஒரு காலகட்டத்திலே தமிழ்நாட்டிற்கு மின்சாரம் தேவைப்பட்டால் எங்களுக்குக் கொடுத்து போகத்தான் மிச்சத்தை நீங்கள் அங்கே விற்க வேண்டுமென்ற நிபந்தனையையும் சொல்லியிருக்கிறோமே தவிர, அனைத்தையும் அவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று அந்தத் திட்டத்திலே நாங்கள் சொல்லவில்லை என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நேற்று மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய சகோதரி யசோதா அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். பூண்டி நீர்த்தேக்கத்திலே, சென்னை மருத்துவமனைகளிலே இருக்கிற துணிகள், அழுக்குத் துணிகள் மற்ற எல்லாத் துணிகளும் துவைக்கப்படுவதாகப் பத்திரிகைகளிலே செய்தியைப் பார்த்தோம், ஆனால், அன்றையதினம் அந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்று தெரியவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். உடனடியாக நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை பதில் சொல்லக் கேட்டுக்கொண்ட காரணத்தினாலே மொத்தக் குறிப்புகளையும் நான் சரியாகப் படிக்க வேண்டுமென்று, கொறடாவை அனுப்பி, அந்தச் சட்டமன்ற நிகழ்ச்சியினுடைய குறிப்புகளைப் பெற்று, படித்துப் பார்த்தேன்.





பிரச்சினை எதுவாக இருந்தாலும், பதில் அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த கால தி.மு.க. ஆட்சியில் இப்படிப்பட்ட செய்திகள் எல்லாம் வருகின்ற நேரத்திலே முதலமைச்சரும் படித்துவிட்டு எங்களைக் கேட்பார். நாங்களும் படித்துவிட்டு அதிகாரிகளைக் கேட்போம். ஆனால், இந்தச் செய்தி உண்மையா என்றால் இல்லை. ஒவ்வொரு மருத்துவமனையிலேயும் துணிகளை வெளுப்பதற்காக ஒரு Washing Machine வாங்கி வைத்திருக்கிறோம். அங்கேதான் அவற்றைத் துவைக்கிறார்களே தவிர, சென்னையிலே இருந்து பூண்டி ஏரியிலே போய் துவைக்க வேண்டிய அவசியம் எந்த மருத்துவமனைக்கும் ஏற்படவில்லை என்பது மட்டுமல்ல, அங்கே இருக்கக்கூடிய பேண்டேஜ் துணிகள், needle போன்றவற்றையெல்லாம் எரிக்க வேண்டுமென்று ஏற்கெனவே மத்திய அரசாங்கம் வற்புறுத்தி, உயர் நீதிமன்றமும் ஓர் ஆணை பிறப்பித்து அதற்காக Incinerator ஒன்றைப் பொருத்த வேண்டும் என்று நடவடிக்கைகளை எடுத்தோம். ஆனால், நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய மாசுக் கட்டுப்பாடு இலாகாவினர், இப்போது அதை நீங்கள் இயக்கக் கூடாது, ஏனென்றால், அவற்றை எல்லாம் இங்கே எரித்தால், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கும் என்று சொல்லி, தடை விதித்திருக்கிறார்கள். எனவே, பொதுவாக சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய இப்படிப்பட்ட கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கும், அதை முழுவதுமாக எரிப்பதற்கும் மாநகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்களும் ஒரு நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் இப்போது அந்த மருத்துவக் கழிவுகள் மாநகராட்சி லாரிகள் மூலமாக பெருங்குடி, கொடுங்கையூர் போன்ற இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை மட்டும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் கெட்டிக்காரர், 15 நாட்களிலேயே இந்த இலாகாவைப்பற்றி நன்றாக அறிந்து வைத்திருக்கிறார் என்றே நான் கருதுகின்றேன். எனவேதான், அவர் பேசுகிறபோது, கடந்த கால ஆட்சியிலே அமைச்சராக இருந்த நான் அதிலே கவனம் செலுத்தவில்லை, எங்களுடைய தலைவரையே சுற்றி வந்தேன் என்றெல்லாம் சொன்னார்கள். என்னுடைய தலைவரைச் சுற்றி வருவது என்பது அப்படியொன்றும் பாவமான காரியம் அல்ல. என்னைப் பொறுத்தவரையில் அது பெருமைக்குரிய காரியம் என்றுதான் நான் கருதுகிறேனே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) அதையொன்றும்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2001 ஜூன் 1

தவறாகக் கருதவில்லை. ஆனால் அப்படிச் சுற்றிய காரணத்தினால் என்ன நடந்தது என்று கேட்டால்— மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்— தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 8,600 துணை சுகாதார நிலையங்களாக இருந்தாலும், 1,400—க்கு மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தாலும், 26 மாவட்ட மருத்துவமனைகளாக இருந்தாலும், 162 தாலுகா மருத்துவமனைகளாக இருந்தாலும், அதைப்போலவே 65 Non-taluk மருத்துவமனைகளாக இருந்தாலும், அவற்றிற்கெல்லாம் என்னென்ன தேவைகளோ அந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நான் நடவடிக்கை எடுத்திருக்கின்றேன்.

உதாரணத்திற்குச் சொல்கின்றேன். கடந்த கால ஆட்சியில் 1991—லேயிருந்து 1996 வரையில் 70 ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் கட்டப்பட்டிருந்தன. நான் அதைக் குறையாகச் சொல்லவில்லை. ஏன் என்று சொன்னால் அதற்கு முன்புகூட ஒவ்வோர் ஆட்சியிலேயும் 50, 40 என்றுதான் கட்டியிருக்கிறார்கள். ஆனால் நான் அதை முதலமைச்சரிடத்திலே எடுத்துச் சொன்னவுடனே எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் கிராமப்புறங்களிலே போய்ப் பணியாற்றும்போது சரியான கட்டடம் இல்லாமல், வசதிகள் இல்லாமல், எங்கேயாவது பாழடைந்த மண்டபங்களிலே போய்ப் பணியாற்றுங்கள் என்று சொன்னால் எப்படிப் பணியாற்றுவார்கள், எனவே, அவர்களுக்கு முறையான கட்டடம் கட்டிக்கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியபோது, எவ்வளவு கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று கேட்டார்கள். 652 கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று சொன்னேன். எவ்வளவு செலவாகும் என்று கேட்டார்கள். 50 கோடிக்கும் மேலாகும் என்று சொன்னேன். உடனடியாக நிதி இலாகா ஒப்புதல் தந்து, இரண்டு ஆண்டு காலத்திலே கட்டி முடியுங்கள் என்றார்கள். ஐந்தாண்டு காலத்திலே—நான் மகிழ்ச்சியோடு சொல்கிறேன்— 650 ஆரம்ப சுகாதார நிலையங்கள், புதிய நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம் கட்டியதைப்பற்றிச் சொல்கிறார்கள். நாங்கள் அதை மறுக்கவில்லை. ஆனால், அவர் கட்டிய கட்டடத்தில் மருத்துவக் கருவிகள் வைக்கப்படவில்லை. அதற்குரிய பணியாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய குற்றச்சாட்டு—buildings were constructed, but they were not put in use—அதுதான் எங்களுடைய வாதம். (குறுக்கீடு) நான் சொல்லி



2001 ஜூன் 1] [திரு. செ. செம்மலை]

முடித்துவிடுகிறேன். முறையாக Part II Scheme—லே அந்த நிதி வழங்கப்பட்டிருந்தால், கட்டடத்துக்கு, அடுத்து பணியாளர்களுக்கு, உபகரணங்களுக்கு, ஆக மூன்றுக்கும் provision கொடுத்துவிடுவார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் முதலமைச்சரிடம் கட்டடத்திற்கு மட்டுமே பணம் கேட்டு வாங்கி, செலவழிக்கப்பட்டுவிட்டது. கட்டடம் கட்டி இரண்டு ஆண்டுகளாகியும் அந்தக் கட்டடங்கள் பயன்படுத்தப்படவில்லை. அதற்கான பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. அதற்கான மருத்துவக் கருவிகள் எதுவும் வாங்கப்படவில்லை. ஒரு பைசாவுக்குக்கூட வாங்கவில்லை. அதை மறுக்கமாட்டார் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கெல்லாம் விவரமாகப் பதில் சொல்ல நான் தயார். மக்கள் நல்வாழ்வுத் துறை மானியம் நிச்சயமாக வரும். எந்த அளவிற்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டார்கள், எந்த அளவிற்கு தனியாரிடத்திலேகூட பராமரிப்புக்காக மருத்துவமனைகள் ஒப்படைக்கப்பட்டன, எந்த அளவிற்கு மருந்துகள் வாங்கப்பட்டன, கருவிகள் வாங்கப்பட்டன என்ற விவரங்கள் பூராவும், மாண்புமிகு அமைச்சரவர்கள் கடந்த ஆண்டு மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின்மீது நடைபெற்ற விவாதத்தைக் கொஞ்சம் எடுத்துப்பார்த்தால் புரிந்துகொள்வார்கள். சில இடங்களிலே மருத்துவர்கள் இல்லை. இந்த ஆட்சியிலும் சொல்கிறேன். 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயும், எல்லா மருத்துவமனைகளிலும் ஐந்து ஆண்டுகளில் மருத்துவர்களை நியமிப்பது என்பது கடினம். நாம் நியமிக்கிறோம். சில மருத்துவர்கள் போக மறுக்கிறார்கள். குறிப்பாக, மலைப் பகுதிகளிலே எவ்வளவுதான் நாம் முயற்சி செய்து மருத்துவர்களை நியமித்தாலும் போய்ச் சேர்ந்துவிட்டு, பத்து நாட்களிலே அவர்கள் வேறு இடத்திற்கு மாற்றம் கேட்கிறார்களே தவிர, விடுமுறையில் போய்விடுகிறார்களே தவிர, அங்கே பணியாற்றுவது இல்லை, நாங்கள் அதற்காக எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்தோம். ஆனாலும் அந்தக் குறை இருந்தது. நான் இல்லை என்று மறுக்கவில்லை.

மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலமாக வாங்கப்பட்டு, மாவட்டந்தோறும் இருக்கக்கூடிய கிடங்குகளுக்கு Internet மூலமாக வசதிகள் செய்து, அந்த மருந்துகளை அனுப்பிக் கொண்டிருந்தோம். தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திலே மட்டும்

அல்ல, மாவட்ட மருத்துவக் கிடங்குகளிலே இருக்கக்கூடிய மருந்துகளின் அளவைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றாலும்கூட இங்கேயிருந்து அமைச்சர் தெரிந்துகொள்ளலாம், அமெரிக்காவிலேயிருந்தும் தெரிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட வசதிகளை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் செய்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10—15

அதுமட்டும் அல்ல. Children's Hospital—ஐ நம்முடைய மாண்புமிகு அமைச்சர் போய்ப் பார்க்க வேண்டும். இந்தியாவிலேயே அப்படிப்பட்ட ஒரு மருத்துவமனை கிடையாது. நான் சொல்லவில்லை, மத்திய அமைச்சர் சொன்னார். நான் டெல்லிக்குப் போய், ஜப்பான் நாட்டு தூதரகத்தோடு தொடர்பு கொண்டு இந்த மருத்துவமனைக்கு ஏதாவது உதவிகள் செய்ய வேண்டுமென்று கேட்டபோது, 21 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கான கருவிகளை இலவசமாகக் கொடுத்தார்கள். அன்றைய செயலாளராக இருந்த திரு. ராமகிருஷ்ணன் அவர்கள் நேராக ஜப்பான் நாடு சென்று ஒப்பந்தம் செய்து அதைப் பெற்று வந்தார்கள். அமைச்சருக்கு நேரம் இருக்கும்போது போய்ப் பார்த்து, அது சரியாக இயங்கவில்லை, அந்தக் கருவிகள் இல்லை என்று சொன்னால் அவர்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலத்தில்தான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபோதுதான், Internet வசதி செய்து கொடுக்கப்பட்டது என்றார். மருத்துவத் துறைக்கும், மருத்துவமனைகளுக்கும் வெளிநாடு களிலிருந்துகூட தொடர்பு கொள்ளக்கூடிய அளவிற்கு Internet வசதி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் செய்து கொடுக்கப்பட்டது என்று சொன்னார். ஏற்கெனவே 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனது தலைமையில் ஆட்சியில் இருந்தபோதே எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் இந்த Internet வசதி செய்து கொடுக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் முழுவதும் தொடர்புகொள்ளக்கூடிய வசதி அப்போதே செய்யப்பட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் எதைச் சொன்னாலும் நான்



அதை மறுக்கிறேன் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. ஆனால், கடந்த கால ஆட்சியிலேதான் Medical Centre for Boston University — அமெரிக்காவிலுள்ள அந்த நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் Tele-medicine ஒன்றை நிறுவியிருக்கிறது. கீழ்ப்பாக்கத்தில் அது பொருத்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆரம்பித்து வைத்ததை அவர்கள் விரிவுபடுத்தியிருக்கலாம். ஆனால் இந்த Internet தொடர்பு கொடுப்பது என்ற பணிகளைத் தொடங்கி வைத்தது எங்கள் ஆட்சியில்தான் என்பதை மீண்டும் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சியிலே ஏற்பாடு செய்திருந்தால் மகிழ்ச்சி. நான் சொல்வது Tele-medicine. கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலே இருக்கக்கூடிய ஒரு நோயாளிக்கு எப்படிப்பட்ட அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று முடிவு செய்வதற்கு இங்கே இருக்கக்கூடிய மருத்துவர்களாலே முடியவில்லை என்றால் அடுத்த வினாடியே அமெரிக்காவோடு தொடர்பு கொண்டு அங்கே இருக்கின்ற மருத்துவர்களை அணுகி, அவர்களுடைய அறிவுரை பெற்று, இங்கே அறுவைச் சிகிச்சை செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருக்கின்றன.

அதைப்போல கர்ப்பிணிப் பெண் தன்னுடைய வயிற்றிலே இருக்கக்கூடிய சிசு எப்படி இருக்கிறது என்று தெரிந்துகொள்வதற்காக தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு தாலுகா மருத்துவமனையிலும் Ultrasound Sonogram என்ற ஒரு கருவி வாங்கித் தரப்பட்டிருக்கிறது. பிறக்கின்ற குழந்தைகள் எடை குறைவாகப் பிறக்குமானால் அந்தக் குழந்தைகள் இறந்துவிடக் கூடாது என்பதற்காக Baby Warmer என்ற ஒரு கருவி ஒவ்வொரு மருத்துவமனையிலும் வாங்கித் தரப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட பல திட்டங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறையிலே செய்து தரப்பட்டிருக்கின்றன என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் NABARD பற்றி எல்லாம் பேசினார்கள். நான் நீண்ட விளக்கம் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான பதிலைச் சொல்லப் போவதாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2001 ஜூன் 1

ஆட்சியிலே எதிர்க்கட்சி உறுப்பினர்களும், விவசாயச் சங்கங்களும் வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டபோது அப்போது முந்தைய முதலமைச்சர் சொன்னதெல்லாம், 1994 ஆம் ஆண்டு தமிழகத்திலே இருந்த அரசு NABARD-உடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தத்தின்படி வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய முடியாத ஒரு சூழ்நிலையிலே இருக்கிறோம் என்றுதான் சுட்டிக்காட்டியுள்ளாரே தவிர, முதலமைச்சர் அதிலே கையெழுத்துப் போட்டார் என்று எங்கேயுமே குறிப்பிடவில்லை. உதாரணத்திற்கு நான் இதைப் படிக்கிறேன்.

"State Government notes the consent of NABARD about need for smooth recycling of funds, i.e. loans of Co-operative Banks through proper recoveries. It will take appropriate steps to promote the recovery climate and recovery. It also notes that NABARD's support will not be available to District Central Co-operative Banks and Tamil Nadu State Co-operative Banks in the State, if any interest loan waiver is announced across the Board or any steps interfering with the recovery process of Co-operative Banks are initiated." இப்படி ஓர் ஒப்பந்தம் செய்துகொண்ட காரணத்தினாலேதான்......

முற்பகல் 10—20

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NABARD ஒப்பந்தத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். நான் நேற்றையதினம் பேசுகிறபோது தெளிவாகச் சொன்னேன். மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெளிவாகவே நேற்றையதினம் இங்கே அவையிலே பதிலை அளித்தார்கள். இந்த அவையில் கடந்த ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பேசுகிறபோதெல்லாம் முன்னாள் முதலமைச்சர் அவர்களும் சரி, கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு முன்னாள் அமைச்சர் கே.என். நேரு அவர்களும் சரி, மற்ற அமைச்சர்களும் சரி, திரும்பத் திரும்பச் சொன்னது, NABARD வங்கியோடு ஒப்பந்தம் செய்துகொண்ட காரணத்தினாலேதான், அண்ணா தி.மு.க. ஆட்சியினாலேதான் இந்தப் பாதிப்பு என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இதே கருத்தைத்தான் முதலமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரும் இதே கருத்தைத்தான் சொல்கிறார். ஆனால், இதிலே



2001 ஜூன் 1] [பேரவைத் தலைவர்]

என்ன பிரச்சினை என்றால் முதலமைச்சர் அவர்கள் நேரடியாக எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்ன கருத்தைத்தான் முதலமைச்சர் அவர்கள் மறுத்தார்கள். அதற்குத்தான் நம்முடைய உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகிறபோது முதலமைச்சர் அவர்கள் எழுதிக் கொடுத்ததாக அவர்கள் சொல்லவில்லை, அரசு ஒப்பந்தம் போட்டுக்கொண்டது என்று சொல்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அத[illegible]க்கும் சொல்வார்கள். அமருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தயவுசெய்து, பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையை நாங்கள் சொல்லியாக வேண்டும்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ஆற்காடு வீராசாமி விளக்கம் சொல்கிறார். உட்காருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தெளிவாகச் சொல்கிறேன், நான் முதலமைச்சர் கையெழுத்துப் போட்டதாகச் சொல்லவேயில்லை. அப்படி இருக்கும்போது—

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்புகளையே எடுத்துப் பார்க்கலாம். ஏற்கெனவே முந்தைய ஆட்சிக் காலத்தில் அன்றைய முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பும்போதெல்லாம் விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும், வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்கும்போதெல்லாம், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா NABARD-க்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டார், அதில் கடன்களையும், வட்டியையும் தள்ளுபடி செய்வதில்லை என்று அவர் ஓர் உத்தரவாதம் அளித்திருக்கிறார் என்று அவர் திரும்பத் திரும்பச் சொல்லி, அது அவைக் குறிப்புகளிலே பதிவாகியிருக்கிறது. இந்த விவாதம் நடைபெறும்போதுகூட முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்களும், முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதே கருத்தைத்தான் இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் நேற்று சற்று அவசரப்பட்டுவிட்டேன். என்னுடைய விளக்கத்தை இன்று சொல்லியிருக்கலாம். ஆனால், பாதி விளக்கத்தை நேற்றே

சொல்லிவிட்டேன். இப்படி எந்தக் கடிதத்தையும் நான் எழுதிக் கொடுக்கவில்லை என்று நேற்றே சொல்லிவிட்டேன். அதன்பிறகு, அவர்கள் உண்மை விவரத்தைப் பெற்று, இன்றைக்கு இந்த விளக்கத்தை அளித்துக்கொண்டிருக்கிறார்கள். சொல்லவே இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் NABARD-க்கு அப்படி எழுதிக் கொடுத்துவிட்டார் என்று, கடந்த காலத்திலே அன்றைய முதலமைச்சர் அவர்கள் பேசியிருந்தால் அது தவறு என்று தாங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்கிற விளக்கத்தை மட்டும்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறார் அவர்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சருடைய முன்னிலையில் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டபோது அவர் மும்பையில் NABARD தலைமை அதிகாரியிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, ஏற்கெனவே, அதற்கு ஓர் ஒப்பந்தம் தமிழக அரசால் ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால், நாங்கள் அந்த ஒப்பந்தத்தை மீறி இப்போது தர இயலாது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டது என்பதற்கும், முதலமைச்சர் எழுதிக் கொடுத்துவிட்டார் என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலத்தில் இந்த அவையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் இதைப் பற்றிப் பேசுகின்றபோது, அவரைப் பார்த்து அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், நாங்கள் என்ன செய்ய முடியும், உங்கள் தலைவி இப்படி ஒரு கடிதத்தை NABARD-க்கு எழுதிக் கொடுத்துவிட்டார் என்றெல்லாம் இந்த அவையிலே பேசியிருக்கிறார்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கத்தை அவர் சொல்வார். (குறுக்கீடு) பேசுகின்ற உறுப்பினர் விளக்கத்தைச் சொல்கிறார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நீங்கள் பேசுகின்ற வாய்ப்பு வரும்போது சொல்லலாம். உங்கள் உறுப்பினர்தான் விளக்கம் சொல்கிறார் (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள், கடந்த காலத்திலே முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்கிறார்கள்.

முற்பகல் 10—25

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே கடந்த முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, கழகத்தின் சார்பாகப் பேசும்போது இந்தப் பிரச்சினையை எழுப்பினேன். அப்போதுகூட, முன்னாள் முதலமைச்சர் உட்பட இங்கிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்கூட, இன்னும் சொல்லப் போனால், கடுமையான வார்த்தையைப் பயன்படுத்தி, உங்களுடைய தலைவிதான் இதற்குக் காரணம், நீங்களும் இப்படிப் பேசலாமா, எப்படி நீலிக்கண்ணீர் வடிக்கிறீர்கள் என்று கேட்கவில்லையா? உங்களுடைய தலைவிதான் NABARD வங்கிக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்று நீங்களே பதில் அளித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் சொல்லட்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது, இப்போது இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்திலே, எப்படியெல்லாம் கருணாநிதி ஆட்சியில் நடைபெற்றது என்று சொல்கிறார்களோ, அப்படி அந்தக் காலத்தில் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றுதான் சொல்லப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்

சொன்னதைப்போல, முதலமைச்சரே கையெழுத்துப் போட்டிருக்கிறார் என்று சொல்லியிருந்தால் அது உள்ளபடியே வருத்தப்பட வேண்டிய ஒன்றுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது சொல்லப்பட்டது எல்லாம், எப்போதுமே கருணாநிதி ஆட்சியிலே நடைபெற்றது என்று சொல்வதைப்போல, அந்த அம்மையாருடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது என்று சொல்லியிருப்பாரே தவிர, அவர் கையெழுத்துப் போட்டார் என்று சொல்லியிருந்தால் நானே தவறு என்று ஒத்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னபோதெல்லாம்கூட, 1999 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் அதிகாரிகளையெல்லாம் NABARD-க்கு அனுப்பி தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டுமென்று கேட்டபோது, மறுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் சொன்ன ஒரு யோசனை, ஊக்கத் தொகை என்று அரசாங்கத்திலிருந்து ஏதாவது சில சதவிகிதத்தைக் கொடுங்கள், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்ன காரணத்தினாலேயே முதலாண்டு 6-1/4 சதவிகிதம் — அனைத்துக் கடன்களையும் செலுத்திவிட்டால் அபராத வட்டியிலே 6-1/4 சதவிகிதத்தை அரசாங்கமே செலுத்தும் என்றும், அடுத்த ஆண்டு 7 சதவிகிதம் அரசாங்கம் செலுத்தும் என்றும் சொல்லி, ஒவ்வோர் ஆண்டும் 20 கோடி, 27 கோடி ரூபாய் அரசாங்கக் கஜானாவிலிருந்து விவசாயிகளுக்கு அந்தப் பணத்தைச் செலுத்தித்தான் அந்தச் சலுகைகளையும் பெற முடிந்தது என்பதை இந்த அவைக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எதுவுமே செய்யாததைப் போன்ற ஒரு தோற்றத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே ஏற்படுத்தினார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊக்கத் தொகை, விவசாயிகளுக்குக் கொடுப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். அந்தத் திட்டத்தையும் முதன் முதலில் செயல்படுத்தியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். 1991—லிருந்து 1996 வரையிலான ஆட்சிக் காலத்தில் நாங்கள்தான் முதன்முதலில் இதைச் செய்தோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, செய்தது எந்த அரசாங்கமாக இருந்தாலும், அது விவசாயிகளுக்குப் போய்ச் சேரப் போகிறதே தவிர, வேறு யாருக்கும் போய்ச் சேரப் போவதில்லை. எனவே, நாங்களும் செய்தோம், நீங்களும், செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அதை மறுக்கவில்லை.

அதேநேரத்தில், விவசாயிகளுக்கு, நாங்கள் முன்னால் எதையுமே செய்யாததைப்போல ஒரு தோற்றத்தை இந்த அவையிலே நான்கு நாட்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஏற்படுத்தினர். முதன்முதலிலே, இந்தியாவிலே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அறிவித்தது கலைஞர் அவர்கள்தான். 1995—96—லேயே நெல் கொள்முதல் குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகம் ரூ.360/- ஆக இருந்தது. சன்ன ரகம் ரூ.370/- ஆக இருந்தது. 1—9—2000 முதல் குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகம் ரூ.510/- என்றும், சன்ன ரகம் ரூ.540/- என்றும் விலையை உயர்த்திக் கொடுத்ததும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லை வாங்குவதற்கு ஆள் இல்லாத சூழ்நிலை உருவாகக் கூடாது என்பதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். 1995—96—லே 2.45 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், கழக ஆட்சியிலே 1997—98—லே விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லை அரசாங்கமே வாங்காவிட்டால் யார் வாங்குவார்கள் என்பதையெல்லாம் விவாதித்து, 16.78 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 1998—99—லே 11.81 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 1999—2000—லே 12.13 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆக இதையெல்லாம் கொள்முதல் செய்ததற்குக் காரணம், விவசாயிகளுடைய குறைகளைப் போக்க வேண்டும் என்பதற்காகத்தானே தவிர, வேறு ஒன்றும் அல்ல.

அடுத்து, ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதை மிகவும் வரவேற்கிறேன். ஆனால், அந்தத் திட்டத்தையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தளவுக்கு நிறைவேற்றியிருக்கிறது என்று கேட்டால், 1996—97—லிருந்து 2000—2001 வரையிலான கால அளவில் ஒன்பது லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் பயன் அடைந்தோரில் 3 லட்சத்து 3000 பேர் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், 10794 பேர்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2001 ஜுன் 1

பழங்குடியின வகுப்பைச் சார்ந்தவர்கள், மற்றவர்கள் எல்லாம் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்.

முற்பகல் 10—30

அதுமட்டுமல்ல, கழக ஆட்சியிலே நகரத்திலே இருக்கக்கூடிய குடிசைவாழ் மக்களுக்குப் புதியதொரு திட்டத்தை அறிவித்து, கல்நார் தகடுகளாலான கூரை ஒன்றை உருவாக்கி, அதிலே சுவர் வைத்து வீடு கட்டி, கதவு வைத்துத் தரவேண்டுமென்று முடிவு செய்து 31—3—2000 வரை 26 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலே 21329 வீடுகள் கட்டிக் கொடுத்தது மட்டுமல்ல, 39 கோடி ரூபாய் செலவிலே 26 ஆயிரம் குடும்பங்களுக்கு இப்படிப்பட்ட வீடுகள் கட்டும் பணியும் இப்போது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதுபோலவே, காவல் துறையினருக்கு 348 கோடி ரூபாய் செலவில் 12102 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

இதுதவிர, உள்ளாட்சித் துறையின் சார்பிலே, கடந்த 5 ஆண்டுகளிலே 843 கோடி ரூபாய் செலவிலே 2,91,551 கான்கிரீட் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு 2,60,654 வீடுகள் மார்ச் மாதத்திற்குள்ளாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட திட்டங்களை வரவேற்கின்ற அதேநேரத்தில் கடந்த ஆட்சியிலேயும் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படுகின்ற இன்றியமையாப் பொருட்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த ஆட்சியாக இருந்தாலும் இதிலே நாம் அதிகமாக கவனத்தைச் செலுத்துகிறோம். மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். எவ்வளவு நல்ல அமைச்சரை அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளச் செய்தாலும், அதிகாரிகள், கீழே இருக்கக்கூடிய ஊழியர்கள் எந்த அளவுக்கு ஒத்துழைக்கிறார்கள் என்பதைப் போகப்போக இந்த அரசும் உணர்ந்துகொள்ளும் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால், அந்த உணவுப் பொருளை வழங்குவதிலே சில ஊழியர்கள் ...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் இந்தத் துறையைப் பற்றி எங்களுக்கு அறிவுரை சொல்லும்போது, நடுத்தர மக்களும், ஏழையெளிய மக்களும் பெரிதும் நம்பியிருக்கின்ற இந்தத் துறையை சாதாரண மக்களுக்குப் பயன்படுகின்றவண்ணம் சிறப்பாகக் கவனித்திட வேண்டும், சென்ற ஆட்சிக் காலத்திலே, 5 ஆண்டுகளிலே இந்தத் துறை சீரழிந்திருக்கிறது, நிர்வாகச் சீர்கேட்டினால் ஏழையெளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆகவே, தவறுகளை எல்லாம் கண்டறிந்து 99 சதவீதம் என்று சொல்லமாட்டேன், 100 சதவீதம் முழுமையாக, சரியாகச் செய்து 100 சதவீதமும் மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்று எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அந்த அறிவுரையின் அடிப்படையில், புரட்சித் தலைவியின் ஆலோசனையின் அடிப்படையில், சென்ற ஆட்சியில் நடைபெற்ற சீர்கேடுகளை எல்லாம் ஒழுங்குபடுத்தி இப்போது இந்தத் துறை சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சிகளை புரட்சித் தலைவியின் அரசு எடுத்திருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 ஜுன் 1] [திரு. இரா. விசுவநாதன்]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய முதலமைச்சரும் அப்படித்தான் அறிவுரை சொன்னார். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தத் துறையிலே இருக்கக்கூடிய குறைபாட்டைச் சொல்லுகிறேனே தவிர, உங்களுடைய ஆட்சியைப் பற்றியோ, அமைச்சரைப் பற்றியோ நான் சொல்லவில்லை. உள்ளபடியே நீங்கள் 5 ஆண்டு காலத்திலே இந்தக் குறைபாடுகளைத் தீர்த்து வைப்பீர்களானால், உங்களுக்குப் பாராட்டுக் கூட்டத்தை நானே நடத்தத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) என்ன தவறைச் சொல்லிவிட்டேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் உட்கார வேண்டும். உங்களுக்குப் பாராட்டுக் கூட்டம் போடுவேன் என்றுதான் சொல்லுகிறார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அந்தத் துறையிலே இருக்கக்கூடிய குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட முற்பட்டேனே தவிர, அங்கே இருக்கின்ற ஊழியர்கள் எந்த அளவுக்கு நமக்கு ஒத்துழைப்புத் தராமல் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத் தெரிவித்தேனே தவிர, வேறு ஒன்றும் அல்ல. அதுமட்டுமல்ல, 1700 கோடி ரூபாய் உணவு மானியத்திற்காக மட்டும் இந்த ஆண்டு நிதியை கலைஞர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், மத்திய அரசாங்கம் அரிசியினுடைய விலையை

உயர்த்திக் கொண்டே போயிற்று. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வறுமைக் கோட்டுக்குக்கீழே இருப்பவர்களானாலும் சரி, மேலே இருப்பவர்களானாலும் சரி, யாராக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு கிலோ அரிசி 3 ரூபாய் 50 காசு என்று நிர்ணயித்த காரணத்தால் அந்த இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இது இந்தியாவிலே தமிழ்நாட்டைத் தவிர, வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பதையும் இந்த அவைக்கு நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, இந்த அவையிலே தகவல் தொழில்நுட்பம் குறித்து மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் தகவல் தொழில்நுட்பவியல் குறித்து கடந்த கால ஆட்சியில் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னால், மனித சமுதாயத்தின் சகல துறைகளும், ஒவ்வொரு பிரிவும், தொழில் வளர்ச்சியின் தகவல் தொழில்நுட்பத்தால், குறிப்பாக, 'e' என்ற ஓரெழுத்து மந்திரத்திலே பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதை உணர்ந்து, e-mail, e-commerce, e-value, e-medicine, e-stock, e-education என்று ஒவ்வொரு பிரிவிலேயும் நம்முடைய மாநிலம் முன்னேற வேண்டும் என்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் ஒவ்வோராண்டும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்பான கல்வியைப் பெற்று வெளியேவரும் பொறியியல் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் படித்து வெளியேவரும் 23,000 பொறியியல் பட்டதாரிகளில் 13,000 பேர் தகவல் தொழில்நுட்பம் படித்த மாணவர்களாக இருக்கிறார்கள். இன்றைய அளவில் தமிழகத்தில் 22,000 பேருக்கு மேலாக மென்பொருள் நிபுணர்கள்— Software Professionals — பணியாற்றி வருகின்றனர். 1998 அக்டோபர் முதல் 1999 அக்டோபர் வரையில்...

முற்பகல் 10—35

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது software engineering பற்றியும், எந்த அளவிற்கு மனித வள மேம்பாடு நம்முடைய தமிழகம் அடைந்திருக்கிறது என்பதைப் பற்றியும் சொன்னார்கள். இதற்கு அடிப்படையான காரணமே நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள்தான். புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே Self-financing Engineering Colleges என்ற concept-ஐக் கொண்டுவந்து, இவ்வளவு பொறியியல் கல்லூரிகள் வந்ததன் காரணமாகத்தான் இந்த



அளவிற்கு மனித வள மேம்பாட்டைச் செய்ய முடிந்தது. ஆனால், இத்தகைய Self-financing Engineering Colleges வேண்டாம் என்று ஒவ்வொரு முறையும் இவர்களுடைய தலைவர் அவர்கள், இது வியாபாரத்தனமாகிவிட்டது, வேண்டாம் என்று ஒவ்வொரு முறையும் தடுத்து, பேசிக் கொண்டிருந்தவர். ஆகவே, இதற்கெல்லாம் பெருமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தது. அதற்குப் பின்னர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் 1991—96ல் பல்வேறு இன்ஜினியரிங் கல்லூரிகள் வந்தன. அதன் காரணமாகத்தான், இவர் சொல்வதுபோல 24,000 மாணவர்கள் இன்ஜினியர்களாக வெளியே வருகின்றனர். ஆகவே, அந்தப் பெருமைக்கெல்லாம் நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் காரணம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைக்கெல்லாம் மாண்புமிகு எம்.ஜி.ஆரோ, இப்போதுள்ள முதலமைச்சரோ காரணம் என்று சொல்வதை நான் மறுக்கவில்லை. நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால், எங்களுடைய ஆட்சியில் நடைபெற்றதைச் சொல்லக் கூடாது என்று யாரும் தயவுசெய்து நினைக்கக் கூடாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன்......

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்காதீர்கள். பரிதி, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தேசிய மென்பொருள் மற்றும் பணி நிறுவனங்களின் சங்கம் (National Association of Software and Service Companies) தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் எல்லாம் விரும்பித் தேர்ந்தெடுக்கும் முதல் நகரம் சென்னை என்று அறிவித்திருக்கிறது. ஆற்காடு வீராசாமி அல்ல, கலைஞர் அல்ல. அப்படிப்பட்ட ஒரு நிறுவனமே இன்றைக்கு சென்னை மாநகரம்தான் தொழில்நுட்பத்திற்கு உகந்த இடம் என்று அறிவித்து இருக்கிறது. தகவல் தொழில்நுட்பத்திற்கென்று தலைமைச் செயலகத்தில் தனியே ஒரு துறை

ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையின்கீழ் உருவாக்கப்பட்டிருக்கிறது. I.T. Task Force ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. I.T. Policy ஒன்றை உருவாக்கியிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக உலக நாடுகளோடு தொடர்பு கொண்டு இந்தத் தொழில் மிகச் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காக 340 கோடி ரூபாய் செலவில் 'Tidel Park' ஒன்றை தரமணியிலே உருவாக்கி, இந்தியாவினுடைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் 4—7—2000 அன்று வந்து திறந்து வைத்தார்கள். அதைப்போல பல 'Tidel Parks' வர வேண்டும் என்று ஜப்பான் நாட்டிலேயிருந்து வந்தவர்கள் ஆசைப்பட்டார்கள். ஜெர்மனியிலேயிருந்து வந்தவர்கள் ஆசைப்பட்டார்கள். அதற்கான முயற்சிகளிலே எல்லாம் அப்போதிருந்த அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. ஆகவே, தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரையிலே கடந்த கால ஆட்சியிலே எந்த அளவிற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ, அவற்றை மேற்கொண்டோம்.

அதுமட்டுமல்ல, மாணவர்களுக்கு வேண்டிய certificates, ஜாதிச் சான்றிதழ், வருமான சான்றிதழ், இவை எல்லாம் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலேயும் உள்ள அலுவலகங்களில் கம்ப்யூட்டர் மூலமாக வழங்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்தோம்.

திருவாரூர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய எல்லா மாணவர்களுக்கும் கம்ப்யூட்டர் மூலமாக ஒரு விண்ணப்பம் பெற்றுக்கொண்டவுடனே, 10 நிமிடங்களிலே அதற்கான சான்றிதழ்களை வழங்கிக் கொண்டிருக்கிறார். அப்படியே தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரும் வழங்கிக்கொண்டிருக்கிறார். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் இந்தத் துறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று அறிவுரை வழங்கப்பட்டு அந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதேபோல உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலான மாநில உயிரியல் தொழில்நுட்ப வாரியம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே வேறு எங்காவது இப்படிப்பட்ட ஒரு தொழில்நுட்பக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. வேறு மாநிலங்களிலே இல்லை. சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்காக ...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் ஒரு தவறான தகவல் என்பதை



வருத்தத்தோடு சொல்கிறேன். Bio-technology என்பது முதன்முதலாக இந்தியத் துணைக் கண்டத்திலேயே Anna University-யில்தான் அமெரிக்காவில் இருந்த டாக்டர் குந்தளா ஜெயராமன் அவர்களை வரவழைத்து 3 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கி புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே அது தொடங்கப்பட்டது என்பதையும் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—40

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 கோடி ரூபாய் ஆராய்ச்சி செய்வதற்கு நிதி ஒதுக்கியிருப்பார்கள். நான் அதையும் மறுக்கவில்லை. ஆனால், உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்று வகுப்பதற்காக, எப்படியெப்படி செயல்பட வேண்டும் என்பதற்காக டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலே ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவினர் கடந்த 1—1/2 ஆண்டு காலமாகத்தான் செயல்பட்டு வருகிறார்கள். அதிலே ஒன்று, சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் மென் தொழில் முனைவோருக்காக ஓர் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா தமிழக அரசாலே உருவாக்கப்பட்டு இன்று நடைபெற்று வருகிறது. அதைப் பற்றி முழு விவரங்களும் சொல்ல வேண்டுமென்றால் மற்றவற்றைச் சொல்ல முடியாது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே Information Technology ஆக இருந்தாலும் சரி, Bio-Technology ஆக இருந்தாலும் சரி, எல்லாவற்றிலேயும் கடந்த காலத்திலே கலைஞர் அவர்கள்தான் கவனம் செலுத்தினார்கள் என்பதைத்தான் நான் இந்த அவையிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பேசும்போது கழக ஆட்சியிலே என்ன நடந்தது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பழிவாங்கக்கூடிய நடவடிக்கைகளைத்தானே எடுத்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், என்ன நடந்தது என்று சொல்வதற்கு எனக்குக் கடமை இருக்கிறது. எனவே (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் அமர்ந்துகொண்டே பேசக் கூடாது. அது நல்ல முறை அல்ல.

[2001 ஜூன் 1

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சிலவற்றை மட்டும் இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன். 1991—96, அதாவது அ.தி.மு.க. ஆட்சி. 1996—2001 தி.மு.க. ஆட்சி. அ.தி.மு.க. ஆட்சியிலே உருவாக்கப்பட்ட புதிய தொடக்கப் பள்ளிகள் 531. தி.மு.க. ஆட்சியிலே தொடங்கப்பட்ட பள்ளிகள் 965. (மேசையைத் தட்டும் ஒலி) நடுநிலைப் பள்ளிகள் அ.தி.மு.க. ஆட்சியிலே 196, தி.மு.க. ஆட்சியிலே 512, உயர்நிலைப் பள்ளிகள் அ.தி.மு.க. ஆட்சியிலே 134, தி.மு.க. ஆட்சியிலே 380. மேல்நிலைப் பள்ளிகள் அ.தி.மு.க. ஆட்சியிலே 80. தி.மு.க. ஆட்சியிலே 303. (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் வகுப்பறைகள் அ.தி.மு.க. ஆட்சியிலே 100. தி.மு.க. ஆட்சியிலே 857. அதைப்போலவே ஆய்வுக் கருவிகள் வழங்கப்பட்ட பள்ளிகள் அ.தி.மு.க. ஆட்சியிலே 90. தி.மு.க. ஆட்சியிலே 662.

இடைநிலை ஆசிரியர்கள் நியமனம் அ.தி.மு.க. ஆட்சியிலே 8450. தி.மு.க. ஆட்சியிலே 41882. (மேசையைத் தட்டும் ஒலி) முதுகலைப் பட்டதாரிகள் நியமனம் அ.தி.மு.க. ஆட்சியிலே 843. தி.மு.க. ஆட்சியிலே 3162. பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் அ.தி.மு.க. ஆட்சியிலே 838. தி.மு.க. ஆட்சியிலே 4046. கல்லூரி ஆசிரியர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் ஒருவர்கூட நியமிக்கப்படவில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சியில் 964 பேர் நியமிக்கப்பட்டார்கள். இப்படி தி.மு.க. ஆட்சியிலே ஒவ்வொரு துறையிலேயும் தனிக் கவனம் செலுத்தி கடந்த கால ஆட்சியிலே செய்த சாதனைகளைப் போன்று இரண்டு மடங்கு சாதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ...

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, உட்காருங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் சாதனைகளைப் படைத்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியிலேதான் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் சாதிக் கலவரங்களை அதிகமாகத் தூண்டிவிட்டு, சாதிக் கலவரங்கள் நடந்தன. (குறுக்கீடுகள்)



2001 ஜூன் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் பேச்சைத் தொடரலாம். (குறுக்கீடுகள்) நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. உறுப்பினர் வீராசாமி பேசலாம். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கெல்லாம் சேர்த்து திரு. வீராசாமி விளக்கம் சொல்வார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து உட்கார வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன். —

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சாதனைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர்கள் வேண்டுமானால் வேதனைகளைச் சொல்லட்டும். நான் அதிலே குறுக்கிடத் தயாராக இல்லை.

அதைப்போலவே தொழில்களிலே முதலீடு குறித்து இங்கே விவாதம் நடந்தது. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். Centre for Monitoring Indian economy (C.M.I.) 21—7—2000—ல் என்ன தகவல் எழுதியிருந்ததோ அதை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

"அகில இந்தியாவில் மொத்த முதலீடு 13 இலட்சத்து 32 ஆயிரத்து 54 கோடியே 85 இலட்சம் ரூபாய் என்றும், அதில் தமிழ்நாடு 1 இலட்சத்து 60 ஆயிரத்து 804 கோடியே 40 இலட்சம் என்றும், தமிழ்நாடு அகில இந்திய அளவிலே முதல் இடம் வகிக்கிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது இடம் மராட்டியம். 1 இலட்சத்து 58 ஆயிரத்து 410 கோடியே 30 இலட்சம் ரூபாய் பெற்று மராட்டியம் இரண்டாவது இடம் வகிக்கிறது என்றும், குஜராத் மாநிலம் 1 இலட்சத்து 38 ஆயிரத்து 135 கோடியே 20 இலட்சம் ரூபாய் பெற்று மூன்றாவது இடம் வகிக்கிறது என்றும் இந்தப் புள்ளிவிவரங்களிலே எல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10—45

அதுமட்டுமல்ல, இன்றையதினம் இந்த ஆட்சியைப் பொறுத்தவரையிலே தொழில் துறையில் அதிக அளவிற்குக் கவனம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2001 ஜூன் 1

செலுத்துகிறோம் என்று சொன்னாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே, நீங்கள் புதிய தொழிற்சாலைகளிலே கவனம் செலுத்தினீர்கள், ஆனால் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக் கின்றனவே, என்ன காரணம் என்று கேட்டார்கள். உள்ளபடியே சொல்லுகிறேன், இந்த அவையிலே இருக்கக்கூடிய அத்தனை பேரும்தான் அதற்குக் காரணம். ஏனென்றால், மத்தியிலே 1991 ஆம் ஆண்டு ஆட்சியிலே இருந்தவர்கள் ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையை வகுத்தார்கள். அன்றைய நிதி அமைச்சர் மன்மோகன் சிங் அவர்கள் அந்தக் கொள்கையை அறிவித்தார்கள். அன்று அந்தக் கொள்கையை இந்தியா முழுவதும் ஏற்றுக்கொண்டது. சில மாநிலங்கள் எதிர்த்தன. அதற்குப் பிறகு வி.பி. சிங் அவர்கள் பிரதமராக வந்தார்கள். அவருடைய ஆட்சியிலேயும் அந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அப்போது நிதி அமைச்சராக இருந்த ப. சிதம்பரம் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு அமல்படுத்தினார்கள். அதற்குப் பிறகு பா.ஜ.க. ஆட்சியிலே இருந்தபோது, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எல்லாம் அந்த அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்தார்கள். அப்போதும் அந்தக் கொள்கையை யாரும் எதிர்க்கவில்லை. அப்போதும் இந்தியா ஏற்றுக்கொண்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் அமைச்சர் என்ற முறையிலே அவர் சொல்லும்போது நான் விளக்கம் சொல்லித்தானே ஆகவேண்டும். இந்தப் பொருளாதாரக் கொள்கையை மன்மோகன் சிங் அவர்கள் வகுத்தபிறகு, அதை வி.பி. சிங் அவர்கள் follow பண்ணவில்லை. வி.பி. சிங் அவர்கள் முன்னாலேயே இருந்துவிட்டார்கள், first தவறான தகவல், நீங்கள் தருவது. ஏனென்றால், மன்மோகன் சிங் அவர்கள், நரசிம்ம ராவ் ஆட்சியிலே வந்துதான் செய்தார். வி.பி. சிங் அவர்கள் அடுத்து வரவில்லை. அடுத்ததாக, அதற்குப் பிறகு தேவ கௌடா ஆட்சி வந்தது, குஜ்ரால் ஆட்சி வந்தது. அப்போது உங்களுடைய அமைச்சர்கள் எல்லாம் இருந்தார்கள். (குறுக்கீடு)

இருங்கள், சொல்லுகிறேன், கேளுங்கள். எல்லாம் ஒத்துக்கொண்டாலும்கூட நான் சொல்லவேண்டும் இல்லையா? எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் அமைச்சராக இருந்தபோது, மாண்புமிகு வாஜ்பேயி அரசு இருக்கும்போது, இந்தக் கொள்கையை எதிர்த்தவர்கள் நாங்கள். நாங்கள் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வைப் பொறுத்தவரையில் நம்முடைய



2001 ஜூன் 1] [டாக்டர் மு. தம்பிதுரை]

நாட்டினுடைய வளர்ச்சிதான் முக்கியமே தவிர, வேறல்ல என்று அவர்கள் உலகமயமாக்குகின்ற கொள்கையை எங்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டாவது, விவசாயிகளுக்கு இதனால் நன்மைகள் கிடையாது. பல தொல்லைகளுக்குட்படுவார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். அதையும் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் மீறி அவர்கள் செயல்பட்டதன் காரணத்தால்தான் நாங்கள் அந்த அரசியலிலிருந்து வெளியே வந்தோம். வேறு ஒன்றும் கிடையாது. ஆகவே நீங்கள் சொல்லுகிற கருத்துக்கு நாங்கள் பொறுப்பல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன் அவர்களே, உட்காருங்கள். அவர் சொல்லி முடித்துவிடட்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் தம்பிதுரை அவர்கள் ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள். **

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வி.பி. சிங் அவர்கள் பின்னாலே வந்தார் என்று நீங்கள் சொல்லிவிட்டு, ** என்றால் என்ன அர்த்தம்? **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னதாகத் தாங்கள் சொன்ன அந்தக் குறிப்பு, அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது, மத்தியிலே இருக்கின்ற ஆளும் கட்சி ஒரு கொள்கையை வகுக்கும்போது, மேற்கு வங்காளத்திலே இருக்கக்கூடிய கம்யூனிஸ்ட் அரசுகூட அதை எதிர்க்கிறதா என்று சொன்னால் அதை எதிர்க்கவில்லை. அமெரிக்காவிலே இருக்கின்ற சில தொழில் முதலீட்டாளர்களை, அமெரிக்காவிலே இருக்கக்கூடிய பெரிய தொழிலதிபர்களை மேற்கு வங்காளத்திலே மூலதனம் செய்யச் சொல்லி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அழைத்தார்கள். அவர்களும் வந்தார்கள். இப்படி இந்தியாவிலே இன்றையதினம் புதிய பொருளாதாரக் கொள்கை அமல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலங்களாலே அதை எதிர்க்க முடியவில்லை.

நம்முடைய இந்த ஆட்சியினர் என்ன செய்யப் போகிறார்களோ, எனக்குத் தெரியாது. புதிய பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரையில் நாம், மத்தியிலே இருக்கின்ற ஆட்சி அதை அமல்படுத்துகின்ற நேரத்தில் எந்த அளவிற்கு நம்மாலே அதை எதிர்க்கமுடியுமோ அவ்வளவு எதிர்த்தாலும்கூட, அந்தக் கொள்கையின் தாக்கம் ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பொருளாதாரக் கொள்கையினால் தமிழகத்திலே தொழில் நலிந்துபோய்விட்டது. இந்தியாவிலே தொழில் நலிந்துபோய்விட்டது என்று சொன்னாலும், மேற்கு வங்கத்தில் ஆட்சிபுரிகின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகூட அதை எதிர்த்துக் கேட்கவில்லை என்று மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த அவையிலே தொடர்ந்து இருக்கிற ஓர் உறுப்பினர் என்ற முறையிலே சொல்கிறேன். உங்களுடைய தொழில் துறையும், உங்களுடைய முதல்வர் அவர்களும் எதிர்த்துப் பேசினார்களா? அப்படியென்றால், சொல்லுங்கள். ஆந்திராவில் இருக்கிற (குறுக்கீடு) நீங்கள் அப்போதெல்லாம் எதிர்த்துப் பேசமுடியவில்லை. வாய்மூடி மௌனமாக இருந்தீர்கள்.

*முற்பகல் 10—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பழனிசாமி அவர்கள் கேட்டதற்கு உறுப்பினர் அவர்கள் விளக்கம் சொல்ல இருக்கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு பழனிசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள். அவர்கள் பேசுகின்ற நேரத்திலே விளக்கம் சொல்ல இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர், திரு. வீராசாமி நீங்கள் பேச ஆரம்பித்து 45 நிமிடங்கள் ஆகின்றன. இன்னும் எவ்வளவு நேரம் பேசுவதற்கு வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் 1/2 மணி நேரத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது. இன்னும் 1/4 மணி நேரத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி, உங்களுடைய கொள்கை என்ன என்று கேட்கிறார். எங்களுடைய கொள்கையைப் பொறுத்தவரையில் இந்த அவையில் பலமுறை சொல்லியிருக்கிறோம். சிலவற்றை எதிர்க்கிறோம்; பலவற்றை வரவேற்கிறோம். இதுதான் எங்களுடைய கொள்கை. முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் வேறு வழி இல்லை. நான் இப்போது சொல்ல விரும்புவது, இந்த ஆட்சிகூட முழுமையாக புதிய பொருளாதாரக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவே மாட்டோம் என்று சொல்வார்களா என்பது எனக்குத் தெரியவில்லை, சொன்னால் மகிழ்ச்சி அடைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பொருளாதாரக் கொள்கையை மேற்கு வங்கத்தில்கூட ஓரளவிற்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்பது ஒன்றே ஒன்று. மைய அரசு இப்போது திமுகவினுடைய கூட்டணி அரசாக இருக்கிறது. தேயிலையை எடுத்துக்கொள்ளுங்கள். தேயிலையைப் பொறுத்தவரையில் போதிய உற்பத்தி நமது நாட்டிலே இருக்கிறது. போதிய கரும்பு உற்பத்தி நமது நாட்டிலே இருக்கிறது. அப்படி இருக்க மத்திய அரசிலே Commerce Minister-ஆக உங்களது அமைச்சர், மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள்தான் இருக்கிறார். எதற்காக டீ இறக்குமதி செய்ய அனுமதி தந்திருக்கிறீர்கள்? எதற்காக சர்க்கரை இறக்குமதி செய்ய அனுமதி தந்திருக்கிறீர்கள்? இங்கே இருக்கிற, இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற ஏழை விவசாயிகளினுடைய வயிற்றில் அது அடிக்காதா? அந்தப் பொருளாதாரக் கொள்கையை மைய அரசில், உங்கள் கட்சியிலே இருக்கிற திரு. மாறன் Commerce Minister-ஆக இருக்கிறபோது, மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கையை ஏன் நீங்கள் ஏற்கிறீர்கள்?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, டீ இலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினை போராட்டமாக வெடித்தவுடனே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பிரதமரோடும், மாறனோடும் தொடர்பு கொண்டு, எப்படியாவது இறக்குமதியைத் தடை

செய்யுங்கள் என்று கேட்டு, அதற்கான தடையும் இப்போது விதித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் அதற்கு மானியம் வழங்க வேண்டுமென்று ...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** I am on a point of order. தேயிலைப் போராட்டம் வந்ததற்குப் பிறகு இங்கே அன்றையதினம் இருந்த முதலமைச்சர் அவர்கள் மத்தியிலே தொடர்பு கொண்டு தேயிலை இறக்குமதியை முழுமையாக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க மத்திய அரசு ஒப்புக்கொண்டது என்று சொன்னார்கள். மே மாதம் 1—ஆம் தேதி, இனி தேயிலை இறக்குமதி இருக்காது என்று அறிவிப்பு வெளியிட்டார்கள். அப்படியே இறக்குமதி செய்யப்பட்டாலும்கூட அதற்கு 35 சதவீதம் சுங்க வரி விதிக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குப் பிறகு மே மாதம் 15 ஆம் தேதி இலங்கையிலேயிருந்து 15 மில்லியன் கிலோகிராம் தேயிலை 7 1/2 சதவீத சுங்க வரிக்கு இறக்குமதி செய்ய ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. நான் இந்த அவையிலே இன்றைக்கு எழுப்புகிறேன் என்று நினைக்க வேண்டாம். தொடர்ந்து பல இடங்களிலே பலமுறை இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறேன். இன்றுவரை அதற்குரிய பதில் வரவில்லை. பத்திரிகைகள் நான் சொன்னதுதான் சரி என்று எழுதியிருக்கின்றன.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதைப் பற்றி எனக்கு ஒன்றும் இல்லை. ஆனால் எனக்கு நேரம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. கேட்டதற்கு உறுப்பினர் அவர்கள் விளக்கம் சொல்ல இருக்கிறார்கள். அடுத்து திரு. ஹேமச்சந்திரன் பேசலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது ...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தேயிலை இறக்குமதி செய்வதற்கு ஒரு கம்பெனிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அது முரசொலி மாறன் அவர்கள் சம்பந்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**திரு. எச். எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ராஜு தேயிலை சம்பந்தப்பட்டவர், அவர் பேசட்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தேயிலையைப் பொறுத்தவரையில், ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊட்டி உறுப்பினர் ராஜு.

**திரு. எச். எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் கல்கத்தா துறைமுகத்தில் மட்டுந்தான் வந்து கொண்டிருந்தது. இப்போது இந்திய நாட்டிலுள்ள அனைத்துத் துறைமுகங்களிலும் இறக்குமதி நடந்து கொண்டிருக்கிறது என்ற செய்தியை அவைக்குத் தருகிறேன். இந்தச் செய்தி மிக முக்கியமானது. வேண்டாம், வேண்டாம் என்று சொன்னபிறகு கல்கத்தா துறைமுகத்தில் மட்டும் செய்யப்பட்ட அந்த இறக்குமதி இப்போது எல்லாத் துறைமுகங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால்தான் தயவுசெய்து இறக்குமதியே வேண்டாம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, தேயிலையை இறக்குமதி செய்யக்கூடாது என்று சொல்லுகின்ற கட்சி. அதுமட்டுமல்லாமல், அப்போது தேயிலை பயிரிடுகிற விவசாயிகளுக்கு மானியம் கொடுக்க வேண்டுமென்று சில வரிச் சலுகைகள்கூட கொடுத்தோம். அப்படியிருந்தும் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. அதற்குப் பிறகுதான் மத்தியிலே இருக்கக்கூடிய வாஜ்பேயி அவர்களிடத்திலும், முரசொலி மாறனிடத்திலும் சொல்லி அதற்குத் தீர்வு காண வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தேயிலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு மானியம் அளித்ததாக உறுப்பினர்

சொல்கின்றார், கிடையாது. அவர்கள் தந்ததெல்லாம், Factory Owner-களுக்கு Sales Tax exemption கொடுத்து உதவியிருக்கிறார்களே தவிர, நேரடியாக அந்த விவசாயிகளுக்கு எந்த மானியமும் கொடுத்ததாக இல்லை என்ற தகவலைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரிக்கு வரி பொருள் காண வேண்டுமென்றால் நான் என்ன செய்வது என்று தெரியவில்லை. 4 சதவீதம் விற்பனை வரிச் சலுகை கொடுக்கப்பட்டது. நாங்கள் நினைத்தது அந்தச் சலுகை விவசாயிகளுக்குப் போய்ச் சேரும் என்று. மாண்புமிகு உறுப்பினர் போய்ச் சேரவில்லை என்கிறார். (குறுக்கீடு) இருக்கலாம், ஆனால்...

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏழை தேயிலை விவசாயிகளுக்கு, தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் உள்ள வித்தியாசம் புரியவில்லை என்று எண்ணும்போது வேதனையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் புரிந்த அளவிற்கு எனக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால், நான் ஒன்றைச் சொல்கிறேன். ஒரு அரசாங்கம் கொள்கை வகுப்பது என்பது, அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகத்தான். இங்கே உணவு மானியம் கொடுக்கிறோம் என்று சொன்னால், அந்தப் பயனாளிகளுக்குப் போய்ச் சேரும் என்றுதான் கொடுக்கிறோமே தவிர அவர்களுக்குப் போய்ச் சேராது, ரேஷன் கடையிலே இருக்கக்கூடிய ஊழியர் எடுத்துக்கொள்வான் என்று சொன்னால் திலே எப்படி பொருள் இருக்கிறதோ அப்படித்தான் இதிலேயும் இருப்பதாக நான் கருதுகிறேன். நோக்கம், விவசாயிகளுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதுதான். பிரச்சினைக்கு வருகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பொறுத்தவரையிலும் எப்படி அந்த ஆட்சி நடைபெற்றது என்பதை யாரெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள் என்று கேட்டால், இந்துப் பத்திரிகையின் வர்த்தக ஆசிரியர், பேராசிரியர் சுவாமிநாதன் அவர்கள், 'அரசியல் பொருளாதார ரீதியான பிரச்சினைகளை எல்லாம் மீறி முன்னேற்றம் கண்டு தலைசிறந்த மாநிலமாகத் திகழ்ந்திட முடியும் என்பதை நிரூபித்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.



**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய முந்தைய ஆட்சியிலே என்னென்ன நடந்தது என்பதை விளக்குவதாகக் கூறுகிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சிமெண்ட் விலையுயர்வு மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில்தான் அதிகம் இருந்தது என்பதற்கு –

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, எல்லாப் பிரச்சினைகளுக்கும் பேசி முடிவு செய்துவிட முடியாது. உறுப்பினர் அவர்களைப் பேச விடுங்கள். பிறகு பேசிக்கொள்ளலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே ஏதோ தமிழ்நாட்டிலே மட்டும்தான் சிமெண்ட் அதிக விலைக்கு விற்பதைப் போலவும், இந்தியா பூராவும் மலிவாக இருப்பதைப் போலவும் ஒரு கருத்து சொல்லப்படுகிறது. மூட்டை அதைப்பற்றி—இப்போது நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். மூட்டை 100 ரூபாய்க்கு நீங்கள் விற்பதற்கு ஏற்பாடு செய்தால் உங்களோடு சேர்ந்து நானும் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் சொல்ல வருவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற சாதனைகளை, அந்த ஆட்சியினுடைய நிலைமைகளை –

**மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, –

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, உட்காருங்கள். உறுப்பினர் பேசி முடிக்கட்டும். நேரம் ஆகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அந்த ஆட்சியினுடைய நிலைமைகளை யார் பாராட்டியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்ற நேரத்தில், 12—2—2000 அன்று 'Economic and Political Weekly' என்ற பத்திரிகையில் "Overall Tamil Nadu could be considered as one State which is most successful in reducing regional disparities in economic and social development even when there was substantial variation in the natural endowment in different parts of the State." என்று அவர்கள் ஒரு நற்சான்றிதழ் கொடுத்திருக்கிறார்கள்.

2000 ஜூலை 16 ஆம் தேதியிலிருந்து 31 ஆம் தேதி வரையிலான "Computers to-day" என்ற இதழில் "Tamil Nadu is gearing up for the modern age shedding its image of being a conservative society. The State is now opening its doors to international companies to make use of its huge pool of resources,

infrastructure and skilled man power. The trend which started 2 years ago has helped the State position itself as one of the much sought-after IT destination in the country." இப்படி உலகத்திலே இருக்கக்கூடிய பல நிறுவனங்கள், பல பத்திரிகைகள், மேதைகளெல்லாம்...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உட்காருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பல மேதைகளெல்லாம் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே இன்னொரு பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். முக்கியமான பிரச்சினை. ஆளுநர் உரையிலே 31—வது பக்கத்தில், பாரா 39—லே சொல்லப்பட்டிருக்கின்ற கருத்து. 1996 ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு ஆட்சியை விட்டுச் செல்லும்போது 874 கோடி ரூபாயை கஜானாவிலே வைத்துவிட்டுப் போனதாகவும், இன்றைக்கு cash liability 700 கோடி என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் உள்ளபடியே யோசித்து யோசித்துப் பார்த்தேன். 1991—லேயிருந்து 1996 வரையிலும் இருப்பு இருந்திருக்குமானால் கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு சொசைட்டிகளுக்கு அன்றையதினம் அரசு பணம் கொடுக்காமலே போய்விட்டது. தி.மு.க. ஆட்சி வந்து ஓராண்டுகாலம் நாம் அதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்தோமே, ஒருசமயம் அன்றைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வராமல் போயிருக்குமோ? எப்படி 874 கோடி ரூபாய் இருப்பு இருந்தது என்று நான் பார்த்தேன். ஆனால், தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரையிலும் சொல்கிறேன். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அப்போது நிதியமைச்சராக இருந்த மாண்புமிகு நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கைகளை இந்த அவையிலே தாக்கல் செய்திருக்கிறார்கள். 5 ஆண்டுகால நிதிநிலை அறிக்கைகளையும் இங்கே வைத்திருக்கின்றேன்.

1991—92 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை 1991 செப்டம்பர் 4 ஆம் தேதி தாக்கல் செய்யும்போது அந்த ஆண்டினுடைய முடிவில் இறுதிப் பற்றாக்குறை 575.35 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார். 1992—93 ஆம் ஆண்டின் முடிவில் இறுதிப் பற்றாக்குறை 619.095 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார். 1993—94 ஆம் ஆண்டு முடிவில், இறுதிப் பற்றாக்குறை 635.89 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார். 1994—95 ஆம் ஆண்டின் முடிவில் இறுதிப் பற்றாக்குறை 398.05 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார். 1995—96 ஆம் ஆண்டின் முடிவினில் இறுதிப் பற்றாக்குறை 25.50 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார். கடைசியாக 1996—97 ஆம் ஆண்டு முடிவில் ஏற்படக்கூடிய மொத்த நிதிப் பற்றாக்குறை —680.82 கோடி ரூபாயாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.



முற்பகல் 11—00

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Revenue Deficit-க்கும் Cash loss—Fiscal loss—க்கும் உள்ள மாறுபாடு தெரியாமல் கூறுகிறார் என்று கருதுகிறேன். இங்கே குறிப்பிடப்பட்டிருப்பது Revenue Deficit. நாங்கள் தற்போது குறிப்பிட்டிருப்பது சென்ற ஆட்சியினுடைய இறுதியில், அது Fiscal Deficit.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்கிறேன். உண்மையிலேயே Budget, Deficit Budget ஆக இருந்தால், கையிருப்பு ஏதோ இருந்திருக்கலாம். 845 கோடிக்கு இருக்க வாய்ப்பில்லை. நீங்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் நிதி நிலைமை பற்றி ஒரு வெள்ளை அறிக்கை இங்கே அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த அவையினுடைய நன்மைக்காக, நாட்டு மக்களுடைய நன்மைக்காக அ.தி.மு.க. ஆட்சியிலே, 845 கோடி ரூபாய் இருப்பு இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதே, அதற்கும் சேர்த்து ஓர் அறிக்கை தந்தால் நான் நன்றியுடையவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, மீண்டும் மீண்டும் சொல்கிறேன், ஓர் அரசாங்கம், நல்ல அரசாங்கம் செலவுகளைச் செய்துகொண்டேதான் இருக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன், மத்திய அரசுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டும் என்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் மாநில அரசு ஊழியர்களுக்குக் கொடுத்தோம். அதனால் பத்தாயிரம் கோடி ரூபாய், தமிழக அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைப் போலவே, பல நல்ல திட்டங்களை நாங்கள் அறிவித்து நிறைவேற்றும்போது, செலவுகள் ஆயிற்று. 700 கோடி ரூபாய் நீங்கள் ஆட்சிக்கு வரும்போது பற்றாக்குறை இருந்தது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், காரணம் என்ன என்றால், பல நல்ல திட்டங்களை நிறைவேற்றியது மட்டுமல்ல, அரிசி கையிருப்பு மட்டும்

கிட்டத்தட்ட 14 இலட்சம் டன் இருப்பு வைத்துவிட்டுச் சென்றோம். அதுவும் இல்லை என்று நீங்கள் மறுத்தால் அதைக்கூட நான் ஏற்றுக்கொள்கிறேன்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இயக்கத்தின் தலைவர், வெளியிலே ஒரு தவறான தகவலை இதுகுறித்து ஏற்கெனவே கூறியிருக்கிறார். அதைனயொட்டியே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அவையில் அந்தத் தவறான தகவலைத் தெரிவிப்பது வருத்தமான ஒன்றாகும். நாங்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறோம். Fiscal Deficit என்ற முறையிலே அரசுக்குக் கடன் சுமையாக அவர்கள் விட்டுச்சென்று இருப்பது 706 கோடி ரூபாய். ஆனால் கஜானா காலி என்று சொல்கிறார்கள், களஞ்சியத்திலே பணம் இருக்கிறது என்று, அரிசி இருக்கிறது என்று ஒரு தவறான தகவலை மக்களுக்குத் தெரிவித்தார்கள். Civil Supplies Corporation-ஐ அங்கே 10 இலட்சம் டன் அரிசி வாங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) No. It is 19 lakhs. We have got records. 19 இலட்சம் டன் அரிசி அங்கே வாங்கப்பட்டிருக்கிறது. அதற்குக் கிட்டத்தட்ட 1300 கோடி ரூபாய் செலவாகி இருக்கிறது. அந்தப் பணம் அரசு நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட பணம் அல்ல. மாறாக Civil Supplies Corporation மூலமாகக் கடன் பெற்று அந்தக் கடனிலிருந்து வாங்கி இருக்கிறார்கள். அந்தத் தகவலைத் திரித்து..

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** Reserve Bank of India.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஆம். Reserve Bank of India மூலமாக State Bank வழியாக 1365 கோடி ரூபாய் கடன் பெற்று, அந்த அரிசியை வாங்கி இருக்கிறார்கள். இதுதான் உண்மை நிலை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி இருக்கிறது என்று ஒத்துக்கொண்டதற்கு நன்றி. ஆனால் அவர்கள் Reserve Bank of India மூலமாக....

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ரூ.1365 கோடி கடன் வைத்து இருக்கிறீர்களே.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான்தான் சொல்ல வருகிறேனே. அரிசியை Reserve Bank of India மூலமாக வாங்கி, அதை இருப்பு வைத்திருக்கிறார்கள்.



**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் வெளியில் சொன்னது, நாங்கள் பற்றாக்குறை வைத்துவிட்டுப் போகவில்லை, ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசியை வைத்துவிட்டுப் போய் இருக்கிறோம், களஞ்சியத்திலே என்று சொன்னார். ஆனால் இது தமிழ்நாடு அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்ட பணம் அல்ல. Reserve Bank of India இடமிருந்து Tamil Nadu Civil Supplies Corporation கடன் பெற்று இருக்கிறது. 1512 கோடி ரூபாய் கடன் பெற்று இருக்கிறார்கள். அதிலே அரிசி வாங்கி வைத்திருக்கிறார்கள். அந்த அரிசியும் எப்படிப்பட்ட அரிசி என்றால், புழுத்துப்போன அரிசி, புழுத்துப்போன அரிசி (மேசையைத் தட்டும் ஒலி) பூச்சிப் புழு பிடித்த அரிசி. அழுகிப் போன அரிசி. யாரும் சாப்பிட முடியாத அரிசி. அதைத் தான் வைத்துவிட்டுப் போய் இருக்கிறார்கள்.

முற்பகல் 11—05

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற அரிசி எப்படிப்பட்ட அரிசி என்று நாங்கள் போய் பார்க்கவில்லை. (சிரிப்பு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள் (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்றால், எங்களுக்குக் கொடுக்கின்ற தகவல்களெல்லாம், ரேஷன் கடைகளில் இருந்து கொண்டு வந்து காண்பிக்கின்ற அரிசியைத்தான் பார்க்கிறோம். அந்த அரிசி நன்றாகத்தான் இருக்கிறது. சென்னை நகரத்தில் பலர் அந்த அரிசியைத்தான் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒரு கோடியே ஐம்பது இலட்சம் குடும்பங்கள் அந்த அரிசியைத்தான் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்படி ஒரு அரிசி இருக்குமானால் அதை என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள். அதில் தவறு இருந்தால் நடவடிக்கை எடுங்கள்.

அடுத்து தமிழகத்தை வளமும், எழுச்சியும் மிக்க மாநிலமாக மாற்ற முடியும் என்று இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதிலே குறிப்பாக தமிழ் மாநிலத்தை எல்லாத் துறைகளிலும் முதல் மாநிலமாகக் கொண்டு வரவேண்டுமென்று முதல்வர் அவர்கள் ஆசைப்படுகிறார்கள். அதற்காக நான் குறிப்பிடுகிறேன். இன்று இந்தியாவிலேயே அரிசி உற்பத்தித் திறனில் தமிழ்நாடுதான் முதலிடத்திலே இருக்கிறது. ஒரு ஹெக்டேருக்கு 3,443 கிலோ உற்பத்தி ஆகிறது. கரும்பு உற்பத்தித் திறனில் தமிழகம் உலகத்திலேயே முதலிடத்தில் இருக்கிறது. ஒரு ஹெக்டேருக்கு 1,34,156

கிலோ உற்பத்தி ஆகிறது. எண்ணெய் வித்துக்களில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம். அதைப்போலவே, தொழில் முதலீடுகளில் தமிழகம் முதலிடம். அதைப்போலவே, டானிடா, போலியோ ஒழிப்பிலே தமிழகம் முதலிடம் இன்று. மென்பொருள் வல்லுநர்கள் அதிக எண்ணிக்கையில் பணியாற்றுவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம். போலியோ ஒழிப்பிலே தமிழகம் முதலிடம் என்று பல துறைகளிலே இன்றையதினம் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. இப்படி பல சாதனைகளை, பல நல்ல திட்டங்களை நிறைவேற்றிய கழக ஆட்சியை குறை சொல்லியிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் இந்த அவையிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். இனி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வரவே முடியாது, அவர் தொல்காப்பியத்துக்கு உரை எழுதட்டும் என்று சொன்னார். தலைவர் அவர்களே, உங்களுக்கு நன்றாகத் தெரியும். முதலமைச்சராக யார் வேண்டுமானாலும் வரலாம். ஆனால் தொல்காப்பியத்துக்கு எல்லோராலும் உரை எழுத முடியாது. வேண்டுமானால் நீங்கள் முயற்சிக்கலாம், பேராசிரியர் முயற்சிக்கலாம், என் ·போன்றவர்கள் நீங்கள் எழுதுகின்ற உரையைப் படிக்கத்தான் முடியுமே தவிர, எங்களால் தொல்காப்பியத்துக்கு உரை எழுத முடியாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய இயக்கத் தலைவர் அவர்களே சொல்லிவிட்டார், இதுவே என்னுடைய கடைசித் தேர்தல் என்று சொல்லிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இருக்கிறபோது, ...

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் குறிப்பிட்டது, அவருடைய உடல்நிலை குறித்து, அவருடைய வயதை எண்ணிப் பார்த்து, இனி எதிர்காலத்திலே நான் தேர்தலிலே போட்டியிட முடியாது, இதுதான் கடைசித் தேர்தல் என்று சொன்னாரே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இதுதான் கடைசித் தேர்தல் என்று எங்கேயும் அவர் சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம், ஆயிரங்காலத்துப் பயிர், அதை யாராலும் அழிக்க முடியாது. எனவேதான் அப்படிப்பட்ட தொல்காப்பியத்துக்கு உரை எழுதக்கூடிய ஆற்றலாவது கலைஞர் அவர்களுக்கு இருக்கிறது என்று ஒப்புக் கொண்டதற்கு நான் நன்றி தெரிவித்து, இந்த வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.



**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு clarification. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1300 கோடி ரூபாய்க்கான அரிசி ஏதோ கெட்டுவிட்டதாகச் சொன்னார்கள். அவற்றையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு புதிதாக அரிசி வாங்கத் திட்டம் வைத்திருக்கிறார்களா அல்லது அவற்றை ஏதேனும் செய்யப் போகிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றுக்கும் அவர் பதில் சொல்லியிருக்கிறார். அடுத்து, முதலமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்லவிருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும், உங்களுடைய உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கும் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லவிருக்கிறார்கள், அமருங்கள்.

(திரு. கோ.சி. மணி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், திரு. வை. பெருமாள் மற்றும் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் எழுந்து நின்று கொண்டிருந்தனர்).

நீங்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். அமர்ந்து பொறுமையாக பதிலைக் கேளுங்கள், அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி ஒரு வினாவை எழுப்பினார். அதற்கான திட்டத்தை ஏற்கெனவே அவர்கள் வகுத்து செயல்பட்டார்கள். தேவைக்கு அதிகமாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில், 14 இலட்சம், 11 இலட்சம், 10 இலட்சம் டன் என அரிசியை வாங்கி அந்த அரிசியையெல்லாம், கெட்டுப் போன அரிசி என்ற கணக்கிலே கொண்டு வந்து — அரிசியை 5 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். வெளிச் சந்தையிலே 11 ரூபாய், 12 ரூபாய் என்று அரிசி விற்கிறது — கெட்டுப் போன அரிசி என்று 5 ரூபாய், 4 ரூபாய், 3 ரூபாய்க்கு tender ஜகதீஷ் என்ற கம்பெனிக்கும், ஜெய்கணேஷ் என்ற கம்பெனிக்கும் கொடுத்து, அந்த அரிசியை தூத்துக்குடி வரை கடத்திச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) அங்கேயிருந்து ஒன்றல்ல, இரண்டல்ல, 650 கோடி ரூபாய் பெறுமானமுள்ள அரிசியை கர்நாடக மாநிலத்திற்குக் கடத்திச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) விற்றார்கள். நடவடிக்கை எடுக்க C.I.D. Crime Branch முற்பட்டபோது, அதற்குக்கூட ஒத்துழைப்புத் தராமல், அன்று தஞ்சையிலே இருந்த கலெக்டர் அவர்கள்கூட இதிலே

[திரு. சி. பொன்னையன்] [2001 ஜூன் 1

உடந்தையாக இருந்தார்கள் என்ற தகவல்களெல்லாம் தற்போது ஆதாரத்தோடு இருக்கின்றன. இப்படிப்பட்ட திட்டத்தை ஏற்கெனவே நீங்கள் வகுத்திருக்கிறீர்கள். அதை நாங்கள் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11—10*

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு தகவலை இங்கே தெரிவித்திருக்கிறார். நான் உறுதியாக பொறுப்பேற்றுக்கொண்டு சொல்கிறேன். தி.மு.க. ஆட்சியிலே 658 கோடி ரூபாய்க்கான அரிசி கடத்தப்படவில்லை. உங்களிடத்திலே கோப்புகள் இருக்கின்றன. அதிகாரிகள் இருக்கிறார்கள். அதுகுறித்து ஒரு வெள்ளை அறிக்கையையும் இந்த அவைக்கு வைத்தால் உண்மையிலேயே அந்த அளவிற்குக் கடத்தப்பட்டிருக்குமானால், கடத்தியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தூக்கிலிடுங்கள். எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு என் பதிலைத் தொடங்குகிறேன்.

முதலில், அண்மையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியை அளித்து இந்த அவையில் முதலமைச்சராக அமர்த்தி, இந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும் பொன்னான வாய்ப்பினை எனக்கு நல்கிய தமிழக மக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தேர்தல் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்த கழக உடன்பிறப்புகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடன் இணைந்து ஒத்துழைத்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2001 ஜூன் 1] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

"நடைபெற்று முடிந்த தேர்தல் பல வகைகளில் வரலாறு படைத்துள்ளது. இம்மாநில வரலாற்றில் இதற்கு ஈடு இணையே இல்லை" என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. இந்த விவாதத்தில் பங்கேற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகின்றபோது, இந்த வரிகளையே சுட்டிக்காட்டி, இந்தத் தேர்தல் வெற்றி எந்தவகையிலும் வரலாற்றுச் சிறப்புடையது அல்ல என்று கூறினார்கள். எல்லோருக்கும் தெரிந்த புரிந்த உண்மை, இவர்களுக்கு மட்டும் ஏன் தெரியவில்லை; ஏன் புரியவில்லை? காரணம் இதுதான். உண்மையாகத் தூங்குபவர்களை எழுப்பலாம். ஆனால், தூங்குவதுபோல் நடிப்பவர்களை எப்படி எழுப்ப முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) அண்மையில் நடந்த முடிந்த சட்டமன்றத் தேர்தலைப்போல், இதற்கு முன்பு தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்தியாவில் மட்டுமல்ல; உலகிலேயே எங்கேயும், எப்போதும் இத்தகைய தேர்தல் நடைபெற்றது இல்லை. களத்தில் இரு அணிகள் மோதுகின்றபோது, ஒரு அணியின் தலைவரை நிராயுத பாணியாக்கிவிட்டது மட்டுமின்றி, அவருடைய கைகளையும் கட்டிப்போட்டுவிட்டு, எதிர் அணியைச் சார்ந்தவர்கள் அவரைச் சுற்றிச்சூழ்ந்து கொண்டு, எல்லாவிதமான, பயங்கரமான ஆயுதங்களையும் கொண்டு, அவரைத் தாக்கியபோதிலும், அத்தகைய கொடுமையான சூழ்நிலையிலும் போராடி, எதிரிகளை வென்று, எதிரிகளை நிராயுதபாணிகளாக்கி, யார் அழிந்து போவார் என்று எதிரிகள் எண்ணினார்களோ அவரை இராஜ சபையில் அரியணையில் அமர்த்தி, அழிக்க நினைத்த எதிரிகளை அவரிடம் எங்களுக்குப் பாதுகாப்புத் தாருங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கேட்க வேண்டிய நிலைமையை உருவாக்கித் தந்த எனதருமைத் தமிழக மக்களுக்கு மீண்டும் ஒருமுறை என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பேசுகின்றபோது, அடிக்கடி ஜனநாயக நெறிமுறைகளைப் பற்றியும், அவை மரபுகளைப் பற்றியும் பேசினார்கள். ஒரு கட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், எதிர்க்கட்சியே இல்லாமல் செய்ய வேண்டும் என்று நாங்கள் திட்டமிட்டுச் செயல்படுவதாகக் குற்றம் சாட்டினார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழித்தோன்றல்களாகவும், புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். அவர்களிடம் பாடம் பயின்றவர்களாகவும் இருக்கின்ற நாங்கள்

ஒருபோதும் அப்படிச் செயல்படவும் மாட்டோம்; கருதவும் மாட்டோம். ஆனால், கடந்த ஐந்தாண்டு காலம் ஆட்சி புரிந்த தி.மு.க. வினர்தான் தமிழகத்தில் எதிர்க்கட்சியே இருக்கக்கூடாது என்று கருதி அதற்காகவே திட்டமிட்டுச் செயல்பட்டார்கள்.

*முற்பகல் 11—15*

கடந்த ஐந்தாண்டுகளில் ஆட்சியாளர்கள், ஆட்சி அதிகாரத்தின் முழு பலத்தையும் கட்டவிழ்த்துவிட்டு, எல்லாவிதமான கீழ்த்தரமான தாக்குதல்களையும் தொடுத்து, பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் அவதூறுப் பிரச்சாரம் நடத்தி, அடுக்கடுக்கான பொய் வழக்குகளை ஜோடித்து, சுமத்தி, சிறையில் தள்ளி, அவமானப்படுத்தி, அசிங்கப்படுத்தி, கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தி, ஆட்சி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, கழகத்தை நிலைகுலைய வைக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையும் செய்து, கழகத்திற்குள் துரோகிகளை வளர்த்து, பின்னர் அவர்களை வெளியே இழுத்து, அந்தத் துரோகிகளைவிட்டு கழகத்தை பலவீனப்படுத்த முயன்று, வங்கிக் கணக்குகளை முடக்கி. உதவியாக உறுதுணையாக இருந்தவர்களையெல்லாம் சிறையில் தள்ளி, என்னைத் தனிமைப்படுத்தி, மக்கள் பணி, கழகப் பணி ஆகியவற்றில் என்னை கவனம் செலுத்தவிடாமல் நித்தம், நித்தம், தினம் தினம் பொய் வழக்குகளைத் தொடுத்து, புதிய புதிய சிக்கல்களை தினந்தோறும் உருவாக்கி, கடைசியாக தேர்தலிலேயும் என்னை நிற்க விடாமல் செய்து இதுவரை யாருமே சந்தித்திராத, இந்தச் சோதனைக் கடலில் இவர் மூழ்கி விடுவார். இதிலிருந்து மீண்டு இவர் வரவே மாட்டார், மீண்டு வரவே முடியாது என்றெல்லாம் எக்காளமிட்டு, கைக்கொட்டிச் சிரித்து, அதிகார மமதையோடு, ஆணவத்தோடு இவர் ஒழிந்தார், இனி எதிர்ப்பே இல்லை. வாரிசுக்கு மணிமுடி சூட்ட இனி எந்தத் தடையுமில்லை என்று மனக்கோட்டைக் கட்டி (மேசையைத் தட்டும் ஒலி) மனப்பால் குடித்து மகிழ்ந்தவர்கள் இன்று இருட்டறையில் செய்வதறியாது, முக்காடு போட்டுக்கொண்டு மூலையில் உட்கார வேண்டிய (மேசையைத் தட்டும் ஒலி) அவலநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றால் அதுதான் மக்கள் சக்தியின் மகத்துவம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதையும், எந்தத் தீர்ப்பையும் வெல்லும் தீர்ப்பு மக்கள் தீர்ப்புதான் என்பதையும் இந்தத் தேர்தலில் தமிழக மக்கள் உலகிற்கே உணர்த்தி விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



சில எதிர்கட்சியினர் தேர்தலில் நிற்க முடியாத நான் ஏதோ கொல்லைப்புற வழியாக வந்து முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்துவிட்டதாகக் கூறினார்கள். நான் கொல்லைப்புற வழியாக வரவில்லை. மக்களின் அமோக ஆதரவோடு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, ஆளுநர் அவர்கள் எனக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்து, ஊர் அறிய, உலகறிய வந்து, இந்த முதலமைச்சர் ஆசனத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) அமர்ந்திருக்கிறேன். ஆனால், இப்படியெல்லாம் என்னை கொச்சைப்படுத்திப் பேசத் தூண்டுகிற தி.மு.க. தலைவர் கருணாநிதிதான் இந்த அவைக்கு வர வெட்கப்பட்டு, பயந்து கொல்லைப்புற வழியாக, யாருக்கும் தெரியாமல், இரகசியமாக பேரவைத் தலைவர் அறைக்கு வந்து, சட்டமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு, வந்த சுவடே தெரியாமல், ஓசைப்படாமல் போய்விட்டார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய ஆதரவோடு முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவருடைய வேதனைகளைச் சொல்வதைப்பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. ஆனால், ஏதோ எங்களுடைய தலைவர் முக்காடிட்டுக்கொண்டு இருப்பதாகவும் (குறுக்கீடுகள்) கொல்லைப்புற வழியாக வந்து பதவியேற்றதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே உங்களுடைய அறைக்கு அப்படிப்பட்ட ஒரு வழியிருக்கிறது என்று எனக்குத் தெரியாது. நேர் வழியில் வந்துதான் அவர் பதவி ஏற்றுக்கொண்டார். அவரோடு நாங்கள் வந்தோம். அப்போது, நம்முடைய தற்காலிக சபாநாயகராக இருந்த மாண்புமிகு லத்தீப் அவர்கள் முன்னிலையில்தான் பதவி ஏற்பு விழா நடைபெற்றது. அவர் அந்தப் பதவி ஏற்பு நிகழ்ச்சியையும் நடத்தி வைத்தார். அதைக் கொல்லைப்புற வழி என்று சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற புதிய உறுப்பினர்கள் வருகின்ற நேர்வழி இந்த வழி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வழியில் வர முடியாதவர்கள், வர வெட்கப்படுகிறவர்கள்தான் வேறு வழியில் வருவார்கள். அதைத்தான் செய்திருக்கிறார்கள். நான் சொன்னதைத்தான் வேறுவிதமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொல்லியிருக்கிறார்.

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [2001 ஜூன் 1

ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில், இந்த ஆண்டு மொத்தம் 51 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மொத்தம் 16 மணி நேரம் 24 நிமிடம் பேசியிருக்கிறார்கள். ஆனால், இதே சட்டமன்றத்தில் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் மொத்தம் 58 உறுப்பினர்கள் பேசினார்கள். அவர்கள் 17 மணி நேரம் 33 நிமிடங்கள் பேசினார்கள். இந்த ஆண்டு நடைபெற்ற விவாதத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் 12 பேர் பேசியிருக்கிறார்கள். அந்த 12 பேரும் பேசிய நேரம் 2 மணி நேரம் 47 நிமிடங்கள் ஆகும். ஆனால், 1996—ல் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் 21 பேர் பேசினார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 5 மணி நேரம் 12 நிமிடங்கள் ஆகும். 2001, இந்தக் கூட்டத் தொடரில் மற்ற கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் 39 பேர் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசிய நேரம் 13 மணி நேரம் 37 நிமிடங்கள் ஆகும். ஆனால், 1996—ல் ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 37 பேர்தான் பேசினார்கள். அவர்கள் எடுத்துக்கொண்டு நேரமோ 12 மணி 21 நிமிடங்கள் ஆகும். ஆகவே, எங்களைப் பொறுத்தவரை ஜனநாயக மரபுகளில் நம்பிக்கை உள்ளவர்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் இந்த புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—20

ஆளுநர் உரையில் "இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணியில் உள்ள அதிகாரிகள் மனச் சோர்வு அடைந்து இருக்கிறார்கள்; உற்சாகம் இழந்து இருக்கிறார்கள்; அவர்களுக்கெல்லாம் மீண்டும் உற்சாகம் ஊட்ட வேண்டும்; அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்" என்று கூறப்பட்டுள்ளது. "இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் இம்மாநிலத்தில் பிற பணிகளைச் சார்ந்த பணியாளர்களின் மன உறுதியையும் பெருமையையும் மீட்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது" என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. 1996—ல் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் முதன்முதலாகப் பதவி ஏற்றுக்கொண்டபோது, வந்தவுடனேயே காவல் துறையைப்பற்றி அவர் தெரிவித்த கருத்து என்னவென்றால், காவல் துறையின் ஈரல் 75 சதவீதம் கெட்டுவிட்டது என்பதாகும். எடுத்த எடுப்பிலேயே உள் துறை இலாகாவுக்குப் பொறுப்பேற்றிருக்கிற முதலமைச்சர் காவல் துறைக்கே பொறுப்பேற்றிருக்கிற முதலமைச்சர், காவல் துறையைப் பற்றி இப்படி ஒரு கருத்தைத் தெரிவித்தால், இப்படி ஒரு damaging statement—ஐத் தெரிவித்தால், அவர்களுக்கு எப்படிப் பணியில் உற்சாகம் இருக்கும்? அப்போது I.A.S. அதிகாரிகளைப் பற்றி முன்னாள் முதலமைச்சர் ஒரு கருத்து சொன்னார் I.A.S. அதிகாரிகளைப் பொறுத்தமட்டில் அவர்களைப் பூப்போல நடத்துவேன் என்றார். ஆனால் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் பூப்போல நடத்தவில்லை; I.A.S. அதிகாரிகளை அவமானப்படுத்தினார்; தற்காலிகப் பணி நீக்கம் செய்தார்; கைது செய்தார்; சிறையில் அடைத்தார்; பூக்களைக் கசக்கினார்; பூக்களை காலில் போட்டு மிதித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது அந்தப் பூக்களுக்கு மறுமலர்ச்சி அளிக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது. அதை நிச்சயமாகச் செய்வோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2001 ஜூன் 1] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

சட்டம்—ஒழுங்கு கடந்த 5 ஆண்டு காலத்தில் சீர்குலைந்துவிட்டது; அடியோடு சீர்குலைந்துவிட்டது. பிரிவினைவாத, தீவிரவாத சக்திகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. சட்டம்—ஒழுங்கை மீண்டும் நிலைநாட்ட வேண்டிய மாபெரும் பொறுப்பும், தீவிரவாத, பிரிவினைவாத சக்திகளை அடக்க வேண்டிய, ஒடுக்க வேண்டிய, விரட்ட வேண்டிய மாபெரும் பொறுப்பும் எங்களுக்கு உள்ளது. T.N.L.A., T.N.R.T. போன்ற தீவிரவாத, பிரிவினைவாத அமைப்புகளை தடை செய்ய மத்திய அரசை வற்புறுத்துவோம். அண்மையில், இன்னும் சில நாட்களில் நான் பாரதப் பிரதமர் வாஜ்பேயி அவர்களைச் சந்திக்க உள்ளேன். அப்போது T.N.L.A., T.N.R.T. ஆகிய தீவிரவாத, பிரிவினைவாத அமைப்புகளை உடனடியாக தடை செய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்துவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதில் கடந்த தி.மு.க. அரசு கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடியதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்ட சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க, புதிதாகப் பொறுப்பு ஏற்று இருக்கும் இந்த அரசு ஒரு திட்டவட்டமான, தெளிவான

முடிவு எடுத்துள்ளது. வீரப்பனைப் பிடிக்க தற்போது இயங்கும் சிறப்பு அதிரடிப் படையை மாற்றியமைக்க தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. முன்னாள் D.G.P. திரு. வால்டர் தேவாரம் சிறப்பு அதிரடிப் படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. தேவாரம் இப்படையின் முதன்மைத் தலைவராகப் பணியாற்றுவார். அவருடைய மேற்பார்வையின்கீழ் காவல் துறைத் தலைவர் (Inspector-General) விஜயகுமார் பணியாற்றுவார். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மத்திய அரசின் எல்லைப் பாதுகாப்புப் படையில், அதாவது Border Security Force—ல் பணிபுரியும் I.G. திரு. விஜயகுமாரை மீண்டும் தமிழ்நாட்டிற்கு வரவழைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காவல் துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் சுய விருப்ப அடிப்படையில் பணியாற்றும் துணைக் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் இந்தப் படையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இந்தச் சிறப்பு அதிரடிப் படைக்குத் தேவைப்படும் வாகனங்கள், தொலைத் தொடர்பு வசதிகள் மற்றும் நவீன சாதனங்கள் வழங்கப்படும். இந்தச் சிறப்பு அதிரடிப் படை நன்கு செயல்பட்டு வீரப்பனை உயிரோடு பிடிக்கும் அல்லது வீரப்பனை இந்த அரசிடம் சரணடையச் செய்யும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11—25*

மேலும் காவல் துறையை நவீனமயமாக்கி, தலைசிறந்த அமைப்பாக மாற்றவும், என் தலைமையில் இருந்த முந்தைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதை நாடறியும். 1996 முதல் ஆட்சியில் இருந்த திரு. கருணாநிதி அவர்கள், காவல் துறையின் ஈரல் கெட்டுவிட்டது என்றும், பின்னர் சீரடைந்து விட்டது என்றும் வாய்ஜாலம் பேசினாரே தவிர, ஆக்கப்பூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்போது புதிதாக என் தலைமையில் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு, காவல் துறையை நவீனப்படுத்த எல்லாவித நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே அதிகமாகப் பேசப்பட்ட கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைப்பற்றி சில கருத்துக்களை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் பதவியேற்ற சில நாட்களிலேயே, சென்னைக்கு வந்து கொண்டிருந்த கிருஷ்ணா நீர் நிறுத்தப்பட்டது என்ற செய்தியை



முக்கிய நாளிதழ்களில் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். இதில் உண்மை என்னவென்றால், ஒருபோதும் கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரவேயில்லையென்பதுதான். அதற்குப் பதிலாக, வறண்டுபோன பெண்ணாற்றிலிருந்து கண்டலேறு நீர்த் தேக்கத்தில் சேமிக்கப்பட்டு, அங்கிருந்து வந்த தண்ணீர்தான் நிறுத்தப்பட்டது. இதைப்பற்றி நான் ஏற்கெனவே விளக்கம் கூறியபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், எப்படியோ தண்ணீர் வந்தது என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள் அல்லவா என்று கேட்டார். என்றைக்கோ ஒருநாள் சிறிது சிறிதாக தண்ணீர் வந்தால் சென்னை நகர மக்களுக்கு என்ன பயன்? (மேசையைத் தட்டும் ஒலி) கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் என்பது தினந்தோறும் குறிப்பிட்ட அளவு நீரை சென்னை மக்களுக்கு வழங்குவதற்காகக் கொண்டு வருப்பட்ட திட்டமாகும். ஆகவே அந்த நீர் சென்னைக்கு வந்து சேராமல், வராமல் (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அப்புறம் அவர் சொல்லட்டும். ஆகவே அந்தக் கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வராமலேயே, கண்டலேறுவில் தேங்கிக் கிடந்த மழை நீரை, எப்போதாவது ஆந்திர மாநில முதலமைச்சரிடம் கேட்டு சிறிது சிறிதாகத் திறந்துவிடப்பட்டு என்றைக்கோ ஒரு நாள் சொட்டு சொட்டாக தண்ணீர் வந்தால், இந்த மாநகர மக்களுக்கு என்ன பயன்? (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சியாளர்கள், குறுகிய அரசியல் நோக்கத்துடன் கிருஷ்ணா நீர் சென்னைக்கு, சென்னை மாநகர மக்கள் அனைவருக்கும் வந்து விட்டதாகத் தவறாகக் கூறியுள்ளனர். இதுகுறித்து நான் ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரின் நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் என்.டி. ராமாராவ் அவர்களால் அன்றையதினம் தெலுங்கு கங்கை திட்டம் என்று கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டது. இரண்டு மாநில முதலமைச்சர்களும் 18—4—1983 அன்று இதற்காக ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இந்தத் திட்டத்தை நான்கு கட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது. இந்தத் திட்டத்தில் ஸ்ரீசைலம் முதல் பூண்டிவரை மொத்தம் 379 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கால்வாய் வெட்டப்பட வேண்டும். திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாட்டின் பங்குத் தொகையாக ஆந்திர அரசுக்கு, கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக, பல்வேறு கட்டங்களில் செலுத்தவேண்டிய தொகை 760 கோடி ரூபாய் என்று அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. திட்டப்படி, நான்கு கட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளில் கடைசி

நிகழ்ச்சி, சென்னை மாநகர மேயர் தேர்தலின்போது, முந்தைய ஆட்சியாளர்களுக்கு மிகவும் உதவி புரிந்தது. ஆனால், கிருஷ்ணா நீர் மட்டும் சென்னைக்கு வரவேயில்லை. பின்னர், தமிழ்நாடு சட்டசபையில் கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனை உறுதி செய்யும் வகையில் அப்போதைய உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள், அரசு சார்பில் தயாரிக்கப்பட்ட ஒரு வண்ணமிகு புத்தகத்தை வெளியிட்டார். ஆனால், இன்றுவரை கிருஷ்ணா நீர் சென்னைக்கு வரவேயில்லை என்பதுதான் உண்மை. இப்போது உறுப்பினர் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள்.

*முற்பகல் 11—35*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணா நதிநீரைப் பற்றிச் சொன்ன 2 கருத்துக்களை மட்டும் நான் எடுத்துக்கொள்கிறேன். காரணம் நீண்ட நேரம் அவர்கள் இதுகுறித்துப் பேசியிருக்கிறார்கள். முதலிலே கிருஷ்ணா நதி தண்ணீர் சென்னைக்கு வரவேயில்லை என்பது அவருடைய குற்றச்சாட்டு. இதை ஆளுங்கட்சி ஆகிற வரையிலே அவர்கள் சொல்லியிருந்தால் பரவாயில்லை. இன்றைக்கு விவரங்களை அறியக்கூடிய நிலையிலே அமர்ந்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திற்கு ஒரு Technical Chairman போட்டிருக்கிறார்கள்; மோகன கிருஷ்ணன் — இவர்கள் காலத்திலே போட்டவர், கெட்டிக்காரர், நாங்கள் வைத்திருந்தோம். அவரையும், நம்முடைய அதிகாரிகளையும் கூப்பிட்டு — கிருஷ்ணா நதிக்கு என்று தனி டிவிஷன் இருக்கிறது. அந்த அதிகாரிகளைக் கூப்பிட்டு — கிருஷ்ணா நதித் தண்ணீர் வந்ததாக துரைமுருகன் முன்புகூட சட்டமன்றத்திலே சொல்லி இருக்கிறாரே, கிருஷ்ணா நதித் தண்ணீர் வந்ததா என்று கேட்டிருந்தால், அவர்களே உண்மையை முதலமைச்சருக்குச் சொல்லியிருப்பார்கள், வந்திருக்கிறது என்று.

இரண்டாவ்து, இன்னும் கொஞ்சம் முதலமைச்சருக்கு இருக்கிற அந்த தகுதியின் அடிப்படையில், ஆந்திர முதலமைச்சர், சந்திரபாபு நாயுடுவைக் கூப்பிட்டுக் கேட்டிருந்தால், கிருஷ்ணா நதிநீர் உள்ளபடியே கொடுத்தீர்களா என்று கேட்டிருந்தால் அவர்கள் விவரங்களைச் சொல்லியிருப்பார்கள். எனவே, அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், கிருஷ்ணா நதி தண்ணீர்தான் இங்கே வந்தது என்பதற்கு ஆதாரத்தோடு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



சக்கரபாணி என்பவர், ஆந்திர மாநில நீர்வளத் துறையினுடைய அமைச்சர். அவர் நம்முடைய P.W.D. Secretary-க்கு ஒரு fax அனுப்பினார்.

"Dear Mr. Gupta,

Kindly refer our telephonic talk on 4-8-1999 and 5-8-1999. I enclose four statements relating to supply of Krishna water for meeting the drinking water requirements of Chennai city from 1996 to 1998.

With regards,

sd./- CHAKRAPANI"

என்று போட்டுவிட்டு, 1996—ல் எவ்வளவு, எவ்வளவு தண்ணீர் வந்தது என்று ஒரு கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். இது முதல் ஆதாரம்.

இரண்டாவது, அம்மையார் அவர்கள் தெரிவித்ததைப்போலவே, முன்பு, ஜனார்த்தன ரெட்டி என்ற ஒருவர் இருந்தார். அவர் என்ன சொன்னார், இதுமாதிரிதான் சொன்னார், ஒரு பேட்டி, இது 'இந்து' பத்திரிகையிலே வந்தது.

"The former Chief Minister Janardhana Reddy has sought an Expert Committee to enquire into the manner in which the State Government is dealing with the supply of 15 tmc ft. of water to Chennai, saying that the State Government is trying to send water of Pennar to Chennai, instead of Krishna Water, to the detriment of Nellore District Farmers."

அவர், கிருஷ்ணா தண்ணீர் இல்லை. பெண்ணையாற்றுத் தண்ணீரை அனுப்பினார்கள் என்று சொன்னார். உடனே அதற்கு இவர் என்ன சொல்கிறார், சந்திரபாபு நாயுடு அவர்கள் சொன்னார்கள், இதுவும் 'இந்து' பத்திரிகையிலே வந்தது.

"Mr. Naidu rebutted Congress Leader's charge that the water being sought to be supplied to Chennai was not Krishna water, but that drawn from Pennar Basin lying in Nellore District. This is factually incorrect, he said, and pointed out that as much as 23.31 tmc ft. of Krishna water was sent through Nipulavahu Odai in the Pennar system between 1996 and 1999, out of which hardly 9.05 tmc ft. was supplied to Chennai."

சந்திரபாபு நாயுடு அவர்கள் கிருஷ்ணா நீர்தான் அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார். அடுத்து, "Chief Minister Chandrababu Naidu today described as illogical and adamant, the Congress leader's statement." அவர் சொன்னதைப்பற்றிச் சொல்கிறார். 'இந்து' பத்திரிகை என்ன எழுதுகிறது என்றால், 7—7—1997 அன்று "Krishna water flowing along the strengthened portion of Kandaleru and Poondi river" என்று எழுதப்பட்டிருக்கிறது.

'இந்து' பத்திரிகையிலே — அம்மையார் அவர்களுக்குக்கூடத் தெரியும் — இராமகிருஷ்ணன் என்பவர் சில கருத்துக்களை எழுதக்கூடியவர், இப்படிப் படித்து அவர் என்ன எழுதுகிறார் என்றால், "Krishna water flow being monitored" என்று எழுதியிருக்கிறார்.

இதைக்கூட நீங்கள் விட்டுவிட்டால் பரவாயில்லை. குடிநீர் வடிகால் வாரியம் தங்களுக்கு பணம் வேண்டும் என்பதற்காக, உலக வங்கியிலே கேட்டார்கள். World Bank Team ஸ்ரீசைலத்திலிருந்து கண்டலேறு, பூண்டி வரையிலே சுற்றிப் பார்த்தார்கள். அவர்களே சுற்றிப் பார்த்துவிட்டுச் சொன்னார்கள், அந்த Report-ல், 'Assessment and Recommendation', in page 1, 'Mission Assessment and Recommendations' - - "T.G.P. was able to provide 2.3 tmc ft. of Krishna water at the Andhra Pradesh—Tamil Nadu border in 1997. It will be able to provide 5 tmc ft. in 1998. Though the T.G.P. is not complete, this achievement was made possible by diverting Krishna water into Kundha river and recovering it in the Somaseela Reservoir on the Pennar River. This provisional arrangement shows that Andhra Pradesh will always be able to provide Krishna water to Tamil Nadu."

ஆக, ஆந்திராவில் இருக்கிற நீர்ப்பாசனத் துறைச் செயலாளர் கிருஷ்ணா நீர் எவ்வளவு, எவ்வளவு அனுப்பினார்கள் என்பதற்கு ஒரு பட்டியல் தந்தார்.

முற்பகல் 11—40

29—9—1996 முதல் 16—10—1996 வரை நாம் பெற்றது 73 மில்லியன் கன அடி. 4—7—1997 முதல் 30—11—1997 வரை அன்றைக்கு நாம் பெற்றது 2.30 டி.எம்.சி. 24—7—1998 முதல் 11—11—1998 வரை நாம் பெற்றது 2.80 டி.எம்.சி. 17—7—1999 முதல் 11—11—1999 வரை பெற்றது 1.8 டி.எம்.சி. ஆனால், அவர்கள் மொத்தம் இதுவரையிலே எவ்வளவு தண்ணீரை ஸ்ரீசைலத்திலிருந்து திறந்திருக்கிறார்கள் என்று கேட்டால், 1996—ல்





டிசம்பரில் 1.148 டி.எம்.சி. 1997—ல் 18.90 டி.எம்.சி. 1998—ல் 19.603 டி.எம்.சி. 1999—ல் 11.74 டி.எம்.சி. ஆக, ஆந்திர மாநிலத்தினுடைய நீர்ப் பாசனத் துறைச் செயலாளர், தமிழ்நாட்டில் இருக்கிற பொதுப் பணித் துறைச் செயலாளருக்கு, இந்த விவரங்கள் மூலம் அவர்கள் எவ்வளவு தண்ணீர் திறந்து விட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். உலக வங்கிக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவுக்கும் மேலாக நானே அந்தப் பகுதிக்குச் சென்று அந்தப் பகுதியிலே பார்த்துவிட்டு வந்தேன்.

இன்னொன்றை முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். 32 கி.மீ. என்று சொன்னார்கள், அது அப்படியல்ல. 13 கி.மீ. தான் வெட்டாமல் இருக்கின்றார்கள். எப்படித் தண்ணீர் வரும் என்று கேட்டார்கள். ஸ்ரீசைலத்தில், போத்திரெட்டிப்பாடு என்ற இடத்திலிருந்து தண்ணீர் எடுக்கிறார்கள். Pothireddipadu to Panagasarla regulator; Panagasarla regulator to Velugodu reservoir; Velugodu reservoir to Chennamugapalli dividing dam; dividing dam to Somaseela, Somaseela to Kandaleru; Kandaleru to Zero point, Zero point to Poondi.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கு ஒரு கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். கடந்த முறை ஆட்சி நடைபெற்றபோது எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாகப் பேசுகின்றபோது ஸ்ரீசைலத்திலிருந்து பூண்டி வரை கால்வாய்ப் பணிகள் எவ்வளவு நடந்திருக்கின்றன, அதைப் பார்த்துவிட்டு வரலாம், எல்லா எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.—க்களும் சேர்ந்து ஒரு குழுவாக உங்கள் தலைமையில் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று கேட்டார்களே, நீங்கள் அழைத்துக்கொண்டு போயிருந்தால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காதே. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்போதும் சொன்னேன். ஒரு மணி நேரம் விளக்கமாகச் சொன்னேன், நான் சொல்வதில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் அவர்கள் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று. இப்போதும் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக சில விளக்கங்களை அவர்கள் தந்திருப்பார்கள். ஸ்ரீசைலத்திலிருந்து தண்ணீர் எடுக்கிறோம். போத்திரெட்டிப்பாடு—பனகசர்லா 20.25 கி.மீ. முடிந்தது. அங்கே ஒன்று சொன்னார்கள். Power Station அமைத்திருக்கிறார்கள்

என்றார்கள். No. Power Station அங்கே இருந்து far away. தண்ணீர் வரத்துக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. Panagasarla regulator to Velugodu reservoir 7.7 k.m. முடிந்துவிட்டது. Velugodu reservoir to Brahmaharimadam dividing dam — 107.61 k.m. முடிந்துவிட்டது. Brahmaharimadam to Pennar - 45 k.m. அதிலேதான், அந்த 45 கி.மீட்டரிலே, 13 கி.மீ.தான் இப்போது வெட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிப்புலவாகு ஓடையில் இருந்தா?

**திரு. துரைமுருகன்:** இல்லை. சென்னமுகப்பள்ளி Dividing dam-லிருந்து Pennar river வரையிலே 45 கிலோ மீட்டரிலே 13 கி.மீ. மட்டும்தான் ஓரம் வெட்டவில்லை. அதற்குக் காரணம் கேட்டால், கோர்ட்டில் கேஸ் இருக்கிறது என்றார்கள். அப்படியானால், தண்ணீர் எப்படி வரும் என்று கேட்டால், அங்கே வருகின்ற தண்ணீரை divert பண்ணி, நிப்புலவாகு ஓடையில் விட்டு, அந்த ஓடை வழியாகத் தண்ணீரைக் கொண்டுவந்து பெண்ணாறில் சேர்த்துவிடுகிறார்கள். ஆக, இருப்பதைத்தான் சொல்கிறேன். அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் இவ்வளவு சொல்கிறீர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கு, கிருஷ்ணா நதிநீர் தொடர்பாக அல்ல, அம்மையார் அவர்கள் என்பது நல்ல சொல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்றே சொல்லலாம். ஏனென்றால், நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், உங்களுக்கும் சேர்த்து அவர்கள்தான் முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு வரை நடக்கவில்லை, நடக்கவில்லை என்று சொன்னார்கள். அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் அதே மாதிரி சொல்கிறார்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் சொல்லிச் சொல்லி, அதுவே எனக்குப் பழக்கமாகிப் போய்விட்டது. Sorry. I am sorry. Hon. Chief Minister என்றே சொல்கிறேன். ஆனால், இவ்வளவு வேலையும் நடக்காமல் இருக்கும்போதே முதலமைச்சர் அவர்கள் 11—1—1992—ல் ஆந்திராவில் இருந்த விஜயபாஸ்கர ரெட்டி அவர்களோடு சேர்ந்து இவர்கள் அன்றைக்கு ஒரு joint statement விட்டார்கள் ... அது என்னவென்றால்,



"Earlier we hoped that we will be able to supply water for irrigation in Andhra and drinking water for Madras by 1994. However, on account of seepages on certain items of work which are unavoidable in a work of this nature, the target date of June 1995 is accepted." என்று. ஆக, 1995—லேயே தண்ணீரைத் தருவோம் என்று விஜயபாஸ்கர ரெட்டி அவர்கள்....

முற்பகல் 11—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆகையினாலே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வந்தது கிருஷ்ணா தண்ணீர் என்று சொல்கிறீர்களா?

**திரு. துரைமுருகன்:** ஆமாம், ஆமாம். வந்தது கிருஷ்ணா தண்ணீர்தான். இதிலே நான் என்ன சொல்கிறேன் என்றால், இவ்வளவு வேலைகள் இன்றைக்கு பாக்கியிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்கிறார்களே, இவ்வளவு வேலைகள் இருக்கிறபோது 1995—லேயே தண்ணீரை நாங்கள் தந்துவிடுவோம் என்று விஜயபாஸ்கர ரெட்டியோடு அன்றைய முதலமைச்சராக இருந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதைத் தெரிவித்தார்கள். 11—1—1992—ல் அதேபோன்று இன்னொரு statement.

"I am confident that the Government of Andhra Pradesh would keep up the time schedule to enable the people of Madras to have the benefit of receiving Krishna Water by January 1996."

ஆக, 1994—ஐச் சொல்லி, 1995—ஐச் சொல்லி, கடைசியில் 1996—லாவது தண்ணீரைத் தருவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு பல இடங்களிலே கால்வாய் வெட்டாமல் இருந்தார்கள். இன்னும் அதிகமாக வெட்டாமலிருந்தார்கள். அப்போதே நம்முடைய முதலமைச்சரவர்கள் தண்ணீர் வரும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே நான் சுருக்கமாகச் சொல்வது என்னவென்றால், 13 கிலோ மீட்டர்தான் இன்னும் பெண்ணாறை ஒட்டி வெட்டவில்லை. ஆனால் அந்த 13 கிலோமீட்டர் பற்றிக் கவலையில்லை. அதை நிப்புலவாகு ஓடையிலே விடலாம் என்று உலக வங்கிகூடத் தெரிவித்திருக்கிறது. எனவே, கிருஷ்ணா தண்ணீர்தான் பெண்ணாறுக்கு வந்து,

பெண்ணாறிலிருந்துதான் கண்டலேறுக்கு வந்து, கண்டலேறிலிருந்துதான் இந்தப் பகுதிக்கு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் எவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டு, எவ்வளவு நீண்ட விரிவான விளக்கத்தை அளித்தாலும், எவ்வளவு நேரம் பேசினாலும், கிருஷ்ணா நதிநீர் இன்றுவரை சென்னைக்கு வரவில்லை என்பதுதான் உண்மை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** நீங்கள் எவ்வளவு நேரம் பேசினீர்கள். நான் பேச வேண்டும். *(கூச்சல்)* I am not yielding. *(கூச்சல்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, உட்காருங்கள். வேறு ஒன்றும் இதிலே பிரச்சினை இல்லை. வந்தது கிருஷ்ணா தண்ணீர் இல்லை..... *(கூச்சல்)* உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** பேரவைத் தலைவரவர்களே, I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களே, பிரச்சினை எதுவும் இல்லை. *(கூச்சல்)* நீங்கள் கிருஷ்ணா நீர் வந்தது என்று சொல்கிறீர்கள். முதலமைச்சர் அவர்கள் வந்தது கிருஷ்ணா நீர் அல்ல என்கிற விளக்கத்தைச் சொல்கிறார்கள். அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இதைப் பற்றி விளக்கம் சொன்னார்கள். *(கூச்சல்)* அனைவரும் உட்காருங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள் இருக்கையிலே இருந்துகொண்டு இப்படிப் பேசுவது முறையல்ல. உட்காருங்கள், அமருங்கள். *(கூச்சல்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது தண்ணீரைப் பற்றிய பிரச்சினை. இதிலே சூடு ஏற்படவேண்டிய அவசியமில்லை. இது திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த இரண்டு கட்சிகளுக்கிடையே உள்ள பிரச்சினை அல்ல. தமிழ்நாடு, ஆந்திரா



என்ற இரண்டு அரசுகளுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதைப் பற்றி, அதிலே கிடைத்த தண்ணீர் கிருஷ்ணா தண்ணீர் அல்ல என்று ஒரு கருத்தும், கிருஷ்ணா நீர்தான் இன்ன வழியாகக் கொண்டு வரப்பட்டது என்று இன்னொரு கருத்தும் பேசப்பட்டிருக்கிறது. ஆக, அதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர அரசைக் கேட்டு, யார் சொல்வது உண்மை என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் நீண்ட நேரம் பல விளக்கங்களை இங்கே அளித்தார். அதற்கெல்லாம் குறுக்கீடுகள் இல்லாமல் இருந்ததுபோல என்னையும் பதில் சொல்ல இங்கே அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் அவர் கேட்ட கேள்வி, நீங்கள் இப்போது ஆட்சிக்கு வந்து கோப்புகளைப் பார்த்து இந்தத் தகவல்களைச் சொல்கிறீர்களா அல்லது ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்களா, ஏற்கெனவே சொல்லியிருந்தால் பரவாயில்லை என்கிறார். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தின நாளேடுகளை, பத்திரிகைகளைப் படிக்கிறாரோ என்னவோ தெரியவில்லை. கடந்த பல ஆண்டுகளாக நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது கிருஷ்ணா நதிநீர் வரவில்லை. தி.மு.க. அரசு மோசடி செய்துவிட்டது, மக்களை ஏமாற்றிவிட்டது என்றுதான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்போதும் சொல்கிறேன். கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் என்பது நாள்தோறும் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட அளவு நீர் சென்னையில் பெறப்பட வேண்டும். அந்த நீர் இன்றுவரை வரவில்லை.

*முற்பகல் 11—50*

கிலோ மீட்டரைப் பற்றி அவர் இங்கே ஒரு மறுப்பைத் தெரிவித்தார். கோப்புகளைப் பார்த்துவிட்டு இந்தத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை வரும்போது முழு விவரங்களை இந்த அவையில் தெரிவிக்கிறோம். ஆனால் நான் ஏற்கெனவே தெரிவித்ததில் எந்த மாற்றமும் இல்லை. மெயின் கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறதே தவிர இணைப்புக் கால்வாய்கள் இன்னும் வெட்டப்படவில்லை, கட்டப்படவில்லை என்பது உண்மை. குறிப்பிட்ட நீளத்திற்கு—நான் 35 கிலோ மீட்டர் என்றேன், அவர் 14 கிலோ மீட்டர் என்றார். ஆனால் 14 கிலோ மீட்டர் வரை கால்வாய் வெட்டப்படவில்லை என்று அவரே

ஒப்புக்கொள்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) கால்வாயே வெட்டப்படாதபோது தண்ணீர் எப்படி வரும்? (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், அவர் ஒன்றைச் சொன்னார். 1992—ல் நான் முதலமைச்சராக இருந்தபோது ஓர் அறிக்கையை வெளியிட்டேன். 1994—ல் ஓர் அறிவிப்பை வெளியிட்டேன், 1992—ல் ஹைதராபாத்தில் பேட்டி அளித்தபோது 1994—ல் கிருஷ்ணா நதிநீர் கிடைத்துவிடும் என்று நம்புகிறோம், பின்னர் 1995—ல் கிடைத்துவிடும் என்று நம்புகிறோம் என்று நான் சொன்னதாகச் சொல்கிறார். வரும், நம்புகிறோம் என்றுதான் சொன்னேனே தவிர, வந்துவிட்டது என்று இவர்களைப் போல நான் சாதிக்கவில்லை. மக்களை ஏமாற்றவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

1992—ல் நான் ஆந்திரத்திற்குச் சென்றபோது, ஹைதராபாத் சென்றபோது ஆந்திர முதலமைச்சரோடு கலந்து பேசி அங்கே ஒரு பேட்டி அளித்தது உண்மைதான். அன்றைய சூழ்நிலையில் பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. அப்போது திரு. ஜனார்த்தன் ரெட்டி அவர்கள் ஆந்திர முதலமைச்சராக இருந்தார். இரண்டாண்டு காலத்திற்குள் 1994—க்குள் திட்டப் பணிகளை முடித்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் அன்றைக்கு அறிவிப்பு செய்தேன். அதன் பிறகு, குறுகிய காலத்திற்குள்ளேயே திரு. ஜனார்த்தன் ரெட்டி அவர்கள் மாற்றப்பட்டு திரு. விஜயபாஸ்கர ரெட்டி அவர்கள் ஆந்திர முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அதன் பின்னர் மீண்டும் நான் ஹைதராபாத் சென்று இந்தத் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டும் என்று அவரோடு பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போதும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. அதன் பின்னர் சிறிது காலத்திற்குள் தேர்தல் வந்தது. விஜயபாஸ்கர ரெட்டி அவர்களும் சென்றுவிட்டார். என்.டி. ராமாராவ் அவர்கள் ஆந்திர முதலமைச்சராக வந்தார். மீண்டும் நான் ஹைதராபாத் சென்று அன்றைய ஆந்திர முதல்வர் என்.டி. ராமாராவ் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போதும் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டும் என்று அவர்களை வற்புறுத்தினேன். ஆனால் சிறிது காலத்திற்குள்ளே அவரும் மாற்றப்பட்டு, திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் ஆந்திர முதலமைச்சராக வந்தார். இப்படி ஆந்திர முதலமைச்சர்கள் மாறிக்கொண்டே இருந்த காரணத்தால்தான் ஆந்திராவில் நடைபெற வேண்டிய பணிகள் தாமதப்பட்டனவே தவிர இங்கே தமிழ்நாட்டுப் பகுதியில் நாங்கள் செய்ய வேண்டிய பணிகளில் எந்தவிதமான தாமதமும் ஏற்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)





ஆந்திராவில் ஆட்சி மாற்றம் அடிக்கடி ஏற்பட்ட காரணத்தினால் முதலமைச்சர் மாறிக்கொண்டே இருந்ததனால் அங்கே காலதாமதம் ஏற்பட்டது. அதனால் 1994—ல் தண்ணீர் கிடைத்துவிடும். 1995—ல் தண்ணீர் கிடைத்துவிடும் என்று நம்புகிறோம் என்று சொன்னது நடைபெறவில்லை. அதற்கு நாங்கள் எப்படி பொறுப்பாக முடியும்? நான் எப்படி பொறுப்பாக முடியும்?

சில கடிதங்கள் வந்ததைப் பற்றி இங்கே மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆந்திர முதலமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறார், ஆந்திர நீர்ப் பாசன அமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறார், ஆந்திர நீர்ப் பாசனத் துறைச் செயலாளர் இந்த அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்றெல்லாம் குறிப்பிட்டார். இந்தக் கடிதங்களில் கிருஷ்ணா நதிநீர் திறந்துவிடப்பட்டது என்று குறிப்பிட்டார்கள் என்றும் அவர் இங்கே சொன்னார்.

இங்கே மக்களை ஏமாற்றுவதற்காக ஒரு மோசடி விழாவே நடத்திவிட்டு அதில் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவே கலந்துகொண்டுவிட்டு கிருஷ்ணா நதிநீரை ஒரு வெள்ளிக் குடத்தில் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, பின்னர் வரவில்லை என்று அவரே எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ஆந்திர முதலமைச்சரோ, ஆந்திர அமைச்சரோ, ஆந்திர அதிகாரிகளோ இந்த மோசடியில் பங்குபெற்ற போது அவர்களே இந்த விழாவில் கலந்துகொண்டபோது கிருஷ்ணா நதிநீர் வந்துவிட்டதாக அவர்களே இங்கே சொன்னபிறகு ஆந்திரத்திலிருந்து கிருஷ்ணா நதிநீர் வரவில்லை என்று அவர்களே எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? அதனால்தான் அவர்கள் ஜாக்கிரதையாக கடிதப் போக்குவரத்தில் கிருஷ்ணா நதிநீர், கிருஷ்ணா நதிநீர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் எழுதிய மாத்திரத்திலேயே கிருஷ்ணா நதிநீர் இங்கே வந்துவிடவில்லை. இன்னும் வரவில்லை. வரவில்லை என்பதுதான் உண்மை. (குறுக்கீடுகள்) I am not yielding.....

**திரு. துரைமுருகன்:** அப்படி என்றால் ஆந்திர மாநிலத்து முதலமைச்சர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்களே மோசடி செய்தார் என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்கிறாரா?

*முற்பகல் 11—55*

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு மாநில முதலமைச்சரைப் பற்றி நான் எந்த அவதூறான கருத்தையும் இங்கே தெரிவிக்க விரும்பவில்லை.

ஆனால், முந்தைய ஆட்சியாளர்கள், சென்னை மாநகர மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள் என்பது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வந்துவிட்டது என்று கூறுவது மாபெரும் மோசடியாகும். மக்களை ஏமாற்றுவதற்காக, உள்ளாட்சி அமைப்புத் தேர்தலில், Chennai Corporation தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) மக்களை ஏமாற்றுவதற்காக ஒரு விழா நடத்தப்பட்டது. அதில் கிருஷ்ணா நதிநீர் வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அந்த விழாவில் ஆந்திர முதலமைச்சர் கலந்துகொண்டார் என்பது உண்மை. இது ஊரறிந்த உண்மை. உலகறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தி.மு.க. செய்த மோசடியில் ஆந்திர முதலமைச்சருக்கும் பங்கு உண்டு என்பதை மறுக்க முடியாது. இன்றுவரை ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வரவில்லை என்பதுதான் உண்மை. கால்வாய்ப் பணிகள் இன்னும் முடிவடையவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் எவ்வளவுதான் சாதித்தாலும் கிருஷ்ணா நதிநீர் பெறப்படவில்லை என்பதுதான் உண்மை.

மக்களின் துயரங்களைப் போக்க என்னுடைய அரசு முன்னுரிமை அடிப்படையில் விரைவாகச் செயல்பட்டு கிருஷ்ணா நதிநீரை சென்னைக்குக் கொண்டு வருவதற்கு முழு மூச்சுடன் செயல்படும் என்று உறுதி அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆந்திர அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இத்திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்துவதற்கு அவர்களைக் கட்டாயப்படுத்துவேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சென்னை மாநகரில் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்துடன் கூடுதலாகப் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்படும். தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் போதிய அளவு குடிநீர் கிடைக்கச் செய்வது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளில் ஒன்றாகும். இந்தத் தேர்தல் வாக்குறுதியைக் கண்டிப்பாக நிறைவேற்றுவோம் என்று இத்தருணத்தில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, புதிய வீராணம் திட்டம் பற்றி சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1991 ஆம் ஆண்டு என் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி



அமைந்தபோது, சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க புதிய வீராணம் திட்டம் என்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்த விரும்பினேன். இந்தத் திட்டம் 1993 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. அதாவது நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அடிக்கடி சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது.

எல்லோருக்கும் தெரிந்த விவரம், சென்னைக்குக் குடிநீர் மூன்று ஏரிகளிலிருந்து வருகிறது. Red Hills, பூண்டி, சோழவரம் என்ற மூன்று ஏரிகள்தான் நீர்த்தேக்கங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. அங்கிருந்துதான் சென்னைக்குக் குடிநீர் வருகிறது. நான் முதலமைச்சராக இருந்த அந்த ஐந்தாண்டு காலத்தில் அடிக்கடி கன மழை பெய்தது. அப்போது இந்த மூன்று ஏரிகளும் நிரம்பிவிட்டன. அப்போது அந்த ஏரிகள் எல்லாம் நிரம்பி உபரி நீர் பெருக்கெடுத்ததால் அந்த ஏரிகளின் தடுப்புச் சுவர்கள் உடைந்துவிடுகின்ற அபாயம் இருந்ததால், உபரித் தண்ணீர் கடலில் திறந்துவிடப்பட்டது. அப்போது, இவ்வளவு தண்ணீர் வீணாகக் கடலில் போய்க்கொண்டிருக்கிறதே, கடலில் கலக்கிறதே, இங்கே மக்கள் மற்ற நேரங்களில் குடிக்கத் தண்ணீர் இன்றி அவதிப்படுகிறார்களே என்று சொல்லி, அந்த நீர்த்தேக்கங்களின் கொள்ளளவை அதிகப்படுத்த என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்ய உத்தரவிட்டேன்.

முதலில், அந்த நீர்த்தேக்கங்களைத் தூர்வாரச் செய்தேன். அதற்காக உத்தரவிட்டேன். அந்த மூன்று நீர்த்தேக்கங்களும் தூர்வாரப்பட்டன. ஆனால், அதன் பின்னரும், மீண்டும் கன மழை பெய்தபோது மீண்டும் ஏரிகள் எல்லாம் நிரம்பி, மீண்டும் அந்த உடைப்பைத் தடுப்பதற்காக உபரி நீரை கடலுக்குத் திறந்துவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது இன்னொரு யோசனை சொன்னேன். இந்த ஏரிகளின் சுவர்களின் உயரத்தை அதிகப்படுத்தலாம் என்று சொன்னேன். அதுவும் செய்யப்பட்டது. ஆனால், அதன் பின்னால்கூட, அந்த மூன்று ஏரிகளிலும் தண்ணீர் நிரம்பி, மழை பெய்தபோதெல்லாம் கடலுக்குத் திறந்துவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போதுதான் எனக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டது. இந்த மூன்று நீர்த்தேக்கங்களோடு இன்னும் கூடுதலாக இரண்டு நீர்த்தேக்கங்களை இங்கே ஏற்படுத்தலாம், சென்னைக்கு அருகே ஏற்படுத்தலாம் என்று ஒரு திட்டம் தீட்டி அதற்கான பணிகளையும் நான் தொடங்கினேன். அதோடு புதிய வீராணம் திட்டத்தையும் செயல்படுத்தலாம் என்று எண்ணினேன். இதற்காக ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அக்குழு வீராணம் ஏரியின் அமைவிடம்,

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [2001 ஜூன் 1

நீர்மட்டத்தின் ஆழம், நீர் ஆதாரம் ஆகியவை குறித்து ஆய்வு செய்து அறிக்கை தந்ததன் அடிப்படையில் 464 கோடி ரூபாய் செலவில் புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த 11—8—1993 அன்று தமிழக அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நண்பகல் 12—00

உலக வங்கியின் பரிசீலனைக்குப் பின்னால் இத்திட்டம் 1638.04 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. எனது அரசு மேற்கொண்ட முயற்சியின் காரணமாக மிகக் குறுகிய காலத்திலேயே இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்திய அரசு மற்றும் உலக வங்கியின் இசைவு 1995—லே பெறப்பட்டது. ஆனால், அ.இ.அ.தி.மு.க.—க்குப் பிறகு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த தி.மு.க. அரசு இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மேல் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் இன்றையதினம், சென்னை மாநகர மக்கள் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டிற்கு ஆளாகியிருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் விரும்பியிருந்தால், அவர் 1996—லே ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஓராண்டு காலத்திற்குள்ளாகவே புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்தி முடித்திருக்க முடியும். ஆனால், அவர் அந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டார், கைவிட்டுவிட்டார். காரணம், வீராணம் என்று சொன்னால், மக்களுக்கு நினைவுக்கு வருவது சர்க்காரியா கமிஷன் அறிக்கை, அதிலே விலாவாரியாகக் குறிப்பிடப்பட்டிருந்த வீராணம் ஊழல். வீராணம் திட்ட ஊழல். (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன், இருங்கள், கொஞ்சம் இருங்கள். இந்தத் திட்டத்தை, புதிய வீராணம் திட்டத்தை மட்டும் செயல்படுத்தியிருந்தால் இந்நேரம் சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் கேலன் தண்ணீர் கிடைத்திருக்கும். தண்ணீர்த் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போயிருக்கும். ஆனால், முந்தைய ஆட்சியாளர்களின் அலட்சியப் போக்குக்கு மக்கள் இந்தத் தேர்தலில் தக்க பாடம் புகட்டியுள்ளார்கள். இந்த அரசு சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கும் முறையில் புதிய வீராணம் திட்டத்தை முனைப்புடனும், முழுமையான ஈடுபாட்டுடனும் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டேன். சென்னைக்குக் குடிநீர் வழங்க புதிய நீர்த்தேக்கங்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு நில ஆர்ஜிதப் பணிகளும் தொடங்கப்பட்டிருந்தன. ஆனால், இது நாங்கள் தொடங்கிய திட்டம் என்பதற்காகவே முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி இந்தத் திட்டத்தை செயல்படுத்தாமல் கைவிட்டுவிட்டார். அந்தப் பணியையும் இந்த அரசு விரைந்து மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 ஜூன் 1] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீர்த்தேக்கங்கள் உருவாக்கி சென்னை நகருக்கு நீர் கொண்டு வருவதைப் பற்றி எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், வீராணம் என்று சொன்னாலே, சர்க்காரியா கமிஷன் நினைவுக்கு வரும் என்ற காரணத்திற்காக முன்னாள் முதலமைச்சர் கைவிட்டுவிட்டார் என்ற ஒரு கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன், சர்க்காரியா கமிஷன் விசாரணையில் வீராணத்திலே ஊழல் நடைபெற்றதாக எந்தவொரு இடத்திலும் நிரூபிக்கப்படவில்லை என்றுதான் எழுதப்பட்டிருக்கிறதே தவிர, வீராணம் ஊழல் நிரூபிக்கப்பட்டுவிட்டது என்று எந்த இடத்திலும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கடமையைச் செய்துகொண்டிருக்கிறார். அவர் தலைவருக்கு அவர் ஆற்ற வேண்டிய கடமையைச் செய்து கொண்டிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி). இதையெல்லாம் அவர் சொல்லவில்லையென்றால் ஏன் சொல்லவில்லை என்று கேள்வி கேட்கப்படக்கூடும். (கூச்சல்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் சார்பாகப் பேச மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இருக்கிறார், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கிறார். நீங்கள் அமருங்கள், அவர்கள் கேட்டார்கள், விளக்கம் சொன்னார்கள். முதலமைச்சர் பேசியதிலே ஒரு விளக்கம் சொல்ல வேண்டுமென்று துணைத் தலைவர் விரும்பினார், விளக்கம் அளிக்கப்பட்டது. அத்தோடு நிறுத்துங்கள் (கூச்சல்). பரிதி, நீங்கள் ஏற்கெனவே துணைத் தலைவராக இருந்தவர், உங்களுக்கு அவையின் விதிமுறைகள் மிக நன்றாகத் தெரியும். இன்னும் சொல்லப் போனால் என்னைவிட நன்றாகத் தெரியும். நீங்கள் 5 ஆண்டுகாலம் துணைத் தலைவராக இருந்தவர்கள். துணைத் தலைவராக இருந்தவர் விதிமுறைக்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்கிறார் என்ற பெயரைப் பெற வேண்டுமேதவிர, இப்படிப்பட்டவரா துணைத் தலைவராக இருந்தார் என்ற பெயரைப் பெற்றுவிடக்கூடாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலே எப்போதுமே குடிநீர்த் தட்டுப்பாடு என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. அதற்காகத்தான் வீராணம் திட்டம் கொண்டு வர வேண்டும், கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் கொண்டு வர வேண்டுமென்ற எண்ணங்கள் எல்லாம் அவ்வப்போது மாநில அரசுக்கு வந்துள்ளன.

*பிற்பகல் 12—05*

நான் மாண்புமிகு உறுப்பினர்களிடம் கேட்க விரும்புவதெல்லாம், நான் பகீரத முயற்சி செய்து 1993 ஆம் ஆண்டில் புதிய வீராணம் திட்டம் அறிவித்து அதற்கு உலக வங்கியின் அனுமதியைப் பெற்றேன். 1993—ல்தான் முதன் முதலாக புதிய வீராணம் திட்டத்தை நான் அறிவித்தேன். அதன்பிறகு நான் பெரும் பாடுபட்டு, பகீரத முயற்சி செய்து, மத்திய அரசை வற்புறுத்தி உலக வங்கியின் கடன் உதவியைப் பெற்றேன். உலக வங்கியும் இந்தத் திட்டம் சாத்தியமானதுதானா, இதன் சாத்தியக்கூறுகள் எப்படிப்பட்டவை என்பதையெல்லாம் ஆராய பல குழுக்களை அனுப்பியது. அந்தக் குழுக்கள் எல்லாம் வந்து இந்தத் திட்டத்தைப் பற்றி ஆராய்ந்து பார்த்து, இது சாத்தியமானதுதான், வீராணம் ஏரியில் தண்ணீர் இருக்கிறது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் தினந்தோறும் சென்னை மாநகருக்கு 40 மில்லியன் கேலன் தண்ணீர் கிடைக்கும் என்று அவர்கள் உறுதியாகக் கூறியதால், உலக வங்கி அனுமதி அளித்தது. இப்போது நான் குறிப்பிட்டதைப்போல, 1600 கோடிக்கு மேல் அவர்கள் கடன் கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டு, 1995—லேதான் உலக வங்கி ஒப்புதல் அளித்தது. 1995—ன் இறுதியில் இந்த அனுமதி பெறப்பட்டது. உடனேயே பணிகளைத் தொடங்கினோம். அதற்காக Global tender float செய்தோம்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக முந்தைய ஆட்சியில் செய்ததுபோல, கான்கிரீட் பைப்புகளைப் பயன்படுத்தாமல், ஸ்டீல் பைப்புகளைப் பயன்படுத்தலாம் என்று Global tender விட ஏற்பாடு செய்தோம். அந்த நேரத்தில்தான், தேர்தல் வந்துவிட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஆயத்தப் பணிகள் எல்லாம் முடிந்துவிட்டிருந்த நிலையில், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி ஏன் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை என்று பதில் கூறமுடியுமா? 5 ஆண்டு காலத்தில் இந்தத் திட்டத்தையும் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை, ஏன் செயல்படுத்தவில்லை? எல்லாம் தயாராக



இருந்தது, எல்லா அடிப்படை வேலைகளையும் நான் செய்து முடித்து வைத்திருந்தேனே, விட்ட இடத்திலிருந்து அந்தத் திட்டத்தை தொடர்ந்திருந்தால் ஓராண்டு காலத்திற்குள் முடித்திருக்க முடியும். அதற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் 40 மில்லியன் கேலன் தண்ணீர் சென்னை மாநகருக்குக் கிடைத்திருக்கும். இன்றைக்குத் தண்ணீர் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் இல்லாமல் இருந்திருக்கும். ஏன் அவர்கள் அதைச் செய்யத் தவறினார்கள்?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் இந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் கோபமாகவே கேட்கிறார்கள். நாங்கள் ஆட்சி செய்தபோது இருந்த அதிகாரிகள்தான் இப்போதும் இருக்கிறார்கள். இதைப்பற்றி நாங்கள் விவாதித்தோம். அமைச்சரவையிலே விவாதித்தோம். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், அந்தத் திட்டத்திற்கு அவர்கள் ஒப்புதல் பெற்றார்களே தவிர, காவிரி நீர்ப் பிரச்சினை தீர்ந்தால்தான் வீராணத்திற்குத் தண்ணீர் கிடைக்குமே தவிர, காவிரி நீர்ப் பிரச்சினை தீராமல் வீராணத்திற்கு 365 நாட்களும் தண்ணீர் கிடைக்கும் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. எனவே, இந்த வீராணம் திட்டத்தை நிறைவேற்றுவதைவிட வேறுசில வழிமுறைகளைக் காணலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள். இந்த ஆட்சி கொண்டுவந்த திட்டம் என்பதற்காக நிச்சயம் நாங்க்ள் கைவிடவில்லை என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்கிறேன். அதிகாரிகள் மட்டத்திலே நீங்கள் விசாரியுங்கள், அந்தக் கருத்து சொல்லப்பட்டதா, இல்லையா என்பதை விசாரித்துப் பாருங்கள். இந்த அவையிலே எப்போது வேண்டுமானாலும் அதைப்பற்றி விவாதிக்க தி.மு.க. தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி. ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லுகின்ற கருத்து ஏற்புடையது அல்ல. நம் மாநில அதிகாரிகளைவிட, உலக வங்கியின் நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வந்து இந்தத் திட்டத்தை ஆராய்ந்து பார்த்து, இது சாத்தியமானதுதான், ஆண்டு முழுவதும் வீராணம் ஏரியில் தண்ணீர் இருக்கிறது என்று அவர்கள் அறிக்கை கொடுத்த பிறகுதான் உலக வங்கி இந்தக் கடனை அளிக்க முன்வந்தது. ஆகவே, வீராணம் என்றாலே வீராணம் ஊழல் மக்கள் நினைவுக்கு வருகிறது (மேசையைத் தட்டும் ஒலி). அந்த வீராணம் ஊழலின் நாயகர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி என்பதால்தான்

இந்தத் திட்டத்தைக் கைவிட்டார் என்பதை மூடி மறைக்க முடியாது. இப்போது அதனால் எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். அன்றையதினம் உலக வங்கி 1603 கோடி ரூபாயை இதற்காக நிதி ஒதுக்கீடு அளிக்க ஒத்துக்கொண்டது, கடன் உதவி அளிக்க ஒத்துக்கொண்டது. அதைச் செயல்படுத்தாமல் விட்டதால், மேலும் 6 ஆண்டுகள் உருண்டோடிவிட்டதால், இப்போது மீண்டும் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமானால், மீண்டும் மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டும். Estimates have to be reworked. இன்றைய காலகட்டத்தில் விலைவாசிகள் எல்லாம் ஏறிவிட்டதால், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமானால் இன்னும் பல ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். இவ்வளவு சிரமத்தையும் இந்த ஆட்சிக்கு வைத்துவிட்டு போயிருக்கிறார்கள். நான் ஏதோ கோபமாகப் பேசுகிறேன் என்கிறார். எனக்கு ஒன்றும் கோபம் இல்லை. இது ஒன்றும் எனது தனிப்பட்ட பிரச்சினை இல்லை. இது மக்கள் பிரச்சினை. குடிநீர் பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, என்னுடைய வருத்தம் எல்லாம், ஒரு நல்ல திட்டத்திற்கு அரும்பாடுபட்டு உலக வங்கியின் கடனுதவியைப் பெற்ற பிறகு, வெறும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த நல்ல திட்டத்தைச் செயல்படுத்தாமல் விட்டுவிட்டார்களே என்ற வேதனைதானே தவிர எனக்கு கோபம் இல்லை.

*பிற்பகல் 12—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்கள் கொண்டுவந்த வீராணம் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றவில்லை என்பதற்காக கடந்த கால அரசு உள்நோக்கத்தோடு செயல்பட்டதாக, அவர் கொண்டுவந்த காரணத்தினால் கைவிட்டதாகச் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதைப்போல கைவிடுவதாக இருந்தாலும் அதற்கும் அந்த அரசுக்கு உரிமை இருக்கிறது. ஒன்றை கைவிட்டுவிட்டது குற்றம் என்று சொல்ல உரிமை இருப்பதைப்போல, கைவிடுவதற்கும் உரிமை இருக்கிறது. எந்தக் காரணத்தினால் கைவிட்டார்கள் என்பதற்குப் பல விளக்கங்கள். நான் நேரடியாக அந்தத் துறையில் தொடர்பு இல்லாதவன் என்று சொன்னாலும்கூட, வீராணம் நீர்ப்பாசனத்தைப் பெறுகிற





விவசாயிகளுடைய எதிர்ப்பு பல தீர்மானங்களாக — எங்களுடைய நீர்ப்பாசனத்தைக் கெடுத்துவிடாதீர்கள் என்று — எங்களுக்கு வந்தது,

இரண்டாவது, வீராணம் தண்ணீரை சென்னைக்குக் கொண்டு போவதாக இருந்தால், இடையிலே இருக்கிற எங்களுக்குக் குடிநீர் வழங்கிவிட்டுத்தான் சென்னைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்ற இன்னொரு கருத்து வந்தது. இந்த இரண்டையும் மீறி செயல்படுத்துவதாக இருந்தால், காவிரி நீரைப் பற்றிய நடுவர் தீர்ப்புக்குக் காத்திருக்கிற ஒரு சூழ்நிலையில் காவிரி நீரைத்தான் வீராணம் மூலமாகப் பயன்படுத்துகிறோம் என்ற காரணத்தால், அதிலே சில இடர்ப்பாடுகள் வரும் என்று நாங்கள் நம்பி, நடுவர் தீர்ப்பு நடைமுறைக்கு வந்து, தண்ணீர் நமக்கு உறுதியானால்தான் அதை எடுக்க முடியும் என்ற ஒரு நிலையில் உலக வங்கி நிதி தருவதாக இருந்தாலும்கூட அந்தக் கடனுக்குத் தகுந்த பலன் கிடைக்காது என்ற அந்த ஐயப்பாட்டின் காரணமாக அது மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், முதலமைச்சர் அவர்கள் வீராணம் ஊழல் என்ற அந்தச் சொல்லைச் சொல்லி, அதன் காரணமாக முதலமைச்சர் கருணாநிதி அதை மேற்கொள்ளவில்லை என்றார்கள். வீராணம் ஊழலை சர்க்காரியா கமிஷன் நிரூபிக்கவில்லை. ஒருவேளை நிரூபிக்கிற நிலைமை இருந்தால் தாங்கள் அந்தச் சொல்லைப் பயன்படுத்துவதிலே எனக்கு வேறுபாடு கிடையாது. நிரூபிக்கப்படவில்லை என்பதை சர்க்காரியா கமிஷன் அறிக்கை அடிப்படையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷனுடைய அறிக்கை நூலகத்திலே இருக்கிறது. அவைக்குத் தரப்பட்டிருக்கிறது. வீராணம் ஊழலில் ஈடுபட்ட காரணத்தால், பாதிக்கப்பட்ட காரணத்தினால் தற்கொலை செய்துகொண்ட சத்தியநாராயணா பற்றியும், அவர்களுடைய மருமகன் புருஷோத்தமனுடைய வாக்குமூலமும் அந்த சர்க்காரியா கமிஷனுடைய தீர்ப்பிலே இருக்கிறது. நூலகத்திலே இருக்கிறது, எடுத்துப் படித்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர் தாவா என்பது நீர்ப்பாசனத்தோடு தொடர்புடையதேயன்றி, குடிநீருக்குத் தொடர்புடையதல்ல. நானும்கூட

பாண்டியாறு புன்னம்புழா நீரை நீர்ப்பாசனத்திற்காகக் கேட்டபோது நீர்ப்பாசனத்திற்காகக் கொடுக்க (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். பன்னீர்செல்வம், கொஞ்சம் அவை விதிகளை மதியுங்கள். அமர்ந்து கொண்டு அப்படிப் பேசுவது முறையல்ல (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. வி.கே. லட்சுமணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** நீர்ப்பாசனத்திற்காக அளிக்க முடியாது. ஆனால் குடிநீருக்காக எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று கேரள அரசு எழுதிய கடிதம் என்னிடத்திலே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்தப் புதிய வீராணத்திற்கு பூர்வாங்க செலவிற்கு 9 கோடி ரூபாய் செலவு செய்து, அன்றைக்கு அதைத் தொடர்ந்திருந்தால் பயன்பட்டிருக்கும். அதைத் தொடராத காரணத்தினால் அந்த 9 கோடி ரூபாய் வீணாகப் போய்விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு லட்சுமணன் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். குடிநீருக்கு முதல் உரிமை என்பதையும், அதை யாரும் தடுக்க முடியாது என்பதையும் நான் மனமார ஏற்றுக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலேதான் முதலிலே ஆலோசனை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், வீராணத்திற்குத் தண்ணீர் வந்து சேருவதிலேயே பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. வீராணத்திற்குத் தண்ணீர் வருவது எல்லாம் குடிநீர் என்று கருதமாட்டார்கள். அந்த வீராணத்து தண்ணீரை யார் பயன்படுத்துவது என்பதிலேயும் பிரச்சினை. ஆகவே, அது வேறு. கருத்து வேறுபாடுகள் எந்தப் பிரச்சினையிலும் ஏற்படலாம். அரசு அதற்கேற்ப முடிவு செய்யலாம். அது உள்நோக்கத்தோடு செய்யப்பட்டதல்ல என்ற வரையில் நான் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12—15*

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வீராணம் திட்டத்தைப் பற்றி மட்டும் பேசிவிட்டு, சர்க்காரியா கமிஷன் விவரங்களுக்குள் போக வேண்டாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விடுவதாக இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித்



தலைவர் அவர்களும் விடுவதாக இல்லை. ஆகவே, ஒன்றை நான் அனைவருக்கும் நினைவுபடுத்த விரும்புகிறேன். நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் தெளிவாக காண்ட்ராக்டர் சத்தியநாராயணாவைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த காண்ட்ராக்டர் சத்தியநாராயணா என்பவர் யார்? ஆரம்பத்தில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் ஆட்சியில் இருந்தபோது முதன்முதலாக வீராணம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று திட்டமிடப்பட்டபோது அந்த வீராணம் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காண்ட்ராக்ட் அளிக்கப்பட்டவர்தான் காண்ட்ராக்டர் சத்தியநாராயணா என்பவர். அப்போது எழுந்த குற்றச்சாட்டு என்னவென்றால் அவரிடம் அதிகப்படியான லஞ்சம் பெறப்பட்டதால் அவருக்கு அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து அந்த லஞ்சத்தை அவர் முன்னாள் முதலமைச்சருக்குக் கொடுத்துவிட்டதால், திட்டத்தைச் செயல்படுத்த முடியாமல் காண்ட்ராக்டர் சத்தியநாராயணா தற்கொலை செய்துகொண்டார்; வைர மோதிரத்தைத் தின்று பரிதாபமாகச் செத்தார் என்பதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

வீராணம் திட்டத்தில் நடைபெற்றது ஊழலா, இல்லையா என்பதற்கு அத்தாட்சியாக, சாட்சியாக இன்றுகூட வீராணத்திலிருந்து சென்னை வரை அன்றைக்கு வாங்கப்பட்ட கான்கிரீட் பைப்புகள் சாலையோரமாகக் கிடக்கின்றன; பரிதாபமாகக் கிடக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இவையெல்லாம் வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட செய்திகள். இங்கே புதியதாக விளக்கங்கள் கூற முற்படுவது தேவையற்றது. இதை மக்கள் நம்பப்போவது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியநாராயணா அவர்கள் இறந்துவிட்டார்கள்; வைர மோதிரத்தை அவர் சாப்பிட்டு தற்கொலை செய்துகொண்டார்கள்; அது இதற்காகத்தான் என்று முதலமைச்சர் சொல்கிறார். அப்படியானால் புருஷோத்தமன்— அந்த சர்க்காரியா கமிஷன் விசாரணை நடைபெற்ற போது டெல்லியிலே நானும் இருந்தேன்— எங்கேயாவது ஒரு இடத்தில், 'நாங்கள் கருணாநிதிக்கு லஞ்சம் கொடுத்தோம்' என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறாரா? அதை ஏற்றுக்கொண்டு, சர்க்காரியா கமிஷன் அவர் பணம் கொடுத்தது, லஞ்சம் கொடுத்தது உண்மைதான்; ஆகவே

கருணாநிதி குற்றவாளிதான் என்று எங்கேயாவது அந்த அறிக்கையிலே சொல்லி, இடம் பெற்றிருக்கிறதா? அப்படியென்றால் தயவுசெய்து இந்த அவையிலே அது குறித்து ஒரு நாளைக்கு விவாதம் நடத்த நீங்கள் தயாராக இருந்தால், நாங்களும் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புருஷோத்தமன் சர்க்காரியா கமிஷனுக்கு வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். அவர் அஃபிடவிட் கொடுத்திருக்கிறார். அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். அந்த ஊழலைப் பற்றி. அவருக்கு ஏற்பட்ட இழப்பு, பாதிப்பு அனைத்தையும் குறிப்பிட்டிருக்கிறார். அவையிலே அந்தக் குறிப்பு இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இழப்பு ஒரு காண்ட்ராக்டருக்கு ஏற்படுவது என்பது வேறு. ஆனால், கலைஞருக்கு, முதலமைச்சராக இருந்த கலைஞருக்குப் பணம் கொடுத்ததால்தான் அந்த இழப்பு ஏற்பட்டது என்று எங்கேயாவது கொடுத்திருக்கிறாரா? அதுபற்றி ஒரு நாளைக்கு விவாதிப்போம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களுக்கு லஞ்சம் கொடுத்த காரணத்தால் ஏற்பட்ட பாதிப்பு என்று (மேசையைத் தட்டும் ஒலி) தெளிவாக அஃபிடவிட்டில் புருஷோத்தமன் அவர்கள் கூறியிருக்கிறார். அது அவையிலே இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு லஞ்சம் கொடுத்ததால்தான் திரு. சத்தியநாராயணா அவர்கள் திட்டத்தை முடிக்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டார் என்ற வாக்குமூலம் அஃபிடவிட்டில் இருக்கிறது என்பதை நானும் ஊர்ஜிதப்படுத்துகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்த அவையில் அதைப்பற்றி விவாதிக்கத் தயாரா, அப்படியானால் ஒரு நாள் இதற்காக ஒதுக்குங்கள், இங்கே விவாதிப்போம் என்கிறார். இந்த அவையின் நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. இந்தப் பிரச்சினைகள், இதுகுறித்த விளக்கங்கள் கூறப்பட வேண்டிய இடம் இந்த அவை அல்ல; கூறப்பட வேண்டிய இடம் நீதிமன்றம். (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றத்தில் தக்க நடவடிக்கைகள் எடுக்க நாங்கள் ஆவன செய்யவுள்ளோம் என்பதை





மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, வளர்ச்சி விகிதம் பற்றி சில கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில், அதாவது 1991 முதல் 1996 வரை சராசரி வருட வளர்ச்சி விகிதம் 5.93 சதவீகிதமாக இருந்தது. திரு. கருணாநிதி அவர்களின் ஆட்சிக் காலமான 1996 முதல் 2001 வரை இது 5.60 சதவிகிதமாகக் குறைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

NABARD—க்கு எழுதப்பட்ட கடிதத்தைப் பற்றி பலர் இங்கே பேசினார்கள். கடந்த 5 ஆண்டு காலமாக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி தொடர்ந்து சட்டப் பேரவைக்கு உள்ளேயும் வெளியேயும் உண்மைக்குப் புறம்பான ஒரு தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதாவது நான் NABARD—க்கு ஒரு கடிதம் கையெழுத்து போட்டுக் கொடுத்ததாகவும், அந்தக் கடிதத்தில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கூட்டுறவுக் கடன்களையோ, வட்டியையோ இந்த அரசு தள்ளுபடி செய்யாது என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் திரும்பத் திரும்பத் தெரிவித்திருக்கிறார்.

எனக்கு அரசு கோப்புகளில் உள்ள விவரங்கள் கிடைக்க வழி இல்லாததால், என்னால் இதுவரையில் அதற்கு மறுப்புத் தெரிவிக்க இயலாமல் போனது. தற்போது அரசு கோப்புகளை ஆராய்ந்தபோது, நான் அம்மாதிரியான எவ்வித கடிதமும் NABARD-க்கு எழுதவில்லை என்பது தெரிய வந்துள்ளது. ஆகவே, திரு. கருணாநிதி அவர்கள் வேண்டுமென்றே சட்டசபையிலும், பொது மக்களிடையேயும் தவறான கருத்துக்களைப் பரப்பி வந்துள்ளார் என்பது தெள்ளத் தெளிவாகிறது. அதே கருத்தினை வலியுறுத்தி 28—5—2001 அன்று சட்டசபையில் திருவாளர்கள் பேராசிரியர் க. அன்பழகன், திரு. ஆற்காடு வீராசாமி மற்றும் திரு. கோ.சி. மணி ஆகியோரும் பேசியுள்ளார்கள்,

*பிற்பகல் 12—20*

அடுத்து, உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். வருகிற செப்டம்பர் மாதத்தில் எல்லா உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்த இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்ற மகிழ்ச்சிகரமான அறிவிப்பை இந்த நேரத்தில் நான் செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [2001 ஜூன் 1

மேலும் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களை எல்லாம் கலைப்பதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. Primary Co-operative Societies அனைத்திற்கும் செப்டம்பர் மாதத்தில் தேர்தல்கள் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் மேம்பாட்டிற்காகப் பல திட்டங்களை இந்த அரசு அறிவித்துள்ளது. 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவசமாக மிதிவண்டி வழங்குதல், அரசாங்கக் கல்லூரிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண்களுக்கு மேல் பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி வழங்குதல், மகளிருக்கான சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்க 5 இலட்சம் பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல் போன்ற திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் செல்லும் இடமெல்லாம் பெண்கள், குறிப்பாக கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்கள் ஒரு கோரிக்கையை என்னிடத்தில் வைக்கிறார்கள். அதாவது, பெண்களுக்கு கிராமப்புறங்களில் கழிப்பறை வசதி செய்து தர வேண்டும் என்ற கோரிக்கைதான் நான் செல்லும் இடமெல்லாம் என்னிடம் வைக்கப்படுகிறது. ஆகவே, பெண்களுக்கு கிராமப்புறங்களில் கழிப்பறைகள் தேவைப்படும் இடங்களிலெல்லாம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுநர் உரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் இருமொழிக் கொள்கையை முனைப்புடன் செயல்படுத்துவோம் என்று அறிவித்திருக்கிறோம். இந்த இருமொழிக் கொள்கையில் எங்களுடைய உண்மை நிலையையும், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் இரட்டை வேடத்தையும் நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர், தமிழவேள், அய்யன் திருவள்ளுவருக்கு அடுத்து வந்த வள்ளுவர் என்றெல்லாம் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியைத் துதிபாடுவது வழக்கம். ஆனால், அவருடைய தமிழ்ப் பற்றைப் பற்றி ஒரு சுவையான உண்மையை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கென்று ஒரு புத்தகம் வாங்கப்பட்டது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற



2001 ஜூன் 1] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

உறுப்பினர்களுக்கு இலவசமாக Constitution of India என்ற புத்தகம் வழங்கப்படும். அதற்காக திரு. கருணாநிதி அவர்கள் ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்ட புத்தகம்தான் இது.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவையில் ஒரு புத்தகத்தைக் காண்பித்தார்.)

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காக இந்தப் புத்தகத்தின் 250 பிரதிகளை வாங்கி வைத்திருக்கிறார்கள். இதைப் பார்த்தீர்களானால், முழுக்க, முழுக்க இந்தியில் உள்ளது. இந்தி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இருங்கள். அதனால் சட்டப் பேரவை முதன்மைச் செயலாளர் அவர்கள் இதைப் பார்த்ததும் திகைத்துப்போய் இந்தப் புத்தகங்களை வைத்துக்கொண்டு என்ன செய்வது, ஒரு பக்கம் ஆங்கிலத்தில் இருக்கிறது. அடுத்த பக்கம் இந்தியில் இருக்கிறதே, இந்தப் புத்தகங்களை வழங்கலாமா என்று கேட்டார். அப்போது என்னிடம் இந்தப் பிரச்சினை வந்ததால் நான் ஆலோசனை கூறினேன். இந்தப் புத்தகங்களை அப்படியே வைத்துவிடுங்கள். இதை வழங்க வேண்டாம், இதை வழங்கினாலும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்தி படிக்கத் தெரியாது, படிக்க முடியாது, அதனால் எந்தப் பயனும் இருக்காது என்று சொல்லி ,பேரறிஞர் அண்ணாவின் இரு மொழிக் கொள்கைக்கேற்ப தமிழிலும், ஆங்கிலத்திலேயும் இந்திய அரசமைப்புச் சட்டம் பற்றிய புத்தகத்தை வாங்கி, இந்தப் பிரதிகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு வாங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சிக் காலத்தில் வாங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, உண்மையான தமிழ்ப் பற்றுடையவர்கள் யார், உண்மையாக பேரறிஞர் அண்ணாவின் இரு மொழிக் கொள்கையைச் செயல்படுத்துபவர்கள் யார் என்பதை மக்களே புரிந்துகொள்ளலாம் என்றும் எண்ணுகிறேன்.

பிற்பகல் 12—25

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னவராக 5 ஆண்டு காலம் செயல்படுகிற வாய்ப்பு எனக்கிருந்தது. சட்டமன்றத்தில் உறுப்பினர்களுக்கு எதை வழங்குவதாக இருந்தாலும் என்னிடத்திலே தெரிவிக்க வேண்டிய கடமை ஒன்று உண்டு. இங்கே ஏற்கெனவே சண்முக சுப்பிரமணியம் என்கிற, செயலாளராக இருந்த ஒருவர், தமிழில் அரசமைப்புச் சட்டத்தை மொழி

பெயர்ப்பு செய்து — இதைவிட பெரிய புத்தகம் — அனைவருக்கும் அந்தப் புத்தகத்தை வழங்குவதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தை வழங்கியதற்கு என்ன காரணம் — என்னிடத்தில் அனுமதி பெறவில்லை -- இனாமாகக் கிடைத்ததா, மத்திய அரசு அனுப்பியதா என்ற விவரம்...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனாமாக வரவில்லை, யாரும் அனுப்பவும் இல்லை. முந்தைய அரசு பணம் கொடுத்து வாங்கியிருக்கிறது.

**பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சி இந்தப் புத்தகங்களை வாங்குவதற்காக 36,000 ரூபாய் செலவழித்திருக்கிறது என்ற தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை தனி உரிமை உடையதாகக் கருதப்படுகிறது. பேரவையின் சார்பில் உள்ள நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்குவதைக்கூட பேரவைக் குழுதான் தீர்மானிக்கிறது. அந்தக் குழுவில் தீர்மானித்து எதை நிறைவேற்றினார்கள் என்பது எனக்கே தெரிவிக்கப்படவில்லை. அப்படி இருக்குமானால் அது தவறுதான்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு நடந்துவிட்டதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் இங்கே பேசுகின்றபோது உசிலம்பட்டியில் செயல்படுத்த வேண்டிய நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். இந்த 58 கிராம கால்வாய் திட்டம் என்பது இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினை விரைந்து முடிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஏற்கெனவே இயங்கி வந்து நடுவில் நிறுத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை கள்ளர் சீரமைப்புத் துறை சார்பாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தார். அவ்வாறு ஏற்பாடு



செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது. அவரும் இங்கே பேசிய இன்னும் பல மாண்புமிகு உறுப்பினர்களும், மாவட்டங்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களுக்கும் தலைவர்களின் பெயர்களைச் சூட்ட மாட்டோம் என்ற ஒரு வாக்குறுதியை அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே இன்று இந்த அவையில் ஓர் அறிவிப்பை வெளியிடுகிறேன். மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் தலைவர்களின் பெயர்கள் பழையபடி சூட்டப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும் மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது, நாடு சுதந்திரம் அடைந்து, விடுதலை பெற்று 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில் இன்றுகூட பல பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

இதைப் பற்றி சில விவரங்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். 1991—ல் என்னுடைய தலைமையில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி அமைந்தபோது பல குடியிருப்புகளுக்கு, குறிப்பாக, ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் எதுவும் இல்லை என்ற தகவல் எனக்குத் தரப்பட்டது. அப்போது ஒரு Time-bound Scheme, அதாவது ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டிய ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து குறிப்பிட்ட காலத்திற்குள் ஒவ்வொரு ஆதிதிராவிட குடியிருப்பிற்கும் 100—க்கும் மேற்பட்டவர்கள் வசிக்கின்ற ஒவ்வொரு குடியிருப்பிற்கும் ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரமாவது தரப்பட வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து அதை வெற்றிகரமாகச் செயல்படுத்தி முடித்துவிட்டோம். ஆகவே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பைவிட்டு இறங்கியபோது குடிநீர் ஆதாரமே இல்லாத குடியிருப்பு என்று எதுவும் இருக்கவில்லை.

*பிற்பகல் 12—30*

ஆனால், இதிலுள்ள உண்மை என்னவென்றால் புதிய புதிய குடியிருப்புகள் தொடங்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஒரு குடியிருப்பில் ஆரம்பத்தில் 50 குடும்பங்கள் இருக்கின்றன. காலப்

போக்கில் அது பெருகி 100 குடும்பங்கள் ஆகிவிடுகிறது. அப்போது ஒரு 25 பேர் அங்கிருந்து பிரிந்து சென்று ஒரு புதிய குடியிருப்பை ஆரம்பிக்கிறார்கள்; புதிய குடியிருப்பை ஏற்படுத்துகிறார்கள். இத்தகைய புதிய குடியிருப்புக்கள் தமிழகமெங்கும் ஆங்காங்கே உருவாகிக் கொண்டேயிருக்கின்றன. புதிய குடியிருப்புக்கள் உருவாகும்போது இத்தகைய புகார்களெல்லாம் எழுகின்றன. எங்கள் பகுதிக்கு விளக்கு வசதி இல்லை, சாலை வசதி இல்லை, குடிநீர் வசதி இல்லை என்ற புகார்கள் எழுகின்றன. ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், 1996—ல் திரு. கருணாநிதி அவர்கள் தலைமையில் இங்கே ஆட்சியமைந்த பிறகு உருவாக்கப்பட்ட புதிய குடியிருப்புக்கள் கவனிப்பாரின்றிக் கைவிடப்பட்டுள்ளன. ஆகவேதான் இன்று பல இடங்களில் குடிநீர் ஆதாரங்கள் இல்லை என்ற புகார் எழுந்துள்ளது. 1996—லேயிருந்து 2001 வரை உருவாக்கப்பட்ட புதிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை. ஆகவே, இப்போது மீண்டும் நான் ஒரு வாக்குறுதியை அளிக்கிறேன். 100—க்கும் மேற்பட்ட ஜனத்தொகை இருக்கின்ற ஒவ்வொரு குடியிருப்புக்கும் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரத்தையாவது ஏற்படுத்திக் கொடுப்போம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற வாக்குறுதியை இங்கே அளிக்கிறேன்.

**திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி அவர்கள். (குறுக்கீடு) உங்களுக்குத்தான். (குறுக்கீடு) அதிக நேரமா? விளக்கம் மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) விளக்கம் மட்டும் கேளுங்கள். தனிக் கச்சேரி எல்லாம் நடத்தக் கூடாது. விளக்கம் மட்டும் கேளுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991—லிருந்து 1996—வரை இன்றைய முதலமைச்சர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டில் அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதி அளித்துவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போது எடுத்த கணக்கின் அடிப்படையில் நாங்கள் தொடங்கிய திட்டத்தை எண்ணிப் பார்க்கிறபோது மீண்டும் மீண்டும் விடுபட்டதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் அவர்கள் ஆட்சியிலேயே அவர்கள் எடுத்த கணக்கின்படி ஏறத்தாழ 10,000 கிராமங்கள் விடுபட்டிருந்ததையும் இணைத்து அன்றைக்கு கணக்கில் பார்க்கிறபோது 5 ஆண்டு காலத்தில் அவர்கள் குடிநீர் வசதி, விசைப் பம்புத் திட்டத்தின்கீழ் வந்ததே 10,564



தான். இன்னும் சுருக்கமாகச் சொல்லப் போனால், அதற்குப் பிறகு 13—5—1996—க்குப் பிறகு 31—1—2001 வரை இன்றைக்குக் கணக்குப் பார்த்தால் ஏறத்தாழ 26,657 குடியிருப்புக்களுக்கு நாங்கள் குடிநீர் வழங்கியிருக்கிறோம். அவர்கள் இப்போது சொல்வதுபோல் தண்ணீர் வராமல் இருக்கிறது, பற்றாக்குறை இருக்கிறது, கிராமங்கள் விடுபட்டிருக்கின்றன என்பதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், அவர்கள் சொல்வதைப்போல கருணாநிதி ஆட்சியில் இவை விடுபட்டுப்போயின, மாண்புமிகு ஜெயலலிதா அவர்கள் (குறுக்கீடுகள்) ஆட்சியிலே நிறைவேற்றிவிட்டோம், அதை அவர்கள் புறக்கணித்துவிட்டார்கள் என்று சொல்வது நியாயம்தானா (குறுக்கீடுகள்) என்பதை அருள்கூர்ந்து சிந்திக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

**திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, நான் இதைத் தெளிவாக ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியத்தின்போது தெரிவிக்கிறேன். இப்போது முதலமைச்சர் அவர்களுக்கு நான் வழி விடுகிறேன். இதற்கு அன்றைக்கு எனக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட கோப்புக்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. ஆகவே, பட்ஜெட் கூட்டத் தொடரில் இந்தத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை எடுத்துக்கொள்ளப்படும்போது முழுமையான விவரங்களை இந்த அரசும் தெரிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்லவிட்டீர்களே, உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலன் காக்க கோலப்பன் கமிட்டி பரிந்துரைகளை ஏற்க வேண்டுமென்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். கோலப்பன் கமிட்டி பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக விவசாயிகளின் உயிரோட்டம் காவிரி நதி நீரோட்டத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை இவ்வரசு நன்கு அறியும். நடப்பாண்டில் விவசாயத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து காவிரி நீர் வருகிற ஜூன் 12 ஆம் தேதியன்று திறந்து விடப்படும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த 5 ஆண்டு காலத்தில் தமிழகத்தில் சுற்றுலாத் துறையில் கவனம் செலுத்தப்படவேயில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர் ஹேமசந்திரன் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். கன்னியாகுமரியிலும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் சுற்றுலா வளர்ச்சிக்கு இந்த அரசு தனிக் கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12—35

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது, இன்னும் அதிகமான அணைகளைக் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அணைகள் கட்டுவதால், நிலநடுக்கம் ஏற்படுகிறது என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள். அணைகள் கட்டுவதால் அதிக அளவில், இந்தியாவில் பூகம்பங்கள், நில நடுக்கம் ஏற்படுகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆகவே, இதை மனதில் வைத்துக்கொண்டு, புதிய அணைகள் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, வேலூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நிகழ்ந்த தீ விபத்துக்கள் குறித்து C.B.C.I.D.விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரமாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசுகின்றபோது, பல கோரிக்கைகளை எடுத்து வைத்தார். அவற்றில்



கொப்பரைத் தேங்காயை மாநில அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்றும், தேயிலை நியாய விலைக் கடைகள் மூலம் விற்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். அமைச்சரவைக் கூட்டத்தில்

இக்கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு தக்க முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், ஆளுநர் உரையில் உள்ள மின்சக்தி உற்பத்தி குறித்த புள்ளி விவரம் தவறு என்று கூறினார். பிள்ளைபெருமாள் நல்லூர் மின் திட்டம் 330 மெகாவாட் திறனோடு மார்ச் மாதம் செயல்பட ஆரம்பித்துள்ளது என்றும் சொன்னார். ஆளுநர் உரையில் உள்ள comparison 1991 முதல் 1996 வரை உள்ள நிதி ஆண்டுகளுடன் 1996 முதல் 2001 வரை உள்ள நிதி ஆண்டுகளோடுதான். முந்தைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், அதாவது 1991 முதல் 1996 ஆம் ஆண்டுவரை 968 மெகாவாட் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டு கமிஷன் செய்யப்பட்டது. ஆனால் 1996 முதல் 2001 ஆம் ஆண்டுவரை தி.மு.க. ஆட்சியில் 458 மெகாவாட் உற்பத்தித் திறன்தான் கமிஷன் செய்யப்பட்டது. மேலும் பிள்ளைபெருமாள் நல்லூர் திட்டம், நடப்பு நிதி ஆண்டில் அதாவது 26—4—2001 அன்று முதல்தான் செயல்பட ஆரம்பித்தது. 17—5—2001—ல் இருந்து 28—5—2001 வரை இந்த மின் உற்பத்தி நிலையம் மூடப்பட்டது; shut down செய்யப்பட்டது. ஆகவே, இது புள்ளிவிவரத்தில் சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசும்போது, நீங்கள் உங்கள் தேர்தல் அறிக்கையில் அளித்துள்ள வாக்குறுதிகளையெல்லாம் உடனே செயல்படுத்த முடியாது என்பது எங்களுக்குத் தெரியும் என்று மிகவும் நியாயமான ஒரு கருத்தைச் சொன்னார். 5 ஆண்டு காலத்தில் இவற்றையெல்லாம் நீங்கள் செய்து முடித்தால், நாங்கள் மகிழ்ச்சி அடைவோம் என்றும் கூறினார். 5 ஆண்டு காலத்தில், நாங்கள் அளித்துள்ள வாக்குறுதிகள் அத்தனையையும், அனைத்தையும் நிச்சயமாக நிறைவேற்றுவோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டார்கள். 1996 ஆம் ஆண்டு, தேர்தலின்போது, விவசாயிகளுக்கு, கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் தரப்படும் என்ற வாக்குறுதியை தி.மு.க. அளித்தது. ஆனால், 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில்,

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் வாக்குறுதியிலே அது அளிக்கப்படவில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டதைப்போல 10 சதவீதம் பிழிதிறன் உள்ளதற்கு 1000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அவர்கள் தேர்தல் வாக்குறுதியிலே என்றுதான் குறிப்பிட்டார்கள். நீங்கள் குறிப்பிடுவது தேர்தல் அறிக்கை என்று கருதுகிறேன். தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில், திருச்சியில் தீர்மானம் போடப்பட்டது. வாக்குறுதியாக வழங்கப்பட்டது என்றுதான் முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** ஏற்கெனவே, அவர்கள் கட்சியினுடைய தீர்மானத்திலே டன்னுக்கு 1000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி இருந்தார்கள். சட்டமன்றத்திலும், அவர்களுடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், அறிவித்த வாக்கைக் காப்பாற்றவில்லை என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—40*

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது, பவர் புராஜக்ட்டைப் பற்றி, புதிய அனல் மின் திட்டங்களைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார். எங்கள் ஆட்சிக் காலத்தில் 1991 முதல் 1996 வரை பல புதிய அனல் மின் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் அதன் பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அவற்றில் ஒரு புதிய திட்டத்தைக்கூட ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் கமிஷன் செய்ய அவர்கள் அனுமதிக்கவில்லை.

அதற்கு ஏதேதோ விளக்கங்களை மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே அளித்தார்கள். அப்போது அவர் எடுத்து வைத்த ஒரு வாதம் என்னவென்றால், எதற்காக இந்தத் திட்டங்களை நாங்கள் கமிஷன் செய்யவில்லையென்றால். அந்த உபரி மின்சாரம் தமிழகத்திற்குத் தேவையில்லை என்றார். இப்படி ஒரு முன்னாள் அமைச்சர் சொல்வது எனக்கு வியப்பாக உள்ளது. உபரி மின்சாரம் தேவையில்லை என்று பொறுப்புள்ள ஆட்சியாளர்கள் யாருமே சொல்லமாட்டார்கள்.





தமிழகத்தில் அந்த உபரி மின்சாரம் தேவையில்லையென்றால், எப்போதுமே மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கு நாம் அந்த உபரி மின்சாரத்தை விற்க முடியும். அதன்மூலம் அதிக வருவாயை தமிழகத்திற்கு ஈட்ட முடியும். தலைவரைச் சுற்றி வருவது தவறு இல்லை என்றார் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள். தலைவரைச் சுற்றி வருவது தவறு இல்லைதான். ஆனால், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருந்தவர், தமிழகத்தைச் சுற்றி வந்து மக்கள் நல்வாழ்வைக் கவனிப்பதற்குப் பதிலாக (மேசையைத் தட்டும் ஒலி) மக்களை அடியோடு புறக்கணித்துவிட்டு, மறந்துவிட்டு, எந்நேரமும் அவர் தலைவரையே சுற்றிக் கொண்டிருந்ததுதான் தவறு என்று நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையிலே சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஆந்திரத்திற்கும். கர்நாடகத்திற்கும் உபரி மின்சாரத்தை உற்பத்தி செய்து விற்பதற்குக்கூட முயற்சி செய்தோம். எங்களுக்குக் கிடைத்த தகவல் என்னவென்றால், — மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் நிறைய அவகாசம் அவருக்கு இருக்கிறது, விசாரிக்கலாம் — ஏற்கெனவே ஆந்திர அரசாங்கம் மத்திய அரசுக்குச் சொந்தமான மின் நிலையங்களில் வாங்கிய மின்சாரத்திற்குப் பணமே கொடுக்கவில்லை என்ற ஒரு தகவல் தெரிவிக்கப்பட்டது. கர்நாடக அரசுக்கும் மின்சாரம் தேவையே தவிர, அதை வாங்கிக் கொண்டால் மின்சாரத்திற்குத் தேவையான பணத்தைக் கொடுப்பார்களா என்ற சந்தேகம் வந்தது. அந்தச் சூழ்நிலையில்தான், மத்திய அரசு Power Trading Corporation என்ற ஒன்றை உருவாக்கி, அதன் மூலமாக அவர்கள் எங்கு வேண்டுமானாலும் அதை விற்கலாம், அதன் மூலம் நம்முடைய மாநிலத்திற்கு — இங்கே தொடங்கப்பட்டால் அந்தத் திட்டங்களுக்குத் தேவையான பணம் கிடைக்கலாம் என்ற அந்த அடிப்படையில்தான் அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டதே தவிர, மின்சாரத் திட்டங்கள் எதையும் நாங்கள் தடை செய்யவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் திட்டங்களைத் தடை செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். இதைப்பற்றிய விவரங்களைச் சேகரித்து, இந்தத் துறையின் மானியக் கோரிக்கை இந்த அவையில் எடுத்துக்கொள்ளப்படும்போது, முழு விவரங்களை இந்த அவையில் தெரிவிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறையை எடுத்துக்கொண்டால், 1991 முதல் 1996 வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பல சாதனைகளைப் படைத்தோம். ஆனால், பின்னர் வந்த தி.மு.க. ஆட்சியில் நான் கொண்டு வந்த திட்டங்களையெல்லாம், நான் கொண்டு வந்த தொழிற்சாலைகளை, பெருந் தொழில்களையெல்லாம் அவர்கள் கொண்டு வந்ததாக இங்கே தம்பட்டம் அடித்தார்கள். ஃபோர்டு கார் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அது நான் கொண்டுவந்த பெருந்திட்டம். ஹூண்டாய் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஹூண்டாய் கார் நிறுவனத்தின் சேர்மன் நான் முதலமைச்சராக இருந்தபோது, மூன்று முறை என்னை வந்து சந்தித்தார். எல்லாம் பேசி முடிக்கப்பட்டு, அந்தத் திட்டத்திற்கான M.o.U. கையெழுத்திடுவதற்காக ஒரு தேதியும் குறிக்கப்பட்டது. அதாவது 18 மார்ச் 1996—ல் இந்த M.o.U. கையெழுத்திடுவதாக இருந்தது. அதற்குள் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அன்றையதினம் தலைமைத் தேர்தல் ஆணையர் மிகவும் கண்டிப்பாக ஒரு code of conduct—ஐ enforce செய்தார். தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு ஒரு மாநில அரசு, எந்தப் புதிய ஒப்பந்தத்திலும் கையெழுத்துப் போடக்கூடாது என்று அவர் அன்றைக்குச் சொன்னதால், இந்தத் திட்டத்தை நாங்கள் அறிவிக்க முடியவில்லை. அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியவில்லை. ஆனால், பின்னர் அந்தத் திட்டம் வந்த பிறகு, ஏதோ தாங்கள் கொண்டு வந்ததாக, இங்கே அவர்கள் தெரிவித்தார்கள்.

*பிற்பகல் 12—45*

அதைப்போலவே, இங்கே B. & C. Mill பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள்கூடப் பேசினார்கள். நாங்கள் உண்மையாகவே இதில் சாதனை படைத்திருக்கிறோம். நீண்ட நாட்களாக மூடிக்கிடந்த B. & C. Mill — அதாவது பின்னி ஆலையை 1993 ஆம் ஆண்டு நாங்கள் திறக்க ஆவன செய்தோம்.

அதன்பிறகு, அந்த ஆலை செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சரான உடனேயே, 1996—ல் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே மீண்டும் பின்னி ஆலை மூடப்பட்டுவிட்டது. இன்றுவரை மூடிக் கிடக்கிறது. மீண்டும் அதைத் திறக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் கோரிக்கை வைத்தார். முன்பு வெறும் சிக்கலாக இருந்தது; இப்போது இடியாப்பச் சிக்கல் ஆகிவிட்டது. இதில் என்னென்ன



222390

சிக்கல்கள் இருக்கின்றனவோ, அவற்றை எப்படி விடுவிப்பது என்பதைப் பற்றியெல்லாம் ஆராயாமல் எந்த வாக்குறுதியையும் இந்த நேரத்தில் நான் இங்கே அளிக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார். நானும், ஆளுங்கட்சித் தரப்பில் இருந்தும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து தெரிவித்த சில கருத்துக்களுக்கு அவர், நாங்கள் சாதனைகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்; அவர்கள் வேண்டுமானால் வேதனைகளைச் சொல்லட்டும் என்றார். அவர்களுடைய சாதனைகளைப் பற்றி இங்கே விரிவாகச் சொன்னார்கள். நாங்கள் வேதனைகளைப் பற்றிச் சொன்னோம் என்கிறார்.

ஆமாம், வேதனைகளைப்பற்றித்தான் சொல்கிறோம். சட்டம்—ஒழுங்கு தமிழ்நாட்டில் அடியோடு கடந்த ஐந்தாண்டு காலத்தில் சீர்குலைக்கப்பட்ட வேதனை; ரேஷன் கடைகள் மூடப்பட்டுக் கிடக்கின்ற வேதனை; தேயிலை விவசாயிகள் அனுபவிக்கின்ற வேதனை; எங்கே பார்த்தாலும் மதக் கலவரங்கள், சாதிக் கலவரங்களால் ஏற்பட்ட வேதனை; கோயம்புத்தூர் குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட வேதனை; திருப்பத்தூர் சந்தன மரக் கிடங்கிற்குத் தீ வைக்கப்பட்டதால் ஏற்பட்ட வேதனை; தலித் பெண் சித்ரா காவல் நிலையத்தில் மானபங்கப்படுத்தப்பட்டதால் தற்கொலை செய்துகொண்ட கொடுமை; மாணவி சரிகா ஷா காலிகளால் eve-teasing செய்யப்பட்டதால் மரணம் அடைந்த துயரம்; இவையெல்லாம் வேதனைகள்தான், சாதனைகள் அல்ல. இவற்றைத்தான் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள், தங்களது ஆட்சிக் காலத்தின் சாதனைகள் என்று குறிப்பிடுகிறார்களோ, என்னவோ, தெரியவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆட்சியிலே நடைபெற்ற சாதனைகளையும் நான் எடுத்துக் காட்டினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே படித்துக் காட்டினார்கள். மாணவி....

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் படித்துக்காட்டவில்லை. அவர் பேசும்போதே நான் குறிப்பு எழுதிக்கொண்டேன். அதைத்தான் இங்கே வாசித்தேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பு எழுதிக்கொண்டு பதில்



V21:2'P01 P01.3.2

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2001 ஜூன் 1

சொன்னதாகச் சொன்னார். நான் சொல்கிறேன்; அவர்கள் சொன்ன ஒவ்வொரு நிகழ்ச்சியிலேயும் கடந்த கால அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, யார், யார் குற்றம் செய்தார்களோ, அவர்களுக்குத் தண்டனையும் வாங்கிக் கொடுத்திருக்கிறது. கல்லூரி மாணவி eve-teasing-லே யார், யார் சம்பந்தப்பட்டிருந்தார்களோ அவர்கள் எல்லாம் சிறைச்சாலையிலே இருக்கிறார்கள். இப்படி பல நிகழ்ச்சிகளிலே கடந்த கால அரசு கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிகழ்ச்சிகளெல்லாம் ஏதோ இன்றைய ஆளுங்கட்சிக்கு மட்டும் வேதனையான நிகழ்ச்சிகள் அல்ல. தமிழ்நாட்டிலே ஏற்பட்ட சில வேதனையான நிகழ்ச்சிகளுக்குக் கடந்த கால ஆட்சியும் தன்னுடைய வேதனையைத் தெரிவித்திருக்கிறது. நடவடிக்கையும் எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுகின்றபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் Revenue Deficit—ஐப் பற்றிக் குறிப்பிட்டார். நாங்கள் குறிப்பிட்டது Fiscal Deficit—ஐப்பற்றி. ஆகவே, ஏற்கெனவே அறிவித்ததுபோல், இந்த அவையில் தமிழ்நாட்டின் நிதிநிலை குறித்து ஒரு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்படும். அதில் எல்லா உண்மைகளும் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால், காலத்தின் அருமை கருதி, இத்தோடு என் உரையை, பதிலுரையை நிறைவு செய்யலாம் என்று எண்ணுகிறேன். இன்னும் சொல்ல பல கருத்துக்கள் இருக்கின்றன. தெரிவிக்க வேண்டிய பல தகவல்கள் உள்ளன. அவற்றையெல்லாம் பட்ஜெட் கூட்டத் தொடரில் தெரிவிப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நிறைவாக, எங்கள் தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்திருப்பதற்கிணங்க, தமிழகத்தில் ஏழ்மை, வறுமை, இல்லாமை இல்லாத நிலையை உருவாக்கவும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் தமிழ்நாட்டில் அறவே இல்லை என்ற உன்னத நிலையை அடையவும் இந்த அரசு பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு ஏழையெளிய மக்களின் அரசாகச் செயல்படும் என்றும், இந்த ஆட்சி உண்மையான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியாக,



2001 ஜூன் 1] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

மக்கள் ஆட்சியாகத் திகழும் என்றும், மக்கள் எங்கள் மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்துகொள்வோம் என்றும் உறுதி அளித்து அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

பிற்பகல் 12—50

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் கட்சித் தலைவர்களின் பெயர்களை வைக்கக்கூடாது என்று முதன்முதலிலே தெரிவித்தவர், வேண்டுகோள் விடுத்தவர். எங்களுடைய தலைவர் மூப்பனார் அவர்கள். அவருடைய வேண்டுகோளை ஏற்றுத்தான், கடந்த கால அரசு அதனைக் கைவிட்டது. அதைத் தொடர்ந்து நாங்களும் நிச்சயமாக மீண்டும் போக்குவரத்துக் கழகங்களுக்கோ அல்லது மாவட்டங்களுக்கோ தலைவர்கள் பெயர்களைச் சூட்டமாட்டோம் என்று முதலமைச்சர் அறிவித்ததற்கு என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல ஒரே ஒரு கோரிக்கை. நான் வைத்த கோரிக்கைகளிலே முக்கியமாக தேங்காய் கொப்பரையைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அந்தக் கோரிக்கையை இரண்டாகப் பிரித்துச் சொன்னேன். ஒன்று, கொப்பரைக் கொள்முதல் ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. இன்னொன்று, கேரள அரசாங்கம் தேங்காயை விலைக்கு வாங்குவது. தேங்காயை விலைக்கு வாங்கி அதிலேயிருந்து கொப்பரையை எடுக்கிறார்கள். பிறகு அதனை அவர்கள் விற்றுக்கொள்கிறார்கள். அதேபோல, இந்த அரசாங்கமும் தேங்காயை மூன்று தரங்களாகப் பிரித்து, சிறியது, நடுத்தரம், பெரியது என்று மூன்றாகப் பிரித்து, அதனை 4, 4—50, 5—00 ரூபாய்க்கு வாங்கலாம் என்று சொன்னாலும் சரி, அல்லது ஒரு 50 பைசாவைக் குறைத்துக் கொண்டாலும் சரி, நீங்கள் அப்படி வாங்குவீர்களேயானால், நிச்சயமாக விவசாயிகள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள். நிறுத்தப்பட்டிருக்கிற கொப்பரைத் தேங்காய் கொள்முதலையும் உடனடியாகத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொண்டு, இதிலே இருக்கிற பணப் பாக்கியையும்

நிச்சயமாக விவசாயிகள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள். நிறுத்தப்பட்டிருக்கிற கொப்பரைத் தேங்காய் கொள்முதலையும் உடனடியாகத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொண்டு, இதிலே இருக்கிற பணப் பாக்கியையும் உடனடியாக விவசாயிகளுக்குப் பட்டுவாடா செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக தமிழக முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் ஸ்ரீபெரும்புதூர் பகுதியிலே சிப்காட் என்கின்ற நிறுவனம் மூலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்தியிருக்கிறது. அது, அங்கு இருக்கின்ற விவசாயிகளுக்கு மிகப் பெரிய மோசடியாக நடந்திருக்கிறது என்பதை நான் என்னுடைய பேச்சிலே குறிப்பிட்டிருந்தேன். அம்மையார் அவர்கள் அதைப்பற்றி ஏதேனும் ஆறுதலான வாசகங்களைக் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் இந்த அவையில் மிகவும் நிறைவானதொரு உரையை ஆற்றினார்கள். அப்போது பல கோரிக்கைகளை அவர் எடுத்து வைத்தார். அதில் இப்போது தெரிவிக்கப்பட்டதும் ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் தெரிவித்த கோரிக்கைகள் எல்லாம், எடுத்து வைத்த கோரிக்கைகள் எல்லாம், அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை ஏற்று, மாவட்டங்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களுக்கும் தலைவர்களுடைய பெயர்களைச் சூட்டமாட்டார்கள் என்று அறிவித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, நான் இடைத் தேர்தலிலே நின்ற நேரத்திலேயும். இப்போது தேர்தலிலே





நின்ற நேரத்திலேயும் முதலமைச்சர் அவர்கள் அங்கே வந்து என்னை வெற்றிபெறச் செய்வதற்காக வாக்குகளைக் கேட்டார்கள். அந்த உணர்வோடு நான் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சியைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டேன். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகளிலே பிரதானமாக மாவட்டங்களுக்கும், பேருந்துகளுக்கும் தலைவர்களின் பெயர் வைக்கக்கூடாது என்று நாங்கள் எல்லாம், எல்லாக் கட்சிகளுமே கேட்டுக்கொண்டோம். அந்த அடிப்படையிலே நிச்சயமாகப் பெயரை வைக்க மாட்டோம் என்று இந்த அவையிலே வாக்குறுதி கொடுத்ததற்கு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு நீலகிரியிலே கடந்த காலத்திலே, தேயிலைக்கு அதிக விலை வேண்டுமென்பதற்காகப் போராடிய விவசாயிகள் ஆண்களும் பெண்களுமாகப் பல பேர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. அந்த வழக்குகளினால், அந்தப் பகுதி மக்கள் மிகப் பெரிய பாதிப்பிலே இருக்கிறார்கள், அதை நான் இங்கு பேசினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த நேரத்தில் இல்லாத காரணத்தினால் அதற்குப் பதிலுரை கிடைக்கவில்லை என்று நினைக்கின்றேன். அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறலாம் என்று ஏற்கெனவே உத்தரவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு நிமிடம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய நிறைவு

உரையிலே எடுத்துவைத்த கருத்துக்கள் அனைத்திற்கும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

கடந்த காலங்களிலே பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் மீது, மாவட்ட, மாநிலப் பொறுப்பாளர்கள்மீதெல்லாம் போடப்பட்ட அவதூறான, உண்மைக்கு மாறான வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தோம். அது உண்மையான வழக்கு அல்ல; அவதூறான வழக்கு; உண்மைக்கு மாறான வழக்கு என்ற காரணத்தினாலேயும், இடஒதுக்கீட்டுப் போராட்டத்திலே போடப்பட்ட வழக்குகளை தயவு செய்து நீங்கள் திரும்பப் பெற வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—55

அதைப்போலவே, நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தலிலே பண்ருட்டித் தொகுதியிலே பல கொலைகள் நடந்தன; குடும்பத்தோடு உயிர் இழந்தார்கள் ; அதுபற்றி சட்டமன்ற உறப்பினர் மரியாதைக்குரிய வேல்முருகன் அவர்கள் எடுத்து வைத்தார்கள். அந்தக் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிடுகின்ற வழக்குகள் எல்லாம் ஆராயப்பட்டு, வழக்குகளின் தன்மைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு, உண்மைக்குப் புறம்பாக ஆயிரக்கணக்கான விவசாயிகள்மீது போடப்பட்ட அந்த வழக்குகளை வாபஸ் பெற்றதற்காக, மாவட்ட மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேலும் இரண்டாவது கோரிக்கையாக, நீதிபதி ரத்தினசாமி அவர்கள் அந்த அவமானப்பட்ட இளைஞர்களுக்கு 33 இலட்சம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்க தீர்ப்பு அளித்தார்கள். அந்தத் தீர்ப்புக்கு முன்னாள் அரசு ஒரு பைசாவும் தரவில்லை. அந்த இளைஞர்கள் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.





அவர்களுக்கு அந்த 33 இலட்சம் ரூபாயை புரட்சித் தலைவி அவர்கள் தருமாறு இந்தச் சபையிலே உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் ஊரகப் பள்ளி மாணவர்கள் தொழிற்கல்வி பயிலுகிற அந்த இடஒதுக்கீட்டை உயர்த்தியதோடு அல்லாமல், அந்த மாணவர்கள் எல்லாம் 10 சதவீதம் மட்டுமே கட்டணம் கட்டினால் போதும் என்கிற ஒரு விதியை, மராட்டிய அரசு கொண்டு வந்திருப்பதுபோல் கொண்டுவர வேண்டும் என்கிற கோரிக்கையை நான் வைத்திருந்தேன். அது குறித்தும், அரசாணை 44—ஐ மீ

ண்டும் நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாகவும் பதிலளிக்க வேண்டுமாய் அன்போடு, பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே அவ்வப்போது நான் எழுந்து உறுப்பினர்கள் எழுப்பிய பல பிரச்சினைகளுக்கு உடனே பதில் தெரிவித்துவிட்டேன்.

ஆதிதிராவிடர் நலத் துறை ஜி.ஓ. எண் 44—ஐப் பற்றி எங்கள் நிலைப்பாடு என்ன என்பதை ஏற்கெனவே தெளிவாக நான் இந்த அவையில் அறிவித்துவிட்டேன். நிச்சயமாக அதைச் செயல்படுத்த எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்து இருப்பதால்தான், மீண்டும் அதை எனது பதிலுரையில் நான் சேர்த்துக்கொள்ளவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கிற மற்றொரு கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ம. அப்துல் லத்தீப் அவர்கள், அதோடு முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றோடு இந்தக் கூட்டத் தொடர் நிறைவுபெற்று அடுத்து, நிதிநிலை அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நாம் கூட இருக்கிறோம். அந்த நிதிநிலை

அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு முன்பு அரசினுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் நான் ஏற்கெனவே பல ஆண்டுகளாக வற்புறுத்திக் கொண்டிருக்கிற 2 கோரிக்கைகளை, நேற்றைக்கு முன்தினம்கூட வற்புறுத்தினேன்; குறிப்பாக எனது பகுதிக்குக் குடிநீரை அளிக்கக்கூடிய ஒரு திட்டம், வெள்ளைக்கல் அணைக்கட்டுத் திட்டம் — அது ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட திட்டம்; எனவே அந்தத் திட்டத்தையும், சந்தனத் தொழிற்சாலையை நிம்மியம்பட்டு பகுதியில் ஏற்படுத்த வேண்டும் என்பதையும் — அது நீண்ட காலத் திட்டம்; அதுவும் நிலுவையில் இருக்கிறது; — இந்த இரண்டையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவுப் பார்வைக்கு நான் வைக்கிறேன். நிதிநிலை அறிக்கை தயார் செய்யும்போது இதையும் இணைத்திட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

அதோடு நூற்றுக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்கள் காரணமில்லாமல் சிறைச்சாலைகளில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் குறிப்பிட்ட குற்றங்களைச் செய்தவர்களைப்பற்றி எனக்குக் கவலை இல்லை; அதற்குச் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு நான் தடையாக இருக்கமாட்டேன். அதைப்பற்றி நான் குறிப்பிடவில்லை. ஆனால், அப்பாவிகள் பல ஆண்டுகளாக, வழக்குகளே நடத்தப்படாமல் இன்றைக்கு சிறைகளிலே பல்வேறு காரணங்களினால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் விளக்கம் சொல்வதற்கு விரும்பவில்லை. அது —on merit— முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து, அப்பேர்ப்பட்ட அந்த இளைஞர்களைத் விடுதலை செய்வதற்கு அல்லது வழக்கு நடத்துவதற்கு; விடுதலை செய்யுங்கள் அல்லது வழக்கு நடத்துங்கள்; இந்த இரண்டிலே ஏதாவது ஒன்று செய்து, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த அநீதிக்கு ஆளாக்கப்பட்ட அந்த இளைஞர்களுக்கு நீதி வழங்க தயவுசெய்து, முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் கடந்த 14 ஆம் தேதியும் 15 ஆம் தேதியும் நடந்த





தீ விபத்து குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் C.B.C.I.D. விசாரணைக்கு உத்தரவிட்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தீ விபத்தில் இறந்தவர்கள் குடும்பத்தினருக்கு உதவித் தொகை 15,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தித் தந்ததற்காகவும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தீ விபத்தால் 500 குடும்பங்கள் வீடு வாசல்களை இழந்து இன்று அவர்கள் பாவம் நிர்க்கதியாக, நட்டாற்றில் விடப்பட்டவர்களைப்போல் நிற்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களில் இஸ்லாமியத் தோழர்கள், கூலித் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி, கருணை உள்ளத்தோடு, அவர்களின் குடும்பத்திற்கு 5000 ரூபாயாவது முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

[பேரவைத் தலைவர்] [2001 ஜுன் 1

"2001 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களால் 28—5—2001 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது."

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 2. அறிவிப்பு

### குழுக்களுக்குத் தேர்வு

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001—2002 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியாக வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. இரா. ஜீவானந்தம்
2. செல்வி சி. கனகதாரா
3. திரு. ஆர். சாமி
4. திரு. ப. மோகன்
5. திரு. சி. சண்முகவேலு
6. திரு. தங்க தமிழ்ச்செல்வன்
7. திரு. கு. அன்பழகன்
8. திரு. அ. பாப்பா சுந்தரம்
9. திரு. வை. பெருமாள்



2001 ஜுன் 1] [பேரவைத் தலைவர்]

10. டாக்டர் ப. வள்ளல் பெருமான்
11. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி
12. திரு. கா. கந்தசாமி
13. திரு. ஐ. கணேசன்
14. திருமதி டி. யசோதா
15. திரு. டி. மணி
16. திரு. லா. சந்தானம்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2001—2002 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கிறேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில், மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 196—ன்கீழ் திரு. இரா. ஜீவானந்தம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001—2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன.

1. டாக்டர் சி. விஜயபாஸ்கர்
2. திரு. ஆர். வைத்திலிங்கம்
3. திரு. செ.ம. வேலுச்சாமி
4. திரு. ப. இளவழகன்
5. திரு. ப. இராஜரெத்தினம்

6. திருமதி வளர்மதி ஜெபராஜ்

7. திரு. அ. மில்லர்

8. திரு. சி. சிவசாமி

9. திரு. ப. நீலகண்டன்

10. திரு. எஸ்.கே. வேதரத்தினம்

11. திரு. இரா. திருமாவளவன்

12. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்

13. திரு. ஜி.கே. மணி

14. திருமதி பூ. காசாம்பு

15. திரு. கே.சி. கருணாகரன்

16. திரு. ஜி. பழனிசாமி

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2001—2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்கு பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில், மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 204—ன்கீழ் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

பிற்பகல் 1—05

## (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001—2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:



1. திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி

2. திரு. எம்.சி. சம்பத்

3. திரு. ஆ.கு. முருகேசன்

4. திரு. ப.வெ. தாமோதிரன்

5. திருமதி செல்வி முருகேசன்

6. திரு. எஸ்.எஸ். ரமணீதரன்

7. திரு. எஸ். மகாலிங்கம்

8. திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்

9. திருமதி சி.எம். சூரியகலா

10. திரு. துரை கி. சரவணன்

11. திரு. சு. சிவராஜ்

12. திரு. க. பாரமலை

13. திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்

14. திரு. கி. பாரிமோகன்

15. திரு. வை. சிவபுண்ணியம்

16. திரு. ஆஸ்டின்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2001—2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கிறேன்.

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 213—ன்கீழ் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

# 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*5. 1999—2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், ஆண்டுக் கணக்குகளும். (1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*4. 1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 43/1995) கீழ் 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு வக்ஃபு விதிகள் வகுப்பது குறித்து பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் 16—10—2000 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.*

— —

222-390